மேலும் மாண்புமிகு ஜனாதிபதி, கௌரவ கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சர் ஆகியோரின் நல்லுரைகள், வழிநடத்தல், மற்றும் விவசாய அபிவிருத்தி அதிகார சபையில் வைத்துள்ள நம்பிக்கைக்கும் எனது நன்றியைப் பதிவு செய்து கொள்கின்றேன். அதே நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சு செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், கூட்டுத்தாபன அரச வங்கி மற்றும் தாபனங்களின் தலைவர்கள் ஆகியோர் அதிகார சபையின் தொழில்களை செவ்வனே நிறைவேற்ற வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றியை பதிவு செய்துகொள்கின்றேன்.

எனது முடிவுரையில் விவசாய அபிவிருத்தி அதிகார சபை இலங்கை கமக்காரர்களின் முன்னேற்றத்திற்காகவே தொழிற்படுகின்றது என்பதை அழுத்திக் குறிப்பிட விரும்புகின்றேன். விவசாயத்தில் வெற்றி காண்பது மக்களின் முயற்சியிலும் திட்டமிடுதலிலும் தங்கியிருந்தாலும் காலநிலையும் சாதகமானதாக இருத்தல் வேண்டும். காலநிலை மனித கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது என்பதை முது மொழியைத்தான் கூறமுடியும்.

அரச நீதி நிலைக்கட்டும்

ஆண்டவன் சந்தோஷமடையட்டும்

அகலுல் வானம் பொழியும்

வளம் கொழிக்கும், மக்களும் திருப்தியடைவர்.

ரஞ்சன் விஜயரத்ன,

தலைவர்.

விவசாய அபிவிருத்தி அதிகார சபை

மேற்கு மாகாணம் வருடாந்த அறிக்கை – 1981

1. பொது அறிவித்தல்/தொகுதிகள்

கம்பஹா மாவட்டம்

தொகுதி	வி. மு. ன் எண்ணிக்கை	நடவடிக்கைகள் ஆரம்பம்	நிலவிஸ்தீரணம் (ஏக்)	சனத்தொகை	விவசாயக் குடும்பங்கள்
தொம்பே	1	1.4.78	44,480	100,302	17,279
மிரிகம	1	1.5.78	38,463	105,717	16,226
டிவுலுப்பிற்றிய	1	1.4.78	54,400	96,822	19,058
அத்தனகலை	1	16.4.80	35,520	106,000	19,481
கம்பஹ	1	1.2.80	25,120	98,620	16,235
மினுவாங்கொடை	1	1.5.80	27,146	123,000	17,414
யா-எல	1	1.5.80	23,582	190,293	14,364
கட்டான	1	1.5.80	30,400	96,744	13,454
களனியா	1	15.3.81	4,840	133,565	5,507
பியகம	1	15.2.81	13,760	93,594	8,369
மஹர	1	1.10.81	26,880	108,579	11,208
களுத்துறை மாவட்டம்					
மத்துகம	1	1.5.81	193,250	108,645	15,684
அகலவத்தை	1	1.5.81	132,480	110,992	20,233
பண்டாரகம	1	15..5.81	33,600	103,000	14,800
புளத்சின்கள	1	2.1181	72,960	94,124	16,015
ஹொரண	1	2.11.81	48,000	98,377	14,720

களுத்துறை மாவட்டத்திலுள்ள மத்துகம, அகலவத்தை பண்டாரகம, புளத்சின்கள, ஹொறண ஆகிய 5 புதிய தொகுதிகள் இவ் வருடத்தில் பொறுப்பேற்கப்பட்டன. இத் தொகுதிகள் கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. களுத்துறை மாவட்டம் பொறுப்பேற்கப்பட்டவுடன் அம்மாவட்டத்திற்கொரு பிரதி மாகாணப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டார். கம்பஹா பிரதி மாகாணப் பணிப்பாளரின் சேவைகள் நிறுத்தப்பட்டதுடன் அப பதவி நியமனம் தகுந்த அபேட்சகர் காணப்படாமையால் தாமதமாயிற்று.

கம்பஹா, களுத்துறை மவட்டங்களிற்கு பிரதி மாகாணப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டதுடன் மாகாண நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்டது. இது சம மாவட்டங்களுள் விவசாய நடவடிக்கைகளின் நெருங்கிய இணைப்பையும் சிறந்த மேர்பார்வையையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமாய் இருந்தது

2. நிர்வாகப் பிரிவுகள்/விரிவாக்கல்/தொகுதிகள்

தொகுதி	ப. உ.	டி. உ. வி. யோ.		க. வி. சே.		சீ.ஏஏ		லி. ஓ.	
				சீ. உ. ஓ.	உ.	ஏஎஸ்	ஐஉ		அன். சு. ஓ.
கம்பஹா மாவட்டம்									
தொம்பே	51	2	2 2	5	2	—	—	1 —	—
மிரிகம	51	3	3 3	7	2	1	1	— —	—
டிவுலுப்பிற்றிய	42	2	2 2	7	—	1	1	1 1	—
அத்தனகலை	55	2	2 1	4	2	1	1	2 1	—
கம்பஹா	36	2	2 2	—	1	1	2	2 1	—
மினுவாங்கொட	43	3	3 2	5	3	1	2	2 1	—
யா-எல	20	1	1 1	2	1	1	1	1 —	—
கட்டான	20	2	2 2	4	2	1	1	1 1	—
களனியா	17	1	1 1	1	1	—	—	— 1	—
பியகம	19	1	2 1	3	1	1	1	— 1	—
மஹர	32	3	3 2	12	2	1	1	1 1	—
களுத்துறை மாவட்டம்									
மத்துகம	37	3	3 3	7	1	1	2	1 1	4
அகலவத்தை	46	3	3 3	9	1	1	1	1 —	5
பண்டாரகம	35	3	3 3	11	1	1	1	2 —	1
புளத்சின்கள	38	3	3 3	11	1	1	1	1 1	3
ஹொறண	27	2	2 2	7	1	1	1	2 1	3

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

மேற்கு மாகாணம் வருடாந்த அறிக்கை – 1981

கமநல சேவைகள் திணைக்களம்

தொகுதி ரீதியாக பிராந்திய உத்தியோகதர்களுக்கான தேவைகள் இவ் வருடத்தில் நிறைவேற்றப்பட்டன. புறக்கணிக்கப்பட்ட பல நிலையங்களில் ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒரு பிராந்திய உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டார்.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிற்கும் ப. உ. நியமிக்கப்பட்டதுடன் பொதுவாக 400 — 600 வரையிலான விவசாயக் குடும்பங்களிற்கு ஒரு ப. உ. நியமிக்கப்பட்டார்.

அத்தனகலைத் தொகுதியிலுள்ள நித்தம்புவ நிலையத்தைத் தவிர ஏனைய எல்லா நிலையங்களிலும் கமநல சேவைகள் குழுக்களும், விவசாயிகள் பிரதிநிதிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந் நியமனங்கள் விரைவில் இறுதியாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தலைவரின் சிபாரிசுகளிற்கிணங்க ஒவ்வொரு நிலையங்களிலும் ஒருகாவலாளி, எழுதுவினைஞர், தொழிலாளி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வருடம் ஒவ்வொரு நிலையத்திற்கும் உழவு யந்திரம்/றெயிலர் ஆகியன அளிக்கப்பட்டன. சில நிலையங்கள் தமது குழுக்களிற்கு நிதியைச் சேமிப்பதற்காக இச் சொத்துக்களின் கூடிய பயனைப் பெறும்போது ஏனைய நிலையங்கள் அவற்றின் பி. உ.ன் செயறபாடினமை காரணமாக

தேயிலை சிறு நில உடைமைகள் அதிகார சபை

தேயிலை சிறு நில உடைமைகள் அதிகார சபையின் விரிவாக்கல் உத்தியோகத்தர்கள், களுத்துறை மாவட்டத்தில் தேயிலை சிறு நில உடைமையாளர்களுக்கு சேவை புரிவதற்குப் போதியளவில் காணப்படுகின்றனர்.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம்.—

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களமானது தவறாது நினைவுபடுத்தப்பட்டபோதும் தேவையான விரிவாக்கல் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்குத் தவறிவிட்டது. ஈரவலையத்திலுள்ள ஒவ்வொரு தொகுதியிலும் ஆகக் குறைந்தந்து ஒரு விரிவாக்கல் உத்தியோகதராவது நியமிக்கப்படல் அவசியமாகும். தற்போது குறிப்பிட்ட பகுதிகளில், 4 தொகுதிகளை ஒரு விரிவாக்கல் உத்தியோகத்தர் கவனிக்கிறார்.

மிருக வளர்ப்பு, சுகாதார திணைக்களம்.—

இக்காலப் பகுதியில், இச் சேவைகளில் அதிக முன்னேற்றம் காணப்படவில்லை. கால்நடைத் தொழில், மிருக வளர்ப்பு சுகாதாரத் திணைக்களத்தினால் தகுந்த சேவை அளிக்கப்படாமையாலும், மிருக உணவு கிடைக்காமையினாலும் மிகவும் பின்தங்கிய நிலையை அடைந்துள்ளது.

பிரதான பயிர்ச் செய்கைகள்.

கம்பஹா மாவட்டம்

தொகுதி	நெல்	தென்னை (ஏக்)	றப்பர்	தேயிலை
தொம்பே	6,133	16,223	5,910	—
மிரிகம	5,781	25,646	2,420	—
டிவுலப்பிட்டி	5,132	36,434	2,992	—
அத்தினகலை	4,910	22,690	1,383	—
கம்பஹா	6,060	91,030	481	—
மினுவாங்கொட	5,068	20,709	1,244	—
யா-எல	2,811	5,786	186	—
கட்டான	2,447	16,360	227	—
களனியா	656	1,093	8	—
பியகம	2,509	7,103	543	—
மஹர	4,140	14,160	663	—
	45,647	175,334	16,416	—
களுத்துறை மாவட்டம்				
மத்துகம	9,941	2,256	12,844	247
அகலவத்தை	13,681	1,595	26,500	2296
பண்டாரகம	7,651	4,494	6,666	18
புளத்சின்ஹள	8,730	2,730	27,144	3824
ஹொறன	6,779	4,344	287	1222
மொத்தம்	92,429	190,753	89,570	7607

சமூக சேவைகள் நிலையங்கள் பொதுவாக நன்கு பேணப்படுகின்றது. இந்த நிலையங்களின் கணக்கு நடவடிக்கை முற்றும், நிர்வாகமும் திருப்திகரமாயுள்ளன

கமத்தொழிற் திணைக்களம்

சகல தொகுதிகளிலும் விவசாயப் போதனாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் அநேக பகுதிகளில் க. வி. சே.கள் நியமிக்கப்பட்டுவிட்டனர். 29 மார்ச் 1979 உலக வங்கி மதிப்பீட்டு அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டதற்கிணங்க முழுத் தேவைகளும் பூரணப்படுத்தப்படவில்லை. திணைக்களமானது புதியவர்களை சேர்ப்பதுடன், அவர்களை நியமிப்பதற்கான பயிற்சியையும் அளிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

பழப் பயிர் மாணியத் திட்டத்தின் அறிமுகத்துடன், பண்ணை மட்டத்தில் மேற்பார்வையைப் பலப்படுத்துவதற்கு இந்தியமனங்களை விரைவுபடுத்தல் முக்கியமானதாகவுள்ளது.

மரப்பயிர் பிரிவு — விரிவாக்கல் உத்தியோகத்தர்

தெங்குப் பயிர்ச் செய்கைச் சபை—

தெங்குப் பயிர்ச் செய்கைச் சபை குறிப்பிட்ட பகுதிகளில் மேலதிக முகவர்களை நியமிப்பதன் மூலம் தனது உத்தியோகத்தர்களைப் பலப்படுத்தியுள்ளது. இத் திணைக்களம், மேற்கு மாகாணத்தில் உள்ள தொகுதிகளில் நல்ல அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளதுடன், வி. அ. அ. சபையின் நடவடிக்கைகளுக்கு தனது முழு அளவிலான ஆதரவினையும் நல்கியுள்ளது. விசேடமாக கம்பஹா மாவட்டம், தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையினால் உருவாக்கப்பட்ட இலக்குகளைத் தாண்டுவதற்கு எண்ணியுள்ளது. தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு, மேலதிக உதவி உத்தியோகத்தர்களையும், போக்குவரத்து வசதிகளையும் அளிப்பதனால் இன்னும் சிறந்த விளைவுகளைப் பெறமுடியும்.

றப்பர் ஆராய்ச்சி சபை.—

15, எப்ரல், 1980ன் சிறு நில உடைமையாளர் றப்பர் புனரமைப்புத் திட்டம் தொடர்பாக உலக வங்கி மதிப்பீட்டு அறிக்கையின் சிபாரிசுகளிற் கிணங்க றப்பர் ஆராய்ச்சி சபையானது மேலதிக விரிவாக்கல் உத்தியோகத்தர்களை நியமிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இது சிறு றப்பர் நில உடைமையாளருக்கு அதிகளவில் உதவி புரியும்.

(4) நெல்

கம்பஹா மாவட்டத்தில் நெற் பயிர்ச் செய்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. இவ் வருடத்தில் சிறுபோகப் பயிர் விளைவு குறிப்பிட்ட சராசரியையும் மிஞ்சியுள்ளது. விளைவுகளின் முழுமையான அதிகரிப்பு 25% — 30% வரை எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. நீர்ப்பாசன, வடிகால் திட்டங்களின் மீளமைப்பு, புதிய திருந்திய விதைவகைகளின் பாவனை, உகந்த பாரம்பரிய செயல்முறைகள் ஆகியவற்றின் காரணமாகவே இப் பிரிவில் இத்தகைய வளர்ச்சி காணப்படுகிறது. கமத்தொழிற் திணைக்களம் இவ் விளைவுகளைப் பெறுவதற்கு அதிக முயற்சியுடன் சேவை செய்துள்ளது.

விவசாயிகளுக்கு அவசியமான அறிவினை உருவாக்கும் நோக்குடன் பாரம்பரிய செயல்முறைகளின் சகல தோற்றங்களிலும் பல வயல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை விரும்பிய விளைவுகளை பெற்றுக் கொடுத்துள்ளன. டிவலுப்பிற்றிய தொகுதியிலுள்ள யா-எல, தொம்பே மற்றும் சில குறிப்பிட்ட பகுதிகளில் அவதானிக்கத்தக்க அம்சம் என்னவெனில் நெல் விளைச்சலில் ஏற்பட்ட அபிவிருத்தியேயாகும். இப்பகுதிகளின் விளைச்சல் 80%க்கு அதிகரித்துள்ளது. கமத்தொழிற் திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவு, கம்பஹா மாவட்டத்தில் பயனுடையதான பல மாற்றியமைக்கப்பட்ட ஆராய்ச்சி சோதனைகளை மேற் கொண்டது.

(5) தெங்கு

தென்னம் நாற்றுமேடைகள்

கம்பஹா மாவட்டம்

	நாற்றுமேடை விஸ்தீரணம்/ ஏக்கர்	வழங்கப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை
தொம்பே	10	120,000
	3	12,000
டிவலுப்பிற்றியா	5	54,447
அத்தினகலை	—	18,500
கம்பஹா	—	10,000
மினுவாங்கொட	2	15,900
யாஎல	5786	2,767
கட்டான	25000	—
பியகம	—	3,600
ஞத்துறை மாவட்டம்		
அகலவத்தை	—	4,200
பண்டாரகம	—	2,873
புளத்சின்ஹள	—	3,095

தென்னங்காணிச் சொந்தக்காரர்கள் தமது காணிகளின் புனரமைப்பில் அதிக அக்கறையை வெளிப்படுத்தியுள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் தென்னம் நாற்றுக்களின் விநியோகத்தில் ஓர் குறிப்பிட்டளவு அதிகரிப்பு பதியப்பட்டுள்ளது. தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையின் பல்வகை மானியத் திட்டங்களின் கீழான புனரமைப்பு வேலைக்கென அதிகளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. ஆனால், உத்தியோகத்தர்களால் இவ்விண்ணப்பங்களுக்கு ஈடுகொடுக்க முடியாதுள்ளது சில பகுதிகளில் மானியம் செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதால், திணைக்களம் இதனை விரைவுபடுத்துவதற்கு உகந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஞத்துறை மாவட்டத்தில் நாற்றுமேடைகள் நாற்றுக் கணிப்பு வெளிப்படையாக உள்ளது. வி. அ. அ. சபையினால் அளிக்கப்படும் ஒத்துழைப்பின் உதவியுடன் இங்குள்ள காணிச் சொந்தக்காரர்கள் கம்பஹா மாவட்டத்திலுள்ளதைப போல் செயற்படுவர்கள் என நம்பப்படுகிறது.

கம்பஹா மாவட்டத்திலுள்ள நாற்றுமேசைகள் நாற்றுக்களுக்கான அதிகரித்த கேள்வியை அளிக்க முடியாதிருப்பதுடன், தேவைகளின் ஒரு பகுதி வெளியிலிருந்து பெறப்படவேண்டியுள்ளது. இந்நாற்றுமேடைகள் மவட்டத்தின் தேவைகளைப் பூரணப்படுத்தக் கூடிய தன்மையைக் கொண்டுள்ளன. சபையானது ஒவ்வொரு பயிர்ச் செய்கைப் பருவத்திற்குரிய தேவைகளை மதிப்பிடுவதுடன், போதியளவு விதைகளையும் வழங்க வேண்டும். இங்குள்ள பிரதான குறைபாடு என்னவெனில், விதைகளின் குறைந்த விநியோகமாகும்.

. றப்பர் தொகுதி	பெறப்பட்ட மானிய அனுமதிப்பத்திரத்தின் எண்ணிக்கை	மீள்நடுகை விஸ்தீரணம் (ஏக்)	புதிய நடுகை விஸ்தீரணம் (ஏக்)
மிரிகம	10	12	—
அத்தனகலை	95	106	64
கம்பஹா	5	10	5
கட்டான	—	227	—
மஹர	19	17	5
களுத்துறை மாவட்ட			
மத்துகம	309	440	37
அகலவத்தை	641	685	—
பண்டாரகம	143	85	9
புளத்சின்ஹள	641	984	143
ஹொரண	361	220	94

அநேகமான றப்பர் சிறு நில உடமையாளர்கள் விசேடமாக களுத்துறை மாவட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ளனர். றப்பர் பயிர்ச் செய்கையாளர் சரியான நடுகைத் தொழில் நுட்பங்கள், பால் வெட்டல், தமது சொத்துக்களின் முகாமை நடவடிக்கைகள் ஆகியன தொடர்பாகத் தேர்வுடையவர்களாகக் காணப்படவில்லை. எனவே வி. அ. அ. சபை பயிர்ச்செய்கை தொடர்பாகவும், இப்பயிர்ச் செய்கையின் கீழ் அதிகளவு பரப்பளவுகளைக் கொண்டு வருவதற்கான விரைவான புனரமைப்பு வேலைகள் தொடர்பாகவும் சிறிய றப்பர் நில உடைமையாளர்களுக்கு உதவிபுரியும் ஒரு நிட்டத்தை ஏற்பாடு செய்வதற்காக ஒரு கூட்டத்தை ஒழுங்குபடுத்தியது. இக்கூட்டம் பயிர் செய்வோர், களுத்துறை மாவட்ட பா. உ., தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர், றப்பர் கட்டுப்பாட்டாளர், றப்பர் ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர்கள், றப்பர் கைத்தொழிலுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் ஆகியோரின் இணைப்புடன் ஆரம்பிக்கப்பட்டது.

களுத்துறை மாவட்ட அமைச்சரைத் தலைவராகவும், வி. அ. அ. சபையின் மாகாணப் பணிப்பாளரை நடாத்துநராகவும் கொண்ட ஒரு வழிகாட்டிக் குழு நியமனம் செய்யப்பட்டது. இக்குழு களுத்துறை மாவட்டத்தில் ஏற்கனவே செயற்படத் தொடங்கிவிட்டது.

7. தேயிலை

	தேயிலை (ஏக்கர்கள்)
மத்துகம	247
அகலவத்தை	2,296
பண்டாரகம	18
புளத்சிங்கல	3,824
ஹொரண	1,222
மொத்தம்:	7,607

உயர்ந்த கூலி, தேயிலையின் குறைந்த விலைகள் ஆகியன காரணமாக அநேக தேயிலை சொத்துக்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. அரசு தேயிலைக் கைத்தொழில் சிறு நில உடைமையாளர்களின் புனரமைப்பு ஆகியன தொடர்பாக கருத்துள்ள நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

களுத்துறை மாவட்டம்

மத்துகம	16	16	—
அகலவத்தை	78	58	—
பண்டாரகம	88	98	—
புளத்சிங்கல	29	33	— 18
ஹொரண	31	61	— 11

உப உணவுப் பயிரின் கீழான பரப்பளவில் ஒரு அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. கம்பஹா மாவட்டத்தில் இது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். மஞ்சள், இஞ்சி ஆகியவற்றை சந்தைப்படுத்தல், இவற்றின் இறக்குமதி காரணமாக விவசாயிகளுக்கு ஒரு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை விவசாயி மஞ்சளைப் பதனிடும் தொழில் நுட்பம் பற்றி சிறந்த அறிவற்றவராயிருப்பதுடன், இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திப் பொருளுடன் போட்டிபோட முடியாத நிலையிலுள்ளார். கமத்தொழிற் திணைக்கத்தின் உதவியுடன், கம்பஹா மாவட்டத்தில் மஞ்சளைப் பதனிடும் சரியான தொழில்நுட்பம் பற்றிய விளக்கங்கள் நடாத்தப்பட்டன.

சிறு ஏற்றுமதி பயிர்கள் தொகுதி	வழங்கப்பட்ட பயிர்களின் எண்ணிக்கை		
கம்பஹா மாவட்டம்	கராம்பு	மிளகு	கோப்பி
தொம்பே	381	9,547	2,995
மிரிகம	5,825	25,233	22,422
டிவுலுப்பிட்டிய	2,101	4,471	38,924
அத்தனகலை	3,117	8,439	13,970
கம்பஹா	1,000	2,500	10,000
மினுவாங்கொடை	5,556	19,953	22,634
யாஎல	—	2,030	15,475
கட்டான	100	8,500	24,000
களனியா	7,500	50	2,050
பியகம	1,500	1,500	1,500
மஹர	1,500	1,500	1,500

களுத்துறை மாவட்டம்			
மத்துகம	1,725	2,140	2,430
அகலவத்தை	1,600	1,900	215
பண்டாரகம	625	1,500	800
புலத்சிங்கள	972	2,750	20
ஹொரண	475	800	100

அநேக தென்னங் காணிகளில் இப்பயிர்களும் கலந்து பயிரிடப்பட்டுள்ளன. பயிர்களின் பற்றாக்குறை இருந்த போதும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் செய்கை பண்ணப்படு கின்றன. நடுகைப் பொருட்களின் அதிகரித்த கேள்வி காரணமாக பல புதிய தாற்று மேடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலதிக விரிவாக்கல் உத்தியோகத்தரின் நியமனத்துடன் பயிர்ச்செய்கை விஸ்தீரணம் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இ. பழப்பயிர்கள்:

கம்பஹா மாவட்டம்

பயிரிடப்பட்ட விஸ்தீரணம் (ஏக்கர்)

தொகுதிகள்	அன்னாசி	கொடித்தோடை	வாழை
தொம்பே	145	18	360
மிரிகம	600	100	1,470
டிவலுப்பிட்டிய	2,350	225	1,420
அத்தனகலை	522	136	1,343
கம்பஹா	125	2	425
மினுவாங்கொடை	765	80	800
யாஎல	157	7	426
கட்டான	170	—	635
பியகம	73	17	452
கன்னியா	4	1	345
மஹர	315	15	380
களுத்துறை மாவட்டம்			
மத்துகம	90	265	323
அகலவத்தை	95	2,067	450
பண்டாரகம	20	125	380
புளத்சிங்கல	44	424	543
ஹொரண	80	47	373

மேற்கு மாகாணத்தில் பழப்பயிர்ச்செய்கை அதிக பிரபல்யத்தைப் பெற்றுள்ளது. விசேடமாக கொடித்தோடைக்குப் பலமான சந்தை காணப்படுகிறது. இப்பயிர்ச்செய்கை படிப்படியாக கம்பஹா, களுத்துறை மாவட்டங்களிற்குப் பரவலாக்கப்படுகின்றது. மேற்கு மாகாணத்தில் கொடித் தோடை, அன்னாசி, மங்குஸ்டீன், றம்புட்டான் ஆகியவற்றின் பயிர்ச்செய்கைக்கென அறிமுகப்படுத்தப்பட்ட பழப்பயிர் மாவியத் திட்டத்தின் உதவியுடன் இப்பயிர்களின் கீழ் அதிகளவு பரப்பு கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. வாழை இப்பகுதியில் அதிகளவில் செய்கை பண்ணப்படுவதால், வாழையையும் இத்திட்டத்துள் சேர்க்கும்படி இவ்வதிகார சபை கேட்டுள்ளது. இப்பயிர் 1982ல் சேர்த்துக் கொள்ளப்படும்.

மேற்கு மாகாணத்திலுள்ள அரச பண்ணைகளில் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன. இத்துடன் கேள்வியை சந்திப்பதற்கென தனியார் நாற்று மேடைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஈ) காய்கறிகள்:

கம்பஹா மாவட்டத்திலுள்ள மீரிகம, தொம்பே, டிவலுப்பிற்கிய களனியா பகுதிகளில் காய்கறிச் செய்கையில் படிப்படியான முன்னேற்றம் காணப்படுகிறது. ஆரம்பத்தில் காய்கறிச் செய்கை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நடைபெற்றது. இங்கு வெள்ளம் வடிந்த பின்னரே காய்கறிச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இப் பயிர்ச்செய்கை உயர் நிலப் பகுதிகளுக்கும், சிறுபோகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத நெல் வயல்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. நீர் இடைக்கக்கூடிய சில பகுதிகளில் காய்கறி, தென்னையுடன் கலந்து செய்கை பண்ணப்படுகிறது.

காய்கறிச் செய்கையாளர்களுக்குப் போதியளவு விதை நடுகைப் பொருட்கள், நீர்ப்பம்பிகள், ஆலோசனை ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. விவசாயிகள் தமது உற்பத்திகளுக்கு நியாயமான விலையை தனி விற் பனையாளர்களிடமிருந்தும், அரச அங்கீகாரம் பெற்ற நிலையங்களிலிருந்தும் பெற்றுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில், காய்கறிச் செய்கையுடன் கிழங்குச் செய்கைக்கும் ஊக்கமளிக்கப்படுகிறது. கமத் தொழிற் திணைக்களத்தின் உதவியுடன் கிழங்குப் பயிர்ச் செய்கையை விரிவுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

9. மிருக வளர்ப்பு

மிருகவளர்ப்பு, சுகாதாரத் திணைக்களம், மிருகவளர்ப்பு விவசாயிகளுக்கு அவசியமான சேவைகளை வழங்கத் தவறிய போதும், வி. அ. அ. சபையின் சில முகாமையாளர்கள் கூட்டுறவு முறையில் கால்நடை உற்பத்திகளைப் பெற்றுக்கொண்டதன் மூலம் கால்நடைத் தொழிலை ஆரம்பித்துள்ளனர். இக்கூட்டுறவுத் தாபனங்கள் தேவையான மிருக உணவை எண்ணெய், கொழுப்பு கூட்டுத் தாபனத்திலிருந்தும் பீ.சி.சி. லிமிட்டட்டிலிருந்து நேரடியாகப் பெறுகின்றன. அத்துடன் இவ்வுணவு உண்மையில் கால்நடை விவசாயிகளிடையேதான் வழங்கப்படுகின்றதா என்பதும் உறுதிப்படுத்தப்படுகிறது. அவர்கள் உற்பத்தியின் சேகரிப்பும், சந்தைப் படுத்தலும், மிருகங்களின் இனவிருத்தி ஆகியன தொடர்பாகவும் ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளனர்.

மற்றைய பகுதிகளிலுள்ள அநேக சிறிய கால்நடை விவசாயிகள் பால், முட்டை ஆகியவற்றின் குறைந்த விலை காரணமாகவும் உணவைப் பெறுவதில் இடையூறுகள் காரணமாகவும் இக்கால்நடை வளர்ப்பை கைவிட்டு விட்டனர்.

கால்நடை உற்பத்தி வீழ்ச்சியினால் பால் சேகரிப்பு நிலையங்களும் குறைந்த அளவில்தான் செயற்படுகின்றன.

(10) தேனி வளர்ப்பு:

தொம்பே, டிவலுப்பிற்றியா, மீரிகம தொகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட தேனி வளர்ப்புத் திட்டங்கள் நல்ல வளர்ச்சியைக் காட்டியுள்ளன. ஏனைய பகுதிகளிலும் தேனி வளர்ப்பைத் தூண்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(11) நீர்ப்பாசனம்:

கம்பஹா மாவட்டம்

	குளங்கள்			அணைக்கட்டுகள்		
	A	B	C	A	B	C
தொம்பே	7	57	—	105	14	3
மீரிகம	4	2	3	125	5	—
டிவலுப்பிட்டிய	—	4	16	40	64	40
அத்தனகலை	5	14	3	26	50	8
கம்பஹா	—	—	—	23	18	6
மினுவாங்கொடை	1	1	—	55	31	—
யாஎல	—	3	—	11	11	7
கட்டான	—	1	1	31	5	2
களனியா	—	—	—	6	1	1
பியகம	—	3	—	—	35	—
மஹர	2	7	15	25	11	4

'A' வகை—செயற்படும் நிலையில் உள்ளன

'B' வகை—சிறிய திருத்தம் அவசியம்

'C' வகை—புனரமைக்கப்படவேண்டிய நிலையில் உள்ளன.

கம்பஹா மாவட்டத்தில், நீர்ப்பாசனத் திணைக்களத்தால் பெரிய நீர்ப்பாசனம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வருடத்திற்கான திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. தலைவரின் தொகுதி ரீதியான விஜயத்தைத் தொடர்ந்து கமத்தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சினால் அளிக்கப்பட்ட குறைநிரப்பு நிதியின் உதவியுடன் மேலதிக வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மேலதிக வேலை மழையினால் பூரணப்படுத்தப்பட முடியாதுள்ளது. சிறிய நீர்ப்பாசனம் தொடர்பான வளர்ச்சி குறைவாகவே உள்ளது. இந்நிலை மதிப்பீடுகளை ஆக்குவதில் ஏற்பட்ட தாமதம், ஒப்பந்தக்காரர் வசத்தவறியமை, திறமையுடைய வேலையாட்கள் கிடைக்கப்பெறுமை ஆகியவற்றினால் ஏற்பட்டது. கம்பஹா மாவட்டத்தில் நீர்ப்பாசன/வடிகால் அமைப்பின் மீளமைப்பில் ஏற்பட்டுள்ள விருத்தி திருப்திகரமானதாயிருக்கிறது. இதனால் நெற்பயிர்ச் செய்கையிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் நீர்ப்பாசன/வடிகால் திட்டங்கள் வருந்தத்தக்க நிலையில் காணப்படுகின்றன. இது தொடர்பாக வி. அ. அ. சபையினால் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 1982ல் இவ்வமைப்பின் மீளமைப்பு வேலைகளைச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ரத்னபுரியத்தில், நீர்ப்பாசன/வடிகால் திட்ட மீளமைப்பு வேலையின் பெரும்பாகத்தை செய்து முடிக்கும் நோக்குடன் இவ்வேலை ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான உலர் கால நிலை இடைவேளையின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனினும் சில திணைக்கள ரீதியான தாமதங்களால் இது சாத்தியமானதாகவில்லை. சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் உலர் காலநிலையின் ஆரம்பத்துடன் இவ்வேலையைச் செய்வதற்கு வேண்டிய மாற்றங்களை ஏற்படுத்துமென நம்பப்படுகிறது.

12. உரம்

உரத்தின் பற்றாக்குறை தொடர்பாக எத்தொகுதிகளிலிருந்தும் எவ்வித முறைப்பாடும் செய்யப்படவில்லை. உரமானியத்தைக் குறைத்தமையினால் உரப்பாவனையும் குறைவாகக் காணப்பட்டது. நெல் விலை அதிகரிப்பினால் நெல் உரத்தைப் பொறுத்தவரையில் இந்நிலை ஏற்படவில்லை. ஆயினும் தென்னை உரப்பாவனையில் வீழ்ச்சி காணப்பட்டது.

(13) மண்ணை வலுவும் யந்திர உபகரணங்களும்:—

வருடத்தில் வழங்கப்பட்ட உபகரணங்கள

தொகுதி	கைதெளி கருவிகள்	தெளிதுவி விதை கருவிகள்	இரண்டு சக்கர உழவு யந்திரம்	நீர்பம்பிகள்
கம்பஹா மாவட்டம்				
தொம்பே	68	—	3	1
மீரிகம	120	—	—	1
டிவலுப்பிட்டிய	—	—	2	—
அத்தனகலை	143	—	5	12
கம்பஹா	50	2	3	10
மினுவாங்கொட	18	2	—	8
யாஎல	—	—	—	—
கட்டான	53	—	4	18
களனியா	—	—	—	—
பியகம	—	—	—	1
மஹர	59	—	—	—

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை, கிராமிய மட்டத்தில் பண்ணை வலுவினையும், யந்திர உபகரணங்களையும் வழங்கியதன் மூலம் ஒரு பொருள் நிறைந்த கடமையை ஆற்றியுள்ளது. இவை விவசாயிகளுக்கு சலுகை விலையில் கிடைக்கப்பெற்றன. தெளிகருவிகள், உழவுயந்திரங்கள், நீர்ப்பம்பிகள் ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்கான கடன் வசதிகள் தொடர்பான ஏற்பாடுகளும் அரச வங்கிகளுடன் செய்யப்பட்டுள்ளது.

மண்வெட்டிகள், விதைகருவிகள், களைகட்டும் கருவிகள், நாற்று நடுகை கருவிகள் போன்ற ஏனைய விவசாய உபகரணங்களும் கமநல சேவைகள் நிலையங்கள் மூலம் கிடைக்கக் கூடியதாக உள்ளது.

விவசாயக் கடனும், காப்புறுதியும்:

வி.அ.அ. சபை அரச வங்கிகள் மூலம் விவசாயக்கடன் பெறுவதை இலகுவாக்கி உள்ளது. வி.அ.அ. சபை கடனை இலகுவாகப் பெறுவதற்கு, கிராமிய விவசாயிகளுக்கு உதவி புரிந்துள்ளது. இன்னும் கவனிப்பைத் தேவைப்படுத்தும் ஒரு அம்சம் என்னவெனில், வழங்கப்பட்ட விவசாயக்கடனை முறையாக உபயோகிக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தும் பயனுள்ள மேற்பார்வையாகும்.

விவசாயக் காப்புறுதியைப் பொறுத்தவரையில் விவசாயிக்கு அளிக்கப்படும் சேவை திருப்திகரமானதாகவில்லை.

(14) பயிற்சி

வி.அ.அ. சபை விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட ஏனைய திணைக்களங்களின் உதவியுடன் விவசாயப் பயிற்சியையும், விளக்கத்திட்டங்களையும் தீவிரமாக்கியுள்ளது. இத்திட்டங்கள் விவசாய உற்பத்தியில் நவீன தொழில் நுட்பங்கள், பாரம்பரிய செயல்முறைகள் ஆகியவற்றின் சகல தோற்றங்களையும் உள்ளடக்கியுள்ளது. பயிற்சித் திட்டங்களிற்கு மேலதிக உத்வேகத்தைக் கொடுக்கும் அம்சமாக விளக்க அமைப்புக்கள் காணப்படுகின்றன.

வி.அ.அ. சபை இவ்வருடத்தில் பொறுப்பேற்கப்பட்ட தொகுதிகளில் ப. உ.கும் தனது பயிற்சித் திட்டங்களைத் தொடர்ந்து அளிக்கின்றது. இவற்றுடன் ஏற்கனவே பொறுப்பேற்கப்பட்ட தொகுதிகளுக்கான புதிய திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன. திட்டங்கள் சிறப்பாக அமுலாக்கப்படுவதுடன், விரும்பிய பயனையும் இவை அளிக்கின்றன. இக்காலப் பகுதியில் நியமிக்கப்பட்ட விவசாய முகாமையாளர்களுக்கு கன்னெறுவவில் சேவைக்காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(15) பொது

தலைவர் இவ்வருடத்தில் ஒவ்வொரு தொகுதியையும் சென்று பார்வையிட்டார். அவருடைய அறிக்கைகளில் ஒவ்வொரு தொகுதிக்குமான அபிவிருத்தி பற்றிய வழிகாட்டல்கள் குறிப்பிடப்பட்டுள்ளனன. வி.அ.அ. சபையானது இலங்கையின் விவசாய அபிவிருத்தியிலும், கிராம விவசாயிகளுக்கு வேண்டிய நன்மைகளை அளிப்பதிலும் கருத்துள்ள பங்கினை வகித்துள்ளது. விவசாயம் சம்பந்தப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்களிடையே அர்ப்பணிப்பு உணர்வு, அறிவுப் காணப்படுகிறது. கம்பஹா மாவட்டத்தில், சகல திணைக்கள உத்தியோகத்தர்களிடையேயும் புரிந்துகொள்ளும் தன்மையும், கூட்டாக செயற்படும் குணமும் காணப்படுகின்றன.

கமநல சேவைகள் திணைக்களத்திலுள்ள அதிகாரிகள் தமது சூழ்நிலையிலுள்ள கிராம விவசாயியை சென்று பார்வையிடாமையால், இத்திணைக்களத்தின் சக்கரங்கள் தொடர்ந்தும் மெதுவாகச் சுழல்வது வருத்தத்திற்குரிய விடயமாகும்.

முடிவாக தலைவரால் எனக்கு அளிக்கப்பட்ட வழிகாட்டலுக்கும், ஆலோசனைக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இக்காலப் பகுதியில் இத்தகைய வினைவுகளை நாம் பெற்றுக்கொள்வதற்குத் தமது ஒத்துழைப்பை நல்கிய சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி மாகாணப் பணிப்பாளர்கள், விவசாய முகாமையாளர்கள், கீழ் உத்தியோகத்தர்கள், ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு எனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்வரும் வருடங்களை மறக்க முடியாத வருடங்களாக, உற்பத்தி நிறைந்த வருடங்களாக ஆக்குவதும், சிறந்த விவசாய நடவடிக்கைகள் மூலம் எமது தாய் நாட்டை செழிப்புடையதாக்குவதுமே எமது நோக்கமாகும். விவசாயமானது, எமது நாட்டின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக இருந்ததுடன், இப்போதும், வரப்போகும் ஆண்டுகளிலும் அவ்விதமே விளங்கும். வி.அ.அ. சபையில் கடமை புரியும் நாம், இத் தேசிய சவாலை எதிர் நோக்கியுள்ளோம்.

ஷெறன் எஸ். டி. அல்விஸ்,
மாகாணப் பணிப்பாளர்,
மேற்கு மாகாணம்.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

கிழக்கு மாகாணம் – வருடாந்த அறிக்கை 1981

அட்டவணை 1

தொகுதிகள்	விவசாய முகாமையாளர்	விஸ்தீரணம் ஏக்.	விவசாய குடும்பங்கள்
அம்பாறை மாவட்டம்			
பொத்துவில் 1	எம். ஐ. அகமெட் லெவ்வை	218400	16,711
பொத்துவில் 11	எஸ். சுந்தரம்பிள்ளை	261024	6249
சம்மாந்துறை	ஐ. ஏ. ஜப்பார்	80000	13699
அம்பாறை 1	டபிள்யு. குறுப்பு		9207
அம்பாறை 11	வி. டபிள்யு. பி. குணதிலகா	372480	8207
மட்டக்களப்பு			
கல்குடா 1	பி. குணபாலசிங்கம்		9975
கல்குடா 11	எம். சி. எம். ஹனிபா	349440	11435
பட்டிருப்பு	ஆர். தெய்வேந்திரராஜா	89600	13350
மட்டக்களப்பு	கே. சத்தியமூர்த்தி	170598	11162
திருகோணமலை			
திருகோணமலை	வி. தியாகலிங்கம்	131200	5238
சேருவில	பி. எம். கே. ஆரியதாசா	416000	9393
மூதூர்	கே. மோகனராஜ்	124800	12480

1. பொது தகவல்/தொகுதிகள்

மீளாய்வுக் காலத்தில் விவசாய அபிவிருத்தி சபையினால் அபிவிருத்திக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட தேர்தல் தொகுதியில் மட்டக்களப்பும் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் ஏற்கனவே அபிவிருத்தி பற்றிய முக்கிய அம்சங்களை ஆராய இத் தொகுதிக்கு விஜயம் செய்துள்ளார்.

2. கமநல சேவைகள் நிலையங்கள்/நிர்வாக கூறுகள்

மீளாய்வுக்கான காலத்தில் கமநலசேவை நிலையங்களுக்கு ளுக்கு தேவையான பிரிவு உத்தியோகத்தர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். சில கமநல சேவைகள் நிலையத்தினைச் சேர்ந்த நிரந்தர பிரிவு உத்தியோகத்தர்கள் மாற்றப்பட் டுள்ள நேரத்தில் அவர்களின் கடமைகளை பிரிவு உத்தியோ கத்தரின் வேலைகளைக் கவனிப்பவர்கள் சிறிது காலம் கவ னித்து வந்துள்ளார்கள். விவசாய திணைக்களத்து விரிவாக்க பிரிவினை பொறுத்தவரையிலும் இவ்விதமே நடைபெற்று வந்துள்ளது. விவசாயப் பகுதி காலி ஸ்தானங்கள் யாவும் நிரப்பப்பட்டுள்ளன. உலக வங்கியின் சிபார்சின் பேரில் முன்பு நிட்டமிட்ட விகிதத்தின்படிக்கு கே.வி.எஸ்.எஸ்.மார் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். திருகோணமலை மாவட்டத் தில் முக்கியமாக கே.வி.எஸ்.எஸ். ஸ்தானங்கள் இன்னமும் நிரப்பப்பட வேண்டியுள்ளன.

4. பிரதான பயிர் செய்கை

1981/82 கால போகத்தில் ஆகக்கூடுதலான ஏக்கர் நிலம் நெல் சாகுபடி செய்யப்படாது உள்ள தேர்தல் தொகுதி திருகோணமலையாகும். திருகோணமலையின் வட பகுதி சுவாத்திய நிலை சீரற்றதாக இருந்தபடியால் இந்த மாவட்டத்தில் வரும் வானம் பார்த்த பூமியில் 36வீத விஸ் தீரணத்தினை பயிர் செய்கையின் கீழ் கொண்டுவர முடியவில்லை.

1981/82ம் ஆண்டு கால போக காலத்தில் பிரதான பயிர் செய்கை விஸ்தீரணத்தினை இந்த அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 2

தேர்தல் தொகுதி	நெல் ஏக்.	தென்னை ஏக்.	கரும்பு ஏக்.
அம்பாறை மாவட்டம்			
பொத்துவில் 1	35,758	7,040	5,500
பொத்துவில் 11	26,670	2,156	15
சம்மாந்துறை	41,252	2,286	2,598
அம்பாறை 1	20,002	3,100	16,438
அம்பாறை 11	10,851	2,692	—
	134,533	17,274	24,551
மட்டக்களப்பு மாவட்டம்			
கல்குடா 1	12,990	225	24
கல்குடா 11	18,784	452	—
பட்டிருப்பு	32,360	888	—
மட்டக்களப்பு	42,331	—	—
	106,465	1,565	24
திருகோணமலை மாவட்டம்			
திருகோணமலை	18,377	3,552	—
சேறுவில	31,923	640	7,200
மூதூர்	32,950	1,354	—
	83,250	5,546	7,200
மொத்தம்	324,248	24,385	31,775

அம்பாறை மாவட்டத்தில் நெல் விளைச்சலில் மெச்சத் தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்காய காரணங் கள் தூய விதை பொருட்கள் அதிகமாக விநியோகிக்கப்பட் டது, நீர் முகாமைத்துவ திறமை, மற்றும் சரியான நேரத்

தில் விவசாய உள்ளிடுகைகள் விநியோகிக்கப்பட்டமைகள் ஆகும். திருகோணமலை மாவட்டத்தில் பயிர் செய்கையில் அபிவிருத்தியும், கூடிய விளைச்சலும் கிடைத்துள்ள இடம் கந்தளாய் ஆகும்.

பின்வரும் அட்டவணை 1981/82 காலபோகத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் சிபார்சு செய்யப்பட்ட விதைநெல் விநியோகத்தினை விளக்குகின்றது.

அட்டவணை 3

தேர்தல் தொகுதி	ப. வி. நெ. புசல்	சி. வி. நெ. புசல்
அம்பாறை மாவட்டம்		
பொத்துவில் 1	1,110	1,210
பொத்துவில் 11	600	640
சம்மாந்துறை	1,032	1,146
அம்பாறை 1	1,801	740
அம்பாறை 11	100	320
	4,703	4,056
மட்டக்களப்பு மாவட்டம்		
கல்குடா 1	2,742	1,280
கல்குடா 11	570	1,181
பட்டிருப்பு	750	1,992
மட்டக்களப்பு	1,712	3,250
	5,774	7,703
திருகோணமலை மாவட்டம்		
திருகோணமலை	1,788	2,118
சேறுவில	670	12,946
மூதூர்	2,838	4,576
மொத்தம்	5,296	19,640
	15,773	31,399

இவ்விடம் குறிப்பிட்டுள்ள தொகை விதை நெல் நெல் சமக்காரர்கள் மற்றும் விதைநெல் உற்பத்தியாளர்களுக் கிடையில் நடைபெற்ற விற்பனை விதை நெல்களுக்கு மேலதி கமாக விநியோகிக்கப்பட்டதாகும்.

தென்னை

புயல் நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயல் படும் கடைசிப் போகம் இதுவாகும். தென்னை மாணியத் திட்டத்தின் கீழ் காணிச் சொந்தக்காரர்களும் மற்றும் வீட்டுத் தோட்டச் சொந்தக்காரர்களும் தங்கள் தங்கள காணிகளில் தென்னை நடுவதற்குரிய சகல நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றார்கள். இவ்வருட மீளாய்வு காலத்தில் முக்கிய அம்சம் கமக்காரர்கள் மற்றும் காணிச் சொந்தக் காரர்களுக்கு தேவைப்படும் தென்னை உரத்தேவைக்கு ஏற் படுத்தப்பட்டுள்ள தொடர்பு வேலைகளாகும்.

1981/82 கால போகத்தில் விநியோகிக்கப்பட்டவைகள்.

அட்டவணை 4

தேர்தல் தொகுதி	செவ்விளநீர்	தென்னை
அம்பாறை மாவட்டம்		
பொத்துவில் 1	—	24,000
பொத்துவில் 11	—	20,480
சம்மாந்துறை	400	17,200
அம்பாறை 1	—	40,000
அம்பாறை 11	—	15,000
	400	116,680
மட்டக்களப்பு மாவட்டம்		
கல்குடா 1	—	65,581
கல்குடா 11	—	94,355
பட்டிருப்பு	600	44,435
மட்டக்களப்பு	—	125,932
	600	330,303
திருகோணமலை மாவட்டம்		
திருகோணமலை	—	7,800
சேறுவில	—	5,275
மூதூர்	400	16,650
	400	29,725
மொத்தம்	1,400	476,708

6. உப உணவுப் பயிர்கள்

மேட்டு நிலப்பயிர்களான இறுங்கு, நிலக்கடலை, பட் டாணி கடலை, மிளகாய் மற்றும் வெங்காயம் தொடர்ந்தும் பயிரிடப்பட்டு வந்துள்ளன. இந்தப் பயிர்களுக்கு நிர்ணயிக் கப்பட்டுள்ள கள விலைகளின் காரணத்தினால் கமக்காரர்கள் இந்தப் பொருட்கள் உற்பத்தியினால் கூடிய இலாப மீட்டக் கூடியதாகவுள்ளது. இந்தப் பொருட்களை கொள்வனவு செய் வதற்கும் அவற்றை ஏற்றி இறக்குவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பொத்துவில் தேர்தல் தொகுதியில் ஏற்படுத்தப்பட்ட சந்தைப்படுத்த ஏற்பாடுகளின் காரணத்தால் அத்தொகுதி யில் கடந்த வருடம் சாகுபடி செய்த 8430 ஏக்கர் நிலம் இவ்வருடம் 15,000 ஏக்கர் நிலமாக அதிகரித்துள்ளது. இது முந்திய வருடத்திலும் பார்க்க 77 சதவீதம் அதிகரிப் பாகும். சாம்புநகர், எக்கல்லயா, தும்பன்கேணி, கல்லரிப்பு ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்ட வாசிகளுக்கு வழங்கப்பட்ட உதவிகளைத் தொடர்ந்து இவ் விடங்களில் மிளகாய்ச் செய்கை மேலும் விருத்தியடைந் துள்ளது.

அட்டவணை 5

தேர்தல் தொகுதி	மிளகாய் ஏக்.	பட்டாணி ஏக்.	தட்டை பயறு ஏக்.	நிலக்கடலை ஏக்.	இறுங்கு ஏக்.	குரக்கன ஏக்.	உழுந்து ஏக்.	வெங்காயம் ஏக்.
அம்பாறை மாவட்டம்								
பொத்துவில் 1	480	9	3	500	1,402	—	—	—
பொத்துவில் 11	38	—	—	15,850	1,115	25	—	—
சம்மாந்துறை	—	—	—	—	150	—	—	—
அம்பாறை 1	—	—	—	—	—	—	—	—
அம்பாறை 11	—	—	1,354	—	5,250	—	—	—
மொத்தம்	518	9	1,357	16,350	7,917	25	—	—
மட்டக்களப்பு மாவட்டம்								
கல்குடா 1	—	—	—	245	289	—	—	—
கல்குடா 11	45	—	34	611	1,014	20	25	5
பட்டிருப்பு	92	—	—	375	2,069	—	—	311
மொத்தம்	137	—	34	1,231	3,372	20	25	316
திருகோணமலை மாவட்டம்								
திருகோணமலை	85	93	—	612	798	58	145	332
சேறுவில	117	50	300	36	2,257	345	—	12
மூதூர்	127	—	—	1,391	1,561	—	—	19
மொத்தம்	329	143	300	2,039	4,616	403	145	363

7. பழமரங்கள்

அட்டவணை 6

தேர்தல் தொகுதி	மா	எலுமிச்சை	தோடை	பலா	கொய்யா	முந்திரிகை	கொடித்தோடை	வாழை
அம்பாறை மாவட்டம்								
பொத்துவில் 1	2,967	925	900	1,068	325	3,050	75	—
பொத்துவில் 11	580	350	390	530	210	100	—	—
சம்மாந்துறை	785	405	285	375	220	—	—	—
அம்பாறை 1	559	146	189	399	27	15,000	—	—
அம்பாறை 11	219	161	1,479	57	—	—	—	—
மொத்தம்	5,110	1,987	3,243	2,429	782	18,150	75	—
மட்டக்களப்பு மாவட்டம்								
கல்குடா 1	1,461	136	120	180	196	17	48	—
கல்குடா 11	1,094	19	48	37	17	—	—	—
பட்டிருப்பு	424	73	151	176	124	68	—	—
மட்டக்களப்பு	390	—	62	195	103	—	—	—
மொத்தம்	3,369	228	381	588	440	85	48	—
திருகோணமலை மாவட்டம்								
திருகோணமலை	1,146	72	63	67	87	202	—	230
சேறுவில	954	208	35	284	10	—	—	—
மூதூர்	1,090	452	—	148	34	—	—	—
மொத்தம்	3,190	732	98	499	131	202	—	230
கூட்டு மொத்தம்	11,669	2,947	3,722	3,516	1,353	18,437	123	230

பழ மரங்கள் விநியோகத்தில் இன்னமும் அரசாங்கப் பண்ணைகள் முடுக்கிவிடப்படவில்லை. கல்குடா தேர்தல் தொகுதிக்கு வேண்டிய மாமரக்கன்றுகள் யாழ்ப்பாணத்திலிருந்து விநியோகிக்கப்பட்டன. இவ்விதம் செய்வதில் கொண்டு செல்லும் கூலியில் அதிகரிப்பும் மற்றும் இணைப்பு வேலைகளில் அதிக கவனமும் செலுத்த வேண்டியும் ஏற்பட்டுள்ளன. அந்தந்த மாவட்டத்தில் உள்ள அரசாங்க பண்ணைகள் அந்தந்த மாவட்டங்களின் தேவைகளைக் கவனிக்க வேண்டும்.

வீரகொட கிராமத்தில், அம்பாறை மாவட்ட விவசாய முகாமையாளர் முயற்சியில் 250 ஏக்கர் மரமுந்திரிகைச் செய்கை சாத்தியமாயிற்று. இதற்குத் தேவைப்பட்டுள்ள நடுகைப் பொருட்கள் பயிர்ச் செய்கை உத்தியோகத்தரினால உண்டாக்கப்பட்டு மரமுந்திரிகைக் கூட்டுத்தாபன மானிய திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்டன.

8. மரநடுகை

இந்த மாவட்டத்தில் உள்ள தரிசு நிலத்தில் மரநடுகை மேற்கொள்ளப்படுவது, வன திணைக்களத்தின் நிதி நிலைமையின் காரணத்தால் நடைபெறவில்லை.

அம்பாறை 1—1000 ஏக்கர்
பொத்துவில் 11—100 ஏக்கர்
திருகோணமலை—400 ஏக்கர்
கல்குடா—28 ஏக்கர்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெற்றுள்ள பின்வரும் மரங்கள் விவசாய முகாமையாளரினால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 7

மாவட்டம்	தோக்கு	கதஅறிஞ	இயுகலிப்ரஸ்	இப்பில்இப்பில்	வேம்பு	புளி
அம்பாறை	28450	2285	200	200	70	—
மட்டக்களப்பு	—	5575	3350	3100	600	—
திருகோணமலை	9390	165	435	925	50	50
மொத்தம்	37840	8025	3985	4225	720	50

9. பண்ணை விலங்கு

சம்மாந்துறை, பொத்துவில், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தேங்கியுள்ள மேலதிக மந்தைகளின் நிலை ஆராயப்பட வேண்டியதொன்றாகும். இந்த புது வருடத்தில் மந்தைகள் ஏல விற்பனை ஒன்று நடாத்த நாங்கள் எதிர்பார்க்கின்றோம். மிகவும் நன்மைபயக்கும் விதத்தில் மிருக வைத்திய சேவை நிலையங்கள் தொழிற்பட்டுள்ளன. அதேநேரத்தில் புதிய நிலையங்கள் திறக்கப்படவேண்டும் என எம்மால் செய்யப்பட்ட சிபார்சுகளுக்கு கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு சாதகமான நடவடிக்கைகள் எடுத்துள்ளது. மூதூர் தொகுதியில் நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

10. பால் சேகரிப்பு நிலையம்

பால் சேகரிக்கும் நிலையங்களைப் பொறுத்தவரையில் கணிசமான அபிவிருத்தியைக் காணக்கூடியதாக இருக்கின்றது. நல்ல முறையில் தொழில்படாத நிலையங்களே தேசிய பால் சபையின் கவனத்திற்கு கொண்டுவந்ததின் நிமித்தம் குறைபாடுகளைத் திருத்திக்கொள்ள முடிந்தது.

கல்குடா தொகுதியில் ஒரு புதிய பால் சேகரிக்கும் நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக இது அப்பகுதியில் பால் சேகரிப்பில் முக்கியபங்கெடுத்துக்கொள்ளும் ஒன்றாக விளங்கும்.

அட்டவணை 8.

தேர்தல் தொகுதி	மொத்தக் குளம்	தொழிற்படும் நிலையில்	தொழிற்படா நிலையில்	1981ல் பழுது பார்க்கப் பட்டவை
அம்பாறை மாவட்டம்				
பொத்துவில் 1	16	8	7	5
பொத்துவில் 11	130	115	15	43
சம்மாந்துறை	5	4	1	1
அம்பாறை 1	5	2	3	3
அம்பாறை 11	142	38	104	10
மட்டக்களப்பு மாவட்டம்				
கல்குடா 1	72	28	44	7
கல்குடா 11	32	22	10	7
பட்டிருப்பு	61	53	8	11
மட்டக்களப்பு	—	—	—	15
திருகோணமலை மாவட்டம்				
திருகோணமலை	82	13	69	16
சேறுவில	84	65	19	23
மூதூர்	84	67	17	16

11. நீர்ப்பாசனம் (சிறிய)

சிறிய நீர்ப்பாசன முறைகளை அபிவிருத்தி செய்வதில் விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சும் கமநலசேவைகள் திணைக்களமும் எடுத்துள்ள நடவடிக்கைகளில் எமது தாபனமும் தொடர்பு கொண்டுள்ளது. பின்வரும் அட்டவணை 9 மேற்கொள்ளப்பட்ட வேலைகள் மற்றும் செலவினம் பற்றிய உண்மையான விளக்கத்தினைத் தாங்கியுள்ளது வருத்தத்திற்குரிய விடயம் ஒன்று அதுதான் சில பாராளுமன்ற அங்கத்தினர்கள் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் இவ்வேலைகளுக்கு பண ஒதுக்கீடு செய்யாததேயாகும்.

சிறிய நீர்ப்பாசனம்

குளங்கள் மற்றும் நீர்பாயும் இடங்களுக்கு செய்யப்பட வேண்டிய பழுதுபார்த்தல் புனருத்தாரணம் செய்தல் வேலைகளுக்கு இதறகு ஒதுக்கப்பட்டுள்ள நிதிவரம்பிற்கமைய நாங்கள் முன்னுரிமை வேலைப்பட்டியலைத் தயாரித்து அவற்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன், நீர்ப்பாசன இலாகாவுடனும் தொடர்பு கொண்டு முடிந்தளவு நிறைவேற்றியுள்ளோம்.

12. உரம் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்கள்

கிழக்கு மாகாணத்தில் விவசாய இரசாயனப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இருக்கவில்லை. முன்பு கமநல சேவைகள் திணைக்களத்தினால் முகாமைப்படுத்தப்பட்டு வந்துள்ள கந்தளாய் மத்திய கழஞ்சியம், நாம் இலங்கை உரக் கூட்டுத் தாபனத்துடன் மேற்கொண்டுள்ள பேச்சுவார்த்தையின் காரணத்தால் இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தினால் மாவட்ட பண்டகசாலையாக நிர்வகிப்பதற்கு கையளிக்கப்பட்டது. இதேபோன்ற ஒரு நடவடிக்கை மூதூர் தேர்தல் தொகுதியிலும் மேற்கொள்ளப்பட்டது.

செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதத்தில் மாகோவில் ஏற்பட்டுள்ள தண்டவாள ஒழுங்கினத்தால் சகல ரக உரங்களுக்கும் இக்காலத்தில் சிறிது கால தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்த தட்டுப்பாடு ஒரு சில தினங்களுக்கே இடம்பெற்றது. இதற்கிடையில் நிலைமையை வேறு வழியில் கிழக்கு மாகாணத்திற்கு உரத்தினை அனுப்பி வைத்ததன் மூலம் சீரடைய செய்துள்ளோம்.

13. பண்ணை விசை மற்றும் உபகரணங்கள்

இலங்கை உழவு யந்திர கூட்டுத்தாபனம் நாலு சில்லு உழவு யந்திரத்தினை ரூ. 182,000 விற்கு விற்பனை செய்யும் அதே நேரத்தில் ஒரு உழவு யந்திரத்தினை ரூ. 154,000விற்கு சம்மாந்துறை தொகுதியில் உள்ள 16 கமக்காரர்கட்கு விநியோகிப்பதற்கு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை ஒரு முக்கிய அம்சமாகும்.

14. சந்தைப்படுத்தல்

கிழக்கு மாகாணத்தில் உள்ள எந்த ஒரு தேர்தல் தொகுதியிலும் உற்பத்தி பொருட்களுக்குரிய விலையில் வீழ்ச்சி ஏற்படவில்லை. நாங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு உடனுக்குடன் சந்தைபடுத்தல் வசதிகளைச் செய்து விற்பனையாளர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் உதவியளித்துள்ளோம். நெல்லின் விலை ஒரு புசல் 80 ரூபாவில் மீளாய்வுக்குட்பட்டுள்ள வருடத்தில் குறைந்தது 6 மாதம் இருந்துள்ளது. அதே நேரத்தில் இவ்வருடத்தில் பதிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த விலை ஒரு புசல் ரூ. 72 ஆகும். உப உணவு பொருட்கள் இறக்கு மதியாளர்களுக்கு நாட்டின் உப உணவு உற்பத்தி மற்றும் அறுவடை காலம் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 9.

தேர்தல் தொகுதி	1981ல் மேற்கொள்ளப்பட்ட வேலைகள்		செலவினம் ரூபா
அம்பாறை மாவட்டம்			
	2	புதியது	34,059-70
பொத்துவில் 1	3	தொடர்ச்சி	21,975-33
பொத்துவில் 11	12	புதியது	103,548-52
	31	தொடர்ச்சி	92,432-24
சம்மாந்துறை	1	புதியது	11,000-00 (அண்ணளவாக)
அம்பாறை 1	1	புதியது	16,150-50
அம்பாறை 11	3	புதியது	41,555-25
மட்டக்களப்பு மாவட்டம்			
கல்குடா 1	7	புதியது	113,861-50
கல்குடா 11	7	புதியது	49,964-25
பட்டிருப்பு	11	புதியது	184,864-90
மட்டக்களப்பு	15	புதியது	144,053-50
திருகோணமலை மாவட்டம்			
திருகோணமலை	16	புதியது	278,332-55
சேறுவில	23	புதியது	299,800-50
மூதூர்	16	புதியது	215,242-75

15. காணி குடியேற்றம்

பொத்துவிலில் உள்ள கச்சேனை, சம்புநகர், திருகோணமலையில் உள்ள பன்குளம் பட்டிருப்பில் உள்ள தும்பங்கேணி கல்குடாவில் உள்ள கல்லரிப்பு ஆகிய குடியேற்றத் திட்டங்களுக்கு விவசாய அபிவிருத்தி அதிகார சபை உதவியளித்துள்ளது. இவ்விடங்களில் காலத்திற்கு காலம் பயிரிடும் பயிர்களை ஊக்குவித்ததுடன் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் வசதிகளையும் உறுதிப்படுத்தியுள்ளது.

கச்சேனை குடியேற்றத் திட்டத்தில் மழைவீழ்ச்சி கரும்புச் செய்கையினை 10 ஏக்கரில் ஒரு முன்னோடித்திட்டமாக ஆரம்பித்துள்ளோம். இத்திட்டம் வெற்றியடைந்தால் இலங்கை சீனிக்கூட்டுத்தாபனத்தின் அனுமதியுடன் இத் திட்டத்தின் கீழ் வரும் 3000 ஏக்கர் காணியிலும் கரும்பு செய்கை செய்ய ஒழுங்கு செய்யப்படும்.

16. புதிய திட்டங்கள்

நாங்கள் சில புதிய திட்டங்களை கிழக்கு மாகாணத் திற்கு அதன் அபிவிருத்தியை முடுக்குவதற்காக திருப்பி விடுவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

ஐ. ரா.திலுள்ள பல்கோனெஅக் லிமிட்டேட் 2000 ஏக்கரில் நிலக்கடலை உற்பத்தி செய்யும் திட்டத்தினைக் கொண்டுள்ளது. இதற்கு பொருத்தமான நிலத்தினைத் தெரிவு செய்யும் பரீட்சார்த்த பயிர் செய்கை வேலைகள் திருகோணமலை மாவட்டத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இந்த பரீட்சார்த்த பயிர்ச் செய்கை அறுவடை பெப்புறுவரி/மார்ச் மாதத்தில் அமெரிக்க நிபுணர் ஒருவரின் மேற் பார்வையில் நடைபெறவிருக்கின்றது. இவற்றை இலங்கையில் மேற்படி கம்பனி பதனிட எத்தனித்துள்ளது.

17. முடிவு

தொகுதிகளில் தலைவர் மேற்கொண்டு சமர்ப்பிக்கும் அறிக்கைகளில் எடுத்துக்காட்டப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப் படும்.

முகாமையாளர்கள் அவரவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வேலைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கு, விவசாயிகள் மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய திணைக்கள ஊழியர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார்கள். கிழக்கு மாகாணத்தில் எனது கடமைகளை செவ்வனே நிறைவேற்ற தங்களினது ஒத்துழைப்பை நல்கிய, பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு, திணைக்கள ஊழியர்களுக்கு யு. எஸ். எயிட் பணிப்பாளரும் கிராமிய அபிவிருத்தித் தலைவருக்கு, விவசாய அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர்களுக்கும் ஊழியர்களுக்கும் எனது நன்றியைக் கூறிப்பிட்டு எனது அறிக்கையை நிறைவு செய்து கொள்கின்றேன்.

சிறுன் மென்டிஸ்,
கிழக்கு மாகாணப் பணிப்பாளர்.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

தென் மாகாணம் – வருடாந்த அறிக்கை 1981

1. பொது அறிவித்தல்கள்—தொகுதிகள்

தொகுதிகள்	விவசாய முகாமையாளர்	பரப்பளவு	விவ. குடும்பங்கள்
மாத்தறை மாவட்டம்			
மாத்தறை	ஆர். விஜயவர்த்தன (1.7.81லிருந்து)	13,568	8,828
வெலிகம	டி. குணவர்த்தன	26,944	13,228
அக்குரசு	எச். டபிள்யூ. குணசேகரா	63,766	15,641
கம்புறுப்பிற்றிய	டபிள்யூ. ரணசிங்க	38,464	17,380
ஹக்மன	பீ. எஸ். தஹநாயக்க (1.10.81லிருந்து)	66,560	17,210
தெனியாய	எம். டொனல்ட்	87,840	15,760
தெவிநுவர	எஸ். டி. பிரான்சிஸ் (15.3.81லிருந்து)	21,612	11,415
அம்பாந்தோட்டை மாவட்டம்			
திசமஹராம	டி. எஸ். ஏ. கமகே	413,920	18,058
தங்காலை	யூ. எம். லியனகே	111,360	17,513
மூல்கிரிகல	ஆர். டி. டபிள்யூ. தஹநாயக்க	76,480	17,278
பெலியத்த	எஸ். ஏ. எக்கநாயக்க (1.8.81லிருந்து)	49,280	14,491

மாத்தறை, ஹக்மன, தெவிநுவர, பெலியத்த ஆகிய பகுதிகளில் விவசாய முகாமையாளர் பிரிவில் ஏற்பட்ட வெற்றிடங்கள் மேலே குறிப்பிட்டவாறு நிரப்பப்பட்டு விட்டன.

உதவி மாகாணப் பணிப்பாளர் பிரிவில் வருடத்தின் நடுப் பகுதியில் இரு பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டன. இவ் வெற்றிடங்களை அடுத்த வருட முற்பகுதியில் நிரப்புவதற் கான ஒழுங்குகள் செய்யப்பட்டுவிட்டன. இப்பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்கள் பற்றுக்குறையாக இருந் தமையால், இந்நியமனங்கள் தாமதமாகிவிட்டன.

2. நிர்வாகப் பிரிவுகள்—கமநல சேவைகள் நிலையங்கள்

இந்நிலையங்களில் கடமையாற்றுவதற்கென கமநல சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய உத்தியோகத்தர் களும், பயிர்செய்கை உத்தியோகத்தர்களும், கமத் தொழில் திணைக்களத்தின் விவசாயப் போதனாசிரியர்களும், கமத்தொழில் விரிவாக்கல் உத்தியோகத்தர்களும் நியமிக்கப் பட்டு விட்டனர். மேற்படி பிரிவுகளில் ஏற்பட்ட பின்னைய வெற்றிடங்கள் தொடர்பாகத் தாமதமின்றி தகுந்த நிய மனங்கள் செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தெனியாய தொகுதியிலுள்ள பேரளபாணத்தற என்ற இடத்திலும், பெலியத்த தொகுதியிலுள்ள மொடறவன என்ற இடத்திலும், இரு மேலதிக கமநல சேவைகள் நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பிரிவு மரப் பயிர்கள் பிரிவு ஆகியவற்றிரி ஒரு சிறந்த சேவையை உறுதிப்படுத்துவதற்கான எமது வேண்டு தல்கள் தொடர்பாக, எங்கு சாத்தியமாக உள்ளதோ, அங் குள்ள பொறுப்பான திணைக்களங்களிலுள் இப்பிரிவுகளில் சேவையாற்றுவதற்கென அதிக விரிவாக்கல் உத்தியோகத் தர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். எனவே, அவ்வருடத்தில் நிய மிக்கப்பட்ட தகுந்த உத்தியோகத்தர்களின் விளைவாக, உரிய திணைக்களங்களின் வெளிக்கள உத்தியோகத்தர்களிலுள் கம நல சேவைகள் நிலையத்தினூடாக வழங்கப்பட்ட சேவை களில் ஒரு நல்ல முன்னேற்றம் இருந்ததை அவதானிக்க முடிந்தது. மேலும் நடைமுறையில் உள்ளதும், எட்டு அர சாங்க உத்தியோகத்தர்களையும், அப்பகுதியின் ஆறு விவசா யப் பிரதிநிதிகளையும் கொண்டமைந்ததுமான புதிதாகத் தாபிக்கப்பட்ட கமநல சேவைகள் நிலையங்கள், குழுக்கள் ஆகியன இந்நிலையங்களின் முன்னேற்றகரமான முகாமைத் துவம், பராமரிப்புத் தொடர்பாக மிகவும் உறுதியானதோர் பங்களிப்பைச் செய்துள்ளன.

கமநல சேவைகள் சட்டத்தை நடைமுறைப்படுத்து தலிலும் கூட, விசேடமாக மற்றைய ஏற்பாடுகளுள் நடை முறையிலுள்ளதான, விவசாய நிலங்களின் பயிர்ச்செய்கைத் தரங்களின் பராமரிப்பானது விவசாயத்துறையில் திட்ட மிட்ட முன்னேற்றத்தை உறுதிப்படுத்தும் முகமாக விரும் பிய விளைவைக் காட்ட ஆரம்பித்துள்ளது. எதிர்பார்க்கப் பட்ட சேவைகளை அளிப்பதில் அவதானிக்கப்பட்ட குறை கள், உடன் நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக உரிய திணைக் களங்களுக்கு சுட்டிக் காட்டப்பட்டன. இதனால் கமநல சேவைகள் நிலையங்கள் மூலம் அவ்வருடத்தில் ஒரு திருப்தி யான சேவைத் தரத்தைப் பேணுதல் சாத்தியமாயிற்று.

3. பிரதான பயிர்ச் செய்கைகள்

தொகுதி	நெல் ஏக்.	தென்னை ஏக்.	தேயிலை ஏக்.	றப்பர் ஏக்	கறுவா ஏக்.	சிற்றநெல்லா ஏக்.	வாழை ஏக்.
மாத்தறை மாவட்டம்							
மாத்தறை	2867	4750	—	98	555	—	—
வெலிகம	6297	7226	1460	1800	1374	—	—
அக்குரச	11508	4525	6875	8700	2674	—	—
கம்புறுப்பிட்டிய	13788	5771	496	3004	3763	95	—
ஹக்மன	8225	6252	12679	3086	9549	147	—
தெனியாய	6729	1569	22890	2295	639	—	—
தெவிநுவர	3386	11700	—	289	708	—	—
மொத்தம்	52,800	41,793	44,400	19,272	19,244	242	
அம்பாந்தோட்டை மாவட்டம்							
திஸமஹராம	26809	5385	—	—	—	—	4800
தங்காலை	25722	14820	—	—	—	1092	3472
முல்கிரிகல	7885	22943	699	19	2487	5833	2150
பெலியத்த	5228	28261	—	63	372	969	385
மொத்தம்	65,644	71,409	699	82	2859	7894	10807

கமநல சேவைகள் திணைக்களத்தினால் பேணப்படும் உயர் நிலங்கள், நெல் நிலங்கள் தொடர்பிலான பதிவுப் புத்தகங்களை மீளத்திருத்தி அமைத்ததன் மூலம் தொகுதிகளிலுள்ள பிரதான பயிர்கள் சம்பந்தப்பட்ட பரப்பளவு அறிக்கை பூரணப்படுத்தப்பட்டுவிட்டது. அநேகமாக சகல தொகுதிகளிலும் பிரதான பயிர்களின் பயிரிடப்பட்ட பரப்பளவு மேலே கூறப்பட்டவாறு அதிகரித்துள்ளது. இது, பயிர்ச் செய்கையாளர்களின் தேவைகளை சந்திக்கும் முகமாக அவர்கள் தேவைகளை வழங்குவதன் மூலமும் விரிவாக்கல் சேவைகள் மூலமும் சிறந்த வசதிகளை அளிப்பதற்கு காரணமாகவுள்ளது.

(அ) நெல்

இப்பிரிவில் கடந்த இரு போகங்களிலும் அதிக முன்னேற்றம் காணப்பட்டது. தொகுதிகளிலுள்ள 90%க்கும் மேற்பட்ட நெற்பரப்பளவுகள் திருந்திய உயர் விளைவைத் தரும் வகைகளின் கீழ் அடங்குகின்றன. திருந்திய பாரம்பரிய நடவடிக்கைகளால் இக்காலப் பகுதியின் விளைவுகள் அதிகரித்துள்ளன.

இப்பிரிவில் பெறப்பட்ட கூடிய விளைவுகளிற்குப் பிரதான காரணங்கள் என்னவெனில், சிறந்த தரமான விதை நடுகைப் பொருட்கள், உரம் போன்ற அவசியமான அம்சங்கள் உரிய காலத்தில் கிடைக்கப் பெற்றமை, சிறந்த விரிவாக்கல் சேவையுடன் இணைந்த முன்னேற்றமடைந்த நீர்ப்பாசன வசதிகள், மிக அத்தியாவசியமானதான அனுகூலமான காலநிலை ஆகியனவாகும்.

(ஆ) மரப்பயிர் பிரிவு (தெங்கு, தேயிலை, றப்பர், சிறு ஏற்றுமதிப் பயிர்கள்)

தெங்கு, தேயிலை, றப்பர், சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கான புதிய நடுகைத் திட்டங்களின் கீழ், இப்பயிர்கள் செய்கை பண்ணப்பட்ட பரப்பளவுகள், இக்காலப் பகுதியில் ஒரு முன்னேற்றகரமான அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. இதேபோன்று தற்போதைய பயிர்ச்செய்கைகளின் பராமரிப்பு சம்பந்தமாக கூறமுடியாது. ஏனெனில் அநேக நிலச் சொந்தக்காரர்கள் உயர் முகாமைத்துவச் செலவுகள் காரணமாகப் பயிர்களைக் கவனிக்காதுள்ளனர். இந்நிலைமை வருடத்தின் இறுதிப் பகுதியில் அதிகரித்த உரவிலையினால் மேலும் தீவிரமடைந்துள்ளது.

கமநல சேவைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பயிர்ச்செய்கையினைப் புறக்கணித்தல் தொடர்பாக, அந்நிலச் சொந்தக்காரர்களுடன் தொடர்புகொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அத்துடன் இந்நிலச் சொந்தக்காரர்கள் இதற்கிணங்க செயற்பட்டு, புறக்கணிக்கப்பட்ட பயிர்ச் செய்கைகளை சீர்திருத்துவார்களெனக் கருதப்படுகின்றது.

இப்பயிர்களுக்குப் பொறுப்பான திணைக்களத்தின் ஆலோசனை கூறும் வெளிக்களப் பதவியினரால், அளிக்கப்பட்ட சேவையினால் அதிக முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இப்பிரிவில் விரும்பிய விளைவினைப் பெறும் பொருட்டு, பயிர்ச் செய்கையாளர்களுக்குத் தேவையான நடுகைப் பொருட்கள், ஏனைய தேவைகள், ஆலோசனைச் சேவைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதலிலும், வழங்கலிலும் எமது விவசாய முகாமையாளர்கள் இவ்வெளிக்கள உத்தியோகத்தர்களுடன் ஒன்று சேர்ந்து கடமையாற்றியுள்ளனர். இப்பயிர்களின் அபிவிருத்தியில் உதவித் திட்டங்களில் பங்கு அதிகரித்திருக்கின்றது. பலதரப்பட்ட உதவித் திட்டங்களின் கீழ், சீர்திருந்திய பரப்பளவுகள் கடந்த வருடத்தை விட அதிகரித்துள்ளன.

அட்டவணை 2

தொகுதி	தென்னம் நாற்றுக்கள்	கோப்பி	மிளகு	கராம்பு	சாதிக்காய்
மாத்தறை மாவட்டம்					
மாத்தறை	1225	5715	5860	1100	1200
வெலிகம	4572	14400	12700	—	780
அக்குரச	9000	9825	3085	3095	—
கம்புறுப்பிற்றிய	10150	49135	23057	5437	7759
ஹக்மன	—	19155	11300	3100	200
தெனியாய	28700	26200	23573	9600	—
தெவிநுவர	7183	8000	3580	1500	600
மொத்தம்	60830	132430	83155	23832	10539
அம்பாந்தோட்டை மாவட்டம்					
திசமகராம	26369	—	—	—	—
தங்காலை	45030	7300	2300	50	—
மூல்கிரிகல	36858	35265	8520	600	—
பெலியத்த	2600	16580	1135	700	—
மொத்தம்	110857	59145	11955	1800	—

அட்டவணை 3

(இ) ஏனைய வெளிக்களப் பயிர்கள்

உப உணவுப் பயிர் பரப்பளவுகள்

தொகுதி	சோயா ஏக்.	எள்ளு ஏக்.	பாசிப்பயறு ஏக்.	மிளகாய் ஏக்.	கௌப்பி ஏக.	நிலக்கடலை ஏக்.	சோளம் ஏக்.	குரக்கன் ஏக்.
திசமஹராம	75	3099	3084	3370	2165	3481	1058	1246
தங்காலை	74	1241	3401	2985	2381	191	1034	973
மூல்கிரிகல	—	149	392	—	801	119	167	241
பெலியத்த	—	22	80	100	60	18	20	30
அக்குரச	—	12	—	—	25	—	—	50
மொத்தம்	149	4523	6957	6455	5432	3809	2279	2540

(இ) ஏனைய வெளிக்களப் பயிர்கள்

உப உணவுப் பயிர்ச்செய்கை பிரதானமாக அம்பாந் தோட்டை மாவட்டத்தில் பெரும்போகப் பயிராக வரை யறுக்கப்பட்டுள்ளது. 1981/'82ன் மகா போகத்தில் பயிரிடப் பட்ட பரப்பளவில் ஒரு அதிகரிப்பு காணப்பட்டபோதிலும், ஒரு வெற்றிகரமான பயிர்ச் செய்கைக்குப் பருவமழை அனு கூலமாயில்லை. இதனால் எதிர்பார்க்கப்பட்ட விளைவு கடந்த பருவத்தைப் போன்று சிறப்பாக இருக்க மாட்டாது. நில விலைத் திட்டத்தின் செயற்பாடு, அவசிய தேவைகள் கிடைக் கப்பெறல், ஒரு சிறந்த விரிவாக்கல் சேவை ஆகியன இப் பிரிவின் முன்னேற்றத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமென வழங்கப்பட்டுள்ளன.

காய்கறிகள், பழப்பயிர்கள், புகையிலை, பருத்தி போன்ற ஏனைய விலைப்பயிர்களின் கீழான பரப்பளவுகளில் ஒரு முன்னேற்றகரமான அதிகரிப்புக் காணப்பட்டுள்ளது. மேலும் வாழை, மா ஆகியவற்றிற்கான பழப்பயிர் மாணி யத் திட்டமானது கமத்தொழிற் தீவுக்களத்திலுள் அம் பாந்தோட்டை மாவட்டத்தில், இறுதி அரை ஆண்டுப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் வாழை, மா ஆகியவற்றின் ஒழுங்குபடுத்தப்பட்ட பயிர்ச் செய்கைக் குத் தேவையான சக்தியை வழங்கியுள்ளது. அடுத்த வரு டத்திலிருந்து, மாத்தறை மாவட்டத்தில் பழப்பயிர் மாணி யத் திட்ட விரிவாக்கல் வேண்டப்பட்டுள்ளது. ஏனெனில் வாழை, அன்னசி போன்றவற்றின் விரிவான பயிர்ச் செய் கைக்கு நிலைமைகள் சிறப்பாக உள்ளன.

விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் வேண்டுத லின் பேரில், தொகுதி வாரியாக, கமத்தொழில் விரிவாக்கல்

சேவைகள் வரிசையில் வாழை, அன்னசி ஆகியவற்றின் பயிர்ச் செய்கையை திட்டமிட்ட நிகழ்ச்சித் திட்ட ரீதியில் அதிகரிப்பதற்கும், பிரபல்யப்படுத்துவதற்குமென இப்பயிர்களின் விளக்க அமைப்புக்கள் மாத்தறை மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் படுத்தியதனால் வாழையின் கீழான பரப்பளவுகளில் 10 விருந்து 20% வரையிலான அதிகரிப்பு ஏற்பட்டது. இங்கும் கூட, விவசாயிகளின் தேவைகளை சந்திப்பதற்கான உள்ளிடுகைகளும், விரிவாக்கல் சேவைகளும் நன்கு ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தன என்பது குறிப்பிடப்பட வேண்டும்.

4. கால்நடை

இப்பிரிவில் அக்காலப் பகுதியில் ஏற்பட்ட மிருக உணவு வழங்கலிலான தீவிர பற்றுக்குறைகள், அதிகரித்த உணவு விலைகள் ஆகியவற்றினால், அவற்றின் முன்னேற்றத்தில் ஒரு தடை ஏற்பட்டது. இது கோழி வளர்ப்புப் பிரிவில் மிகவும் தீவிரமாக உணரப்பட்டது. அதாவது உயர்ந்த செயல்முறை விலைகளினால் சிறு உற்பத்தியாளர் கோழி வளர்ப்பை உண்மையில் கைவிடுவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டார்.

மாத்தறை, வெலிகம தொகுதிகளில் ஆரம்பித்து வைக்கப்பட்ட விவசாய அபிவிருத்தி அதிகாரசபையின் கோழி வளர்ப்புத் திட்டங்களும் அதே நிலையை எதிர்நோக்கியது. அத்துடன் இந்நிகழ்ச்சித்திட்டம் வீணானதாகக் காணப்பட்டமையால் அதில் பங்குபற்றியவர்கள் அதனைக் கைவிட்டு விட்டனர். வருட முடிவில், உணவு நிலையிலும், முட்டைக்கான சந்தையிலும் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது. இந்த அனுகூலமான நிலைகள் தொடர்ந்தால், வி. அ. அ. கோழி வளர்ப்புத் திட்டத்தை மறுபடியும் விருத்தி செய்து, ஏனைய தொகுதிகளுக்கு விரிவுபடுத்துவதற்கான ஆலோசனை அளிக்கப்படும்.

நிலைமைகள் சிறப்பாக அமைந்துள்ள தெனியாய தொகுதியில் பால் உற்பத்தியில் அதிக முன்னேற்றம் பெறப்பட்டுள்ளது. அரச முகாமைத்துவ தோட்டங்களினதும், பெண்கள் இயக்கத்தினதும் கூட்டுச் சேர்க்கையுடன், வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் தோட்ட வேலையாட்கள், கிராமிய விவசாயிகள் ஆகியோரிடையே கால்நடைகளின் தெரிவு செய்த வர்க்கங்களை விநியோகம் செய்வதற்கான ஒரு திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 105 கருத்தரித்த இளம் பசுக்கள் இவ்வருடத்தில் விநியோகிக்கப்பட்டுவிட்டன. வி. அ. அ. சபை இந்நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக செய்துள்ளது.

தேனி வளர்ப்புக் கூட திருப்திகரமான முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. தேன்கூடுகளை மிகக் குறைந்த விலையில் சாதாரணமாகப் பெற்றுக்கொள்வதன் மூலம் தேன் கூடுகள் கிடைக்கப்பெறுமை, உயர்ந்த விலை ஆகிய பிரச்சினைகள் சமாளிக்கப்பட்டு விட்டன. கம்புறுப்பிற்றியாத் தொகுதி இப் பிரிவிற்கு ஒரு முன்னோடியாக இருந்து வருகின்றது. இங்கு 198 குடியேற்றப்பட்ட தேன் கூடுகள் காணப்படுகின்றன. எதிர்காலத் தேனி வளர்ப்போருக்காக, கம்புறுப்பிற்றியாவில் கடன் வசதிகள் கூட அளிக்கப் பட்டுள்ளன.

தொகுதிகளில் அவ்வருடத்தில் விநியோகம் செய்யப்பட்ட கால்நடைகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

முட்டைக் கோழி—	ஒரு மாதப் பேடுகள்	3007
	ஒரு நாள் பேடுகள்	6577
	இறைச்சிக் குஞ்சுகள்	1554
	வாத்துக்கள்	515
பாற்பண்ணை—	கன்று போடாத பசுக்கள்	135
	காளைக்கன்றுகள்	36
	பசுக்கள்	17
பன்றிகள்		12

5. பண்ணை வலுவும் உபகரணங்களும்:—

வி. அ. அ. சபையானது, விவசாயிகளின் தேவைகளைச் சந்திப்பதற்கு, அத்தேவைகளின் கிடைக்கக்கூடிய தன்மையையும், விநியோகத்தையும் வெற்றிகரமாக செயற்படுத்தியுள்ளது. கடன்பெறத் தகுதியுள்ள விவசாயிகளுக்கு உழவு யந்திரங்கள், நீர் இறைக்கும் கருவிகள், தெளிகருவிகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்காக வங்கிக் கடன் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஏனையோருக்கு விசேட கழிவு விலைகளுடன், உடன் காசுக்கு இவ்வுபகரணங்கள் கிடைக்கக் கூடியதாக உள்ளது. கைதாவு கருவிகள், களைகருவிகள் ஆகியன கமநல சேவைகள் நிலையங்களினூடாக வழங்கப்பட்டன.

குபொட்டா இரண்டு சக்கர உழவு இயந்திரங்களுக்கு ஒரு உறுதியான சந்தை காணப்பட்டது. ஆனால் இக்குறிப்பிட்ட வகை உழவுயந்திரம் மிகவும் குறைவாகவே காணப்பட்டது. சந்தையில் கிடைக்கக்கூடியதாக இருந்த வகைகள், விவசாயிகளுக்குத் தேவையானவையாக இருக்கவில்லை. இந்நிலை குறித்து அதாவது தற்போதைய கோரிக்கையை கட்டுப்பாடான விநியோகம் எதுவுமின்றி வழங்குமாறு அரச உழவுயந்திரக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது பண்ணை வலுவும், உபகரணங்களும் தொடர்பாக அவற்றின் மேலெழுந்த வாரியான நிலையை நோக்கும்போது தொகுதிவாரியாக இவற்றைப் பெற்றுக்கொள்ளலில், ஒரு முன்னேற்றகரமான அதிகரிப்புக் காணப்படுகின்றது. இதே போன்று, கிராமிய மட்டத்தில் விவசாய நடவடிக்கைகளின் விளைவுகளும் அதிகரித்துள்ளது.

6. உரமும், விவசாய இரசாயனப் பொருட்களும்:

உரம், விவசாய இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளலில் தீவிர பற்றுக் குறைகள் காணப்படவில்லை. இலங்கை உரக் கூட்டுத்தாபனம், பிராந்தியக் களஞ்சியங்கள், கமநல சேவைகள் நிலையங்கள், ப.நோ.கூ. சங்கங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியன தேவைகளை அவ்வப்போது வழங்குவதற்கெனப் போதிய இருப்புக்களைக் கொண்டிருந்தன. இந் நடவடிக்கை வி. அ. அ. சபையினால் நன்கு கொண்டு நடாத்தப்பட்டதுடன், இவற்றின் உடனடியான பெற்றுக்கொள்ளலையும் உறுதிப்படுத்தியது.

அரை இறுதி ஆண்டுப் பகுதியில் ஏற்பட்ட உரவிலை அதிகரிப்பின் விளைவாக, மரப்பயிர்ப் பிரிவில் உரத்தின் பாவனை ஒரு சந்தை வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இத் நிலை தேயிலை, றப்பர், தெங்கு ஆகிய பிரதான பயிர்களில் அதிக கவனத்தை செலுத்தத் தூண்டியுள்ளது. உரவிலை அதிகரிப்பு நெல் வர்க்கத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்த வில்லை. பதிலாக, நெல்லின் பலமான சந்தையைத் தூண்டும் விதத்தில் உற்பத்தித் தரங்களைப் பேணுதலை அதிகரித் திருக்கலாம்.

பெரிய, சிறிய நீர்ப்பாசன வேலைகளின் பராமரிப்பும், புனரமைப்பும் கடந்த வருடத்தை விட நல்ல கவனிப்பைப் பெற்றுள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் நிதியுடன் வருடத்தில் நிரல்படுத்தப்பட்ட முதன்மை அம்சங்கள் செயற்படுத்தப் பட்டன. கிராமியக் குளங்களின் புனரமைப்புடன், சுமாரான அளவு அணைக்கட்டுகளும், கால்வாய்களும் பராமரிப் புத் திட்டத்தின் கீழ் சீராக்கப்பட்டுள்ளன. இப்பிரிவில் விசேடமாக சிறிய நீர்ப்பாசனத்திலுள்ள குறைபாடுகளை வெளில், மதிப்பீடுகளைத் தயாரித்தலிலும், ஒப்பந்தங்களைக் கொடுப்பதற்கான கேள்வி நடப்பு முறைகளில் ஏற்பட்ட தாமதமுமேயாகும். வருடத்தின் கால் இறுதிப் பகுதியில் நிதியினைப் பயன்படுத்த முயற்சிப்பதில் தூரிதப்படாமல் திட்டமிட்ட அம்சங்களை திருப்திகரமாகப் பூரணப்படுத்தல் வேண்டும்.

வெலிகமவில் அமைக்கப்படும் உரக் கூட்டுத்தாபனத் தின் பிராந்திய உர அமைப்பு ஏப்ரல் 1982ல் செயற்படு மெனத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வமைப்பின் செயற் பாட்டினால் தென் மாகாணம் முழுவதும் உரத்தைப் பெற் றுக்கொள்வதும் உரத்தின் பெற்றுக்கொள்ளல் இலகுவாக் கப்படுகின்றது.

7. நீர்ப்பாசனம்

வருடத்தில் செயற்படுத்தப்பட்ட புனரமைப்புத் திட் டத்தின் மூலம் தொகுதிகளிலுள்ள பெரிய, சிறிய குளங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பிரிவின் கட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை களுக்கு, நிதி காரணமாயிருப்பதனால், கமநல சேவைகள் திணைக்களத்தின் மூலம், கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சினால் அநேக தொகுதிகளுக்கு குறை நிரப்பு மானியங்கள் அளிக்கப்பட்டன. இது கிராமிய மட்டத் தில் ஒரு வேகத்தை உண்டுபண்ணியுள்ளது. விவசாயிகள் தமது நீர்ப்பாசன பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு நட வடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என்பதை உணர்கின்றனர்.

பெரிய நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் அதிக முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. மாத்தறை மாவட்டத் தில், கம்புறுப்பிற்றிய, மாத்தறை, வெலிகம ஆகிய இடங்க ளில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர்களைப் பயன்பெறச்செய் யும் கடவட்டுவார உப்புநீரகற்றல் திட்டம், பொலத்துகங்கா வடிகால் திட்டம் ஆகியன திருப்திகரமாகப் பூரணப்படுத் தப்பட்டுள்ளன. அக்குரசவிலுள்ள தலஹக ஆற்றுத்திட்டம் முன்னேற்றமான நிலையிலுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில், கிராமலயா புன ரமைப்புத் திட்டம், தங்கலுவெல்லாய வடிகால் திட்டம், லுனுகம்வெகர நீர்ப்பாசனத் திட்டம் ஆகியன வருடத்தில் திருப்திகரமான முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன. இவற் றுடன் அணைக்கட்டுகள், கால்வாய்கள் ஆகியனவும் கவ னத்தைப் பெற்றுள்ளன.

1981, நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கி னால் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் நீர்ப்பாசன வேலை களில் அதிக சேதங்கள் ஏற்பட்டன. தங்காலை, பெலியத்த, முல்கிரிகல ஆகிய இடங்களிலுள்ள 70ற்கு மேற்பட்ட கிரா மியக் குளங்கள், பெலியத்த கிராம ஓயா அணைக்கட்டுத்திட் டம், திசமஹராமாவிலுள்ள எல்லேகல பிரதான அணைக் கட்டு ஆகியன அதிகசேதங்களினால் பாதிக்கப்பட்டன. கடந்த மூன்று வருடங்களில் பெறப்பட்ட முன்னேற்றம் இவ்வெள்ளப் பெருக்கினால் மிகப்பெரிய அளவில் வீணாகி உள்ளதுடன், திருத்த வேலைகளுக்கு அதிக செலவுகள் ஏற் பட்டுள்ளமையும் மிகவும் துர்அதிர்ஷ்டவசமானதாகும்.

தொகுதி	நீர்ப்பாய்ச்சும் குளங்கள் பெரிய	நீர்ப்பாய்ச்சும் குளங்கள் சிறிய	நீர்ப்பாய்ச்சாத குளங்கள் பெரிய	நீர்ப்பாய்ச்சாத குளங்கள் சிறிய	மொத்தம்	1981ல் திருத்தப் பட்டவை
மாத்தறை மாவட்டம்						
மாத்தறை	1	2	—	—	3	—
வெலிகம	—	1	1	2	4	1
அக்குரச	—	4	—	1	5	1
கம்புறுப்பிற்றிய	3	—	—	3	6	—
ஹக்மன	2	3	—	—	5	—
தெனியாய	—	—	—	—	—	—
அம்பாந்தோட்டை மாவட்டம்						
திசமஹராம	8	118	—	59	185	15
தங்காலை	3	109	—	39	151	11
முல்கிரிகல	3	111	—	62	176	07
பெலியத்த	—	78	—	75	153	09

8. கல்வியும் பயிற்சியும்

இவ்வருடத்தில் நியமிக்கப்பட்ட விவசாய முகாமையாளர்களுக்கு அவர்களின் கடமைகள் தொடர்பாக விவசாயத்தின் முக்கிய அம்சங்கள் என்ற விடயத்தில், கன்னொறுவ சேவைக் காலப் பயிற்சி நிலையத்தில் ஒரு பயிற்சி நெறி அளிக்கப்பட்டது.

விவசாய உற்பத்தியில் தற்கால முறைகள் தொடர்பாக விவசாயிகளுக்குத் தொகுதிவாரியாக கல்வியும், பயிற்சியும் அளித்தல் வேண்டும் என முழுத்தமாகக் கூறப்பட்டது. இது தொடர்பாக வி. அ. அ. சபையானது பயிற்சி வகுப்புக்களை ஒழுங்குபடுத்தல், கிராமிய மட்டத்தில் வெளிக்கள விரிக்க அமைப்புகள் போன்றவை, நெல், தெங்கு, சிறு ஏற்று மதிப் பயிர்கள், பழப்பயிர்கள், ஏனைய பயிர்கள் ஆகியவற்றின் பயிர்ச் செய்கையும் முகாமைத்துவமும், விவசாய உப காணங்கள் ஆகியவற்றிற்குப் பொறுப்பான திணைக்களங்களுடன் இணைந்துள்ளது.

9. காணிச் சீர்திருத்தங்கள்

மிகவும் நீண்ட பிரச்சினையாக இருந்த ஆக்ரமிப்புக்கள் தொடர்பாக வி. அ. அ. சபை நிசமஹராம, தங்காலை தொகுதிகளின் உடவளவை சீர்திருத்தத் திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்துள்ளது. காணிச்சீர்திருத்தத்தின் பின்னர் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 20,000க்கு மேற்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு உரிமை உறுதிகள் கொடுக்கப்பட்டுள்ளது.

வருடத்தின் இறுதியில் மகாவலி அதிகார சபையினால் உடவளவை சீர்திருத்தத் திட்டம் சுவீகரிக்கப்பட்டதன் விளைவாக, சீர்திருத்தத் திட்டத்திலுள்ள ஆக்கிரமிப்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேவைகள், விரிவாக்கல் சேவைகள் ஆகியவற்றை மீள அமைத்தல் தொடர்பாக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மாத்தறை மாவட்டத்தில், மாத்தறை, வெலிகம, டெவிநுவர போன்ற தொகுதிகளில் ஏற்பட்டுள்ள உயர் சனத் தொகையினால் அதிக இடநெருக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் வி. அ. அ. சபையானது லுணுகம்வெகர நீர்ப்பாசனத் திட்டம், மகாவலி சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் கீழ்வரும் புதிய சீர்திருத்தத் திட்டங்களில் இத் தொகுதிகளில் உள்ள நிலமற்றவர்களுக்கு முதன்மை அளிக்கப்படுமென சிபார்சு செய்துள்ளது. இது கொள்கை உருவாக்குவோரின் கவனத்தைப் பெறல் வேண்டும்.

10. பொது

கடந்த இரு வருடங்களில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு, தற்போது நாம் எமது கடமைகளை மிக்க திறமையுடனும், முன்னேற்றத்துடனும் செய்யக் கூடியதாகவுள்ளது. விவசாய சமூகமானது தமது பிரச்சினைகளைக்கொண்டு செல்லக்கூடியதும், உதவியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதுமான ஒரு நண்பனாக விவசாய அபிவிருத்தி அதிகார சபையை ஏற்றுள்ளது.

இத்தகைய தன்மையை விவசாயிகளுடனும், அரசாங்க உத்தியோகத்தர்களுடனும் உருவாக்கியமைக்காக விவசாய முகாமையாளர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்களாகவார்கள் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் அத்தியாவசிய சேவைகளைத் தொடர்ந்தும் வழங்குதல் அவர்களின் கடமையாகும்.

முடிவாக, தலைவரினால் எனக்களிக்கப்பட்ட வழிகாட்டல், ஆலோசனை ஆகியவற்றிற்கும், எனது கடமைகளைத் திறமையாகச் செய்வதற்கு வேண்டிய உதவிகளை அளித்த பாராளுமன்ற உறுப்பினர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், வி. அ. அ. சபை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. ஓ. பீ. டி. அல்மெய்டா,
மாகாணப்பணிப்பாளர்—தென்மாகாணம்.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

ஊவா மாகாணம் வருடாந்த அறிக்கை – 1981

1. பொது அறிவித்தல்கள்/தொகுதிகள்

தொகுதி	விவசாய முகாமையாளரின் பெயர்	காணி விஸ்தீரணம் ஏக்கர்கள்	விவசாயக் குடும்பங்கள்
1. ஊவா பறனகம	திரு. ஏ.எம்.டி.யூ. அத்தனயக்க	33,920	11,319
2. வெலிமட	திரு. எம்.பீ.எம்.ஆர். பண்டார	46,720	16,312
3. ஹப்புத்தளை	திரு. ஆர். எம். முத்துபண்டார	118,780	8,824
4. பண்டாரவளை	திரு. எஸ். எம். குணவர்த்தன	33,600	8,460
5. மகியங்கனை	திரு. ஈ. எம்.யூ.எல். எக்கனயக்கா திரு. பீ. நாவலகே	255,360	12,761
6. வியாளுவ	திரு. வை.எம்.எம். யாப்ப	82,560	8,658

மகியங்கனை, வியாளுவ ஆகிய தொகுதிகள் 1981ல் பொறுப்பேற்கப்பட்டன. மகியங்கனை ஒரு பெரிய தொகுதியாக இருப்பதால் அங்கு இரு முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பண்டாரவளை விவசாய முகாமையாளராகிய திரு. சீ. காரியகே, தனது பதவியை 30, செப்டெம்பர், 1981லிருந்து இராஜினுமா செய்துவிட்டார். அவ்வெற்றிடத்திற்கென 1 டிசெம்பர் 1981ல் திரு. எஸ். எம். குணவர்த்தன நியமிக்கப்பட்டார்.

2. கமநல சேவை நிலையங்கள்

கமநல சேவைகள் நிலையங்களின் நிர்வாகத்திலும், பராமரிப்பிலும் முடிவடைந்த வருடத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தி காணப்பட்டது. எல்லைகள் வரையறுக்கப்படாத நிலையங்களில் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வேலிகள் அமைக்கப்பட்டன. கட்டிடங்களில் அவசியமான போது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வதிகார சபையின் சிபாரிசினுல் உரத்தை களஞ்சியத்தில் வைத்திருப்பதற்கான வசதிகள் இந்நிலையங்களிலுள்ள உரக் களஞ்சியங்களிற்கு செய்து கொடுக்கப்பட்டன. இந்நிலையங்களில் உபயோகிக்கப்படாதுள்ள வகைகள் கமநல சேவைகள் திணைக்களத்தினுல் ஏலத்தில் விடப்பட்டன. சேகரிக்கப் பட்ட ஏக்கருக்குரிய வரிகளில் ஒரு முன்னேற்றம் காணப்பட்டது.

இவ்வதிகார சபையானது, ஹப்புத்தளை, மகியங்கனை, ஊவா பறனகம, வெலிமட தொகுதிகளில் மேலதிக கமநல சேவை நிலையங்களை அமைப்பதற்கு சிபாரிசு செய்துள்ளது. இப்பிரேரிப்புக்களில், ஹப்புத்தளை, மகியங்கனை, ஊவா பறனகம ஆகிய பகுதிகளில் இந்நிலையங்களை அமைப்பதற்கு ஐ எப். ஏ. டி. இணங்கியுள்ளது. இது பதுளை ஒருங்கிணைப்பு கிராம அபிவிருத்தித் திட்டத்திற்கு நிதியளிக்கும் நிறுவனமாகும். 1982ல் ஆரம்பிப்பதற்கென உத்தேசிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் இவ்வமைப்பிற்கான பிரேரணை சேர்க்கப்பட்டுள்ளது.

கிராம விவசாயிக்கு சேவை செய்யும் முகவர்களைப் பொறுத்தவரையில் தொடர்புடைய திணைக்களங்கள் தேவையான உத்தியோகத்தர்களை நியமித்துவிட்டன. தொடர்புடைய திணைக்களங்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட, தொகுதி ரீதியாகவுள்ள சில வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சகல தொகுதிகளிலும் நியமிக்கப்பட்டுள்ள கமநல சேவைகள் குழுக்கள் திருப்திகரமாக செயலாற்றுகின்றன. தொழில் நுட்பக் குழுக்களும் கூட நன்கு செயற்படுகின்றன.

3. பிரதான பயிர்ச் செய்கைகள்-

தொகுதி	நெல் ஏக்கர்	உருளைக்கிழங்கு ஏக்கர்	காய்கறி ஏக்கர்	தேயிலை ஏக்கர்	கரும்பு ஏக்கர்
ஊவா பறனகம	3978	620	8979	4588	250
வெலிமட	3930	930	8464	8936	130
ஹப்புத்தளை	2783	258	434	14671	7296
பண்டாரவளை	2108	430	680	9528	530
மகியங்கனை	18503	—	315	—	204
வியாளுவ	6176	—	1400	4251	1646
மொத்தம்	37478	2238	20272	41874	10056

நெல்

பதுளை மாவட்டத்திலுள்ள பிரதான நெல் உற்பத்தித் தொகுதிகளான மகியங்கனை, வியாளுவ தொகுதிகளைப் பொறுப்பேற்றதுடன், இவ்வதிகார சபைக்கு இவ்விரு தொகுதிகளிலுமுள்ள நெற்பயிர்ச் செய்கையாளர்களை எதிர் நோக்கும் பிரச்சினைகளை அறிதல் சாத்தியமாயிருந்தது. பல் வேறு காரணங்களிற்காக பெரும்போக பயிர்ச் செய்கைகள் தாமதித்து ஆரம்பிக்கப்பட்டது. எனவே இவ்வதிகார சபையினுல் எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கை என்னவெனில், நீர் வழங்கும் திகதிகள், நாற்றுமேடை வேலைகளை ஆரம்பித்தல் போன்றவை தொடர்பாகத் தீர்மானிப்பதற்கு உரிய காலத்தில் பயிர்ச் செய்கைக் கூட்டங்களைக் கூட்டுதலாகும். விவசாய முகாமையாளர்கள், ஏனைய திணைக்களங்களின்

வெளிக்கள உத்தியோகத்தர்களுடன் இணைந்து, மழைகாலத்தின் ஆரம்பத்தில் பயிர்ச்செய்கைகளை ஆரம்பிப்பதன் முக்கியத்துவம் பற்றி விவசாயிகளுக்கு அழுத்தமாகக் கூறியுள்ளனர். இச் செயற்பாடுகளுடன் விவசாயிகளுக்கு உரிய காலத்தில் அவர்களின் தேவைகளைப் பெற்றுக்கொள்ளச் செய்தல் தொடர்பாகவும் இவ்வதிகார சபை நடவடிக்கையினை எடுத்துள்ளது. விவசாய முகாமையாளர்கள் ஏனைய உத்தியோகத்தர்களுடன் இணைந்து, மகியங்கனை வியாளுவ தொகுதிகளில் பல வருடங்களாக சுத்தம் செய்யப்படாதுள்ள நீர்ப்பாய்ச்சற் கால்வாய்களை சுத்தஞ் செய்வதற்கென பிரமதான இயக்கங்களை ஒழுங்கு செய்துள்ளனர். எப்படியிருப்பினும், 1981/82ன் வட கீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று ஏற்படாமல் இருந்தமை துரதிர்ஷ்டமானதாகும்.

ஏனைய நான்கு தொகுதிகளிலும் நெற்பயிர்ச் செய்கையில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டுள்ளது. இவ்வளர்ச்சி, 1980/81 பெரும்போகத்தில் வருடத்தின் முதற் காற்பகுதியில் காலநிலைமைகள் அனுகூலமாயில்லாத போதிலும் அதிக விளைவுகள் பெறப்பட்டதிலிருந்து அறியப்பட்டது. இவ்வளர்ச்சிக்கான காரணங்கள் என்னவெனில், உயர்ரக விதைப் பொருட்களின் பாவனை, உரத்தின் தகுந்த நேரப் பாவனை, கிருமிக் கட்டுப்பாடு என்பனவாகும். சுருங்கக் கூறின், ஒழுங்குபடுத்தப்பட்ட பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை விவசாயிகள் கடைப்பிடித்தமையே காரணமாகும். தொடர்புடைய சகல திணைக்கள உத்தியோகத்தர்களும் இதற்காகப் பாராட்டப்படவேண்டியவர்களாவார்கள்.

உருளைக்கிழங்கு

உருளைக்கிழங்கு உற்பத்தி கடந்த வருடத்தைப் போல இம்முடிவடைந்த வருடத்தில் திருப்திகரமானதாக இருக்கவில்லை. இதற்குப் பிரதான காரணம் என்னவெனில், வருடத்தில் பரவலாக ஏற்பட்ட அனுகூலமற்ற காலநிலை நியதிகளாகும்.

விதை நடுகைப் பொருள் விநியோகத்தைப் பொறுத்த வரையில் பதுளை மாவட்டத்தில் 1981/82 பெரும் போகத்திற்கு 1100 மெ. தொ. இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கினையும், 400 மெ. தொ. உள்ளூர் விதை உருளைக்கிழங்கினையும் வழங்குவதற்கு, மாவட்ட விவசாயக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது. உள்ளூர் விதை உருளைக்கிழங்கின் விநியோகம் ஒக்டோபர் 1981ல் ஆரம்பிக்கப்பட்டு, இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கு விநியோகம் செய்யத்தொடங்க முன்னர் முடிவடைந்துவிட்டது. இறக்குமதிசெய்யப்பட்ட விதைஉருளைக்கிழங்கின் விநியோகம் டிசெம்பர் 1981ல் ஆரம்பிக்கப்பட்டது. இது 1980/81 பெரும் போகத்திற்கென பெப்ரவரி 1981ல் விநியோகம் செய்யப்பட்ட இறக்குமதிசெய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கு விநியோகத்துடன் ஒப்பிடும்போது தெளிவான முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கினை விவசாயிகளுக்கு நவம்பர் மாத முதற் பகுதியில் கிடைக்கச் செய்தல் முக்கியமாகும். அத்துடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், 1982/83 பருவத்திற்கு வேண்டிய இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்குத் தேவைகளுக்குக் கோரிக்கை செய்யும்போது இதனை மனதிற்கொள்வார்களென நம்பப்படுகிறது.

மீண்டும் பதுளை அரசாங்க அதிபரை தலைவராகக் கொண்ட விதை உருளைக்கிழங்கு விநியோகக் குழு, விதை விநியோகத் திட்டம் தொடர்பாகக் கடந்த வருடத்தில் இருந்ததைப் போல் தீர்மானம் செய்தது. ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டத்தில் சில குறைபாடுகள் காணப்பட்டன.

சில விவசாயிகள் தமது பங்கு விதை உருளைக்கிழங்கினைக் கொள்வனவு செய்த விலையிலும் பார்க்கக் கூடிய விலையில் விற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விநியோகிக்கப்பட்ட விதை நடப்பட்டுள்ளதா, இல்லையா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளும் முகமாக வயல்களில் முன்னறிவிப்பற்ற சோதனைகளை மேற்கொள்ளல் வேண்டும். இதன் மூலம் இம் முறையற்ற விற்பனையைத் தடை செய்யலாம். எவ்விவசாயியாவது, தனது பங்கு விதையை விற்பனை செய்ததாகக் காணப்பட்டால் அவர் பெயர் நீக்கப்படுவதுடன் இவ்விடயம் தொடர்பாக விவசாய அடையாள அட்டையில் குறிப்பிடல்வேண்டும். இவ்வதிகார சபையானது, விதை உருளைக்கிழங்கு விநியோகம் தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டத்திலுள்ள பிழைகளைத் திருத்துவதற்கான முயற்சிகளை எடுக்கும்.

காய்கறிகள்

இங்கும் இவ்வருடத்தில் ஏற்பட்ட அனுகூலமற்ற காலநிலைமைகள் காய்கறி உற்பத்தியைப் பாதித்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது பயிரிடப்பட்ட பரப்பளவு குறைவாக இருப்பதுடன், உற்பத்தியிலும் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஏனெனில் தீர்மானிக்கப்பட்ட விலைகள் திருப்திகரமாக இருந்ததினால், காய்கறிகளின் சந்தைப்படுத்தல் தொடர்பாக குறைவான முறைப்பாடுகளே காணப்பட்டன.

கரும்பு

கரும்புப் பயிர்ச் செய்கையின் கேள்விக்கும், ஊக்கத்திற்கும் காரணம் என்னவெனில், வருடத்தின் ஆரம்பப் பகுதியில் சந்தையில் காணப்பட்ட சீனியின் உயர்ந்த விலையாகும். எனினும் இவ்வூக்கம், சீனி, சர்க்கரை விலைகளில் ஏற்பட்ட விலை வீழ்ச்சியினால் குறைந்துவிட்டது. வருடத்தின் ஆரம்பப் பகுதியில் தனியார் பிரிவினால் ஏற்படுத்தப்பட்ட சந்தையினால் ரூபா 500க்கு மேலாக இருந்த ஒரு தொன் கரும்பு, சீனி விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக ரூபா 175க்குக் குறைந்துவிட்டது. அபிவிருத்தி அடையாதுள்ள கரும்புச்செய்கையை புனரமைக்கும் நோக்குடன் இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்திலிருந்து நல்ல தரமான கரும்பு வெட்டுத்துண்டுகளை வழங்குவதற்கான இவ்வதிகார சபையின் முன்வருதல்கள் தோல்வியையே கண்டுள்ளன. ஏனெனில் விவசாயிகள் நல்ல தரமான கரும்பு வெட்டுத்துண்டுகளை கூட்டுத்தாபன விலையில் கொள்வனவு செய்ய விரும்பவில்லை. மகியங்கனையில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள ஒரு கிராமத்திற்கு 10 மெ. தொ. நல்லரக கரும்பு வெட்டுத் துண்டுகளை இலவசம் செய்தல் தொடர்பாக இவ்வதிகாரசபை, இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தியது. இக்கரும்பு வெட்டுத்துண்டுகள், கரும்பு நாற்று மேடைகளைத் தொகுதியில் உருவாக்கும் நோக்குடன் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தேயிலை

சிறிய தேயிலைச் செய்கையாளர்களை வளர்ச்சி அடையச் செய்யும் நோக்குடன், பல கருத்துள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் வளர்ச்சி மந்தமாகவே இருக்கிறது. விவசாய முகாமையாளர்கள், சில சிறு செய்கையாளர்களை அவர்களுடைய நிலத்துண்டுகளை திருப்திகரமாகப் பேணுவதில் ஊக்கம் அளிக்கக் கூடியதாயிருந்தது. அபிவிருத்தி மந்தமாக இருந்தபோதிலும் சிறு உடமையாளர்கள் தமது நிலங்களை அபிவிருத்தி செய்வதில் தற்போது அக்கறை காட்டுவதுடன், பண்படுத்தப்படாத நிலங்களும் துப்புரவாக்கப்படுகின்றன.

தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி அதிகார சபை தனது விரிவாக்கல் பதவியினரை, விரிவாக்கல் உத்தியோகத்தரை/தேயிலைப் பரிசோதகரை ஒவ்வொரு தொகுதிக்கும் நியமிப்பதன் மூலம் பலப்படுத்தியுள்ளது. இது சிறு உடைமையாளரை, அரசினால் வழங்கப்படும் பல்வகை மானியத் திட்டங்களைப் பயன்படுத்தி, தனது நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கு உதவியுள்ளது. எமது முகாமையாளர்கள், நெருங்கிய மேற்பார்வை தேவைப்படும் பகுதிகளை விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் தெரிந்துகொள்வதற்கு உதவியுள்ளனர். மேலும், சொந்தத்தைக் குறிப்பிடும் பத்திரங்களற்ற சிறிய தேயிலை நில உடைமையாளர்களுக்கு அத்தகைய அவசியமான பத்திரங்களை பெற்றுக்கொடுப்பதன் மூலம், செயற்பாட்டில் உள்ள பலவகை மானியத் திட்டங்களிற்கு உரிமையுள்ளவர்களாக்குவதற்கான உதவியினை இவ்வதிகார சபை செய்துள்ளது.

தேயிலை சிறு நில உடைமைகள் அபிவிருத்தி அதிகார சபையானது, பதுளை மாவட்டத்தின் சிறுநில உடைமையாளர்களின் அபிவிருத்திக்கென மாவட்ட ஒருங்கிணைப்புக் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் செயற்படுத்துவதற்கெனப் பல பிரேரணைகளைச் செய்துள்ளது. ஒருங்கிணைப்புத் திட்டத்தின் செயற்பாட்டின் மூலம் தேயிலைச் சிறு நில உடைமைகள் புனரமைப்பிற்கு அளிக்கப்பட்ட தொகை 54 மில்லியன் ரூபாவாகும். இதன் மூலம் பதுளை மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை நில உடைமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவும் தீர்க்கப்படுமென நம்பப்படுகின்றது.

4. உப உணவுப் பயிர்கள்- (ஏக்கர்)

தொகுதி	சோளம்	எள்ளு	கௌப்பி	மிளகாய்	நிலக்கடலை	சோயா அவரை
மகியங்கனை	9000	1300	2125	625	46	87
வியாளுவ	6326	435	220	286	28	37
ஹப்புத்தளை	200	—	200	110	200	—
ஊவாபறனகம	487	—	120	417	—	29
வெலிமட	20	—	36	63	01	41
பண்டாரவளை	150	10	—	40	20	05
மொத்தம்	16179	1745	2701	1541	295	199

மகியங்கனை, வியாளுவ தொகுதிகளில் உப உணவுப் பயிர்கள் மிகப் பெரியளவில் பயிரிடப்படுகின்றது. அவற்றுள் சோளம், கௌப்பி, குரக்கன், எள்ளு ஆகியன பிரதானமானவையாகும். இவ்வதிகார சபையின் கீழுள்ள ஏனைய 4 தொகுதிகளிலும் உப உணவுப் பயிர்கள் சிறிய அளவிலேயே பயிரிடப்படுகின்றன. இங்கு பயிரிடப்படும் வகைகள் சோளம், சோயா அவரை, நிலக்கடலை, கௌப்பி போன்றவையாகும்.

நிலவிலைத் திட்டத்தின் அறிமுகத்துடன் அநேக விவசாயிகள் உப உணவுப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு ஊக்கம் கொண்டுள்ளனர். மலிவான காய்கறிகள், விரிவான முறையில் பயிரிடப்படும் தொகுதிகளில், உப உணவுப் பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்துவதற்கு விவசாய முகாமையாளர்கள் எடுத்த ஒவ்வொரு முயற்சியும் வெற்றியை அளித்துள்ளது.

5. சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

விநியோகிக்கப்பட்ட பயிர்களின் எண்ணிக்கை—1981

தொகுதி	கோப்பி	மிளகு	கராம்பு	ஏலம்
பண்டாரவளை	54,000	—	50	200
வெலிமட	17,705	—	15	—
ஊவாபறனகம	20,000	—	—	—
ஹப்புத்தளை	30,313	42,700	10	—
வியாளுவ	94,435	1,460	100	—
மொத்தம்	216,453	44,160	175	200

சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. இதிலுள்ள பிரதான தடை என்னவெனில் சிறு ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களத்தில் காணப்படும் விரிவாக்கல் உத்தியோகத்தர்களினதும், நிதியினதும் பற்றுக்குறையேயாகும். இருந்த போதிலும் பதுளை மாவட்டத்திலுள்ள உயர் நிலப்பகுதிகளில் சிறு ஏற்றுமதிப்பயிர்ச் செய்கையில் சிறந்த அபிவிருத்தி காணப்படுகின்றது.

எமது முகாமையாளர்களினதும், சிறு ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களத்தினதும் முயற்சியுள்ளலேயே இது சாத்தியமாயிற்று. பயிர்களுக்கான கேள்வி அதிகரிப்பை சந்திப்பதற்காக, வி.அ.அ. சபையானது அதிக தனியார் நாற்று மேடைகளைத் தொகுதிகளில் அமைப்பதற்கு சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களத்திற்கு உதவி புரிகின்றது.

6. வீட்டுத் தோட்டங்கள்-

இம் முடிவடைந்த வருடத்தில் கீழே குறிப்பிடப்பட்ட பயிர்கள் விதியோகிக்கப்பட்டுள்ளன.

தென்னை	—	26,850
அப்பிள்	—	25
பலா	—	19,710
தோடை	—	3,867
எலுமிச்சை	—	910
மா ஒட்டுத் துண்டுகள்	—	696
அவகாதரே பியர்ஸ்	—	2,598
கொய்யா	—	20
கொடித் தோடை	—	505
முந்திரிகைப் பழம்	—	50
லெமன்	—	337

மேலே குறிப்பிடப்பட்ட பயிர்கள் தொடர்பாக வீட்டுத் தோட்ட பொட்டலங்கள் தொகுதிகளில் விற்கப்பட்டன. எமது முகாமையாளர்கள் ஏனைய திணைக்களங்களின் வெளிக்கள உத்தியோகத்தர்களுடன் இணைந்து, அவர்களுடைய தொகுதிகளில் வீட்டுத் தோட்டங்களின் தரத்தை முன்னேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். எமது முகாமையாளர்களின் முயற்சியினால் சரித்திரத்திலேயே முதல் முதலாக மகியங்கனையில் 1981/82 பெரும் போகத்தில் 20,000க்கு மேற்பட்ட தென்னம் நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இது உண்மையில் பாராட்டப்படவேண்டிய விடயமாகும். ஏனெனில் இங்கு ஒரு தென்னம் அபிவிருத்தி உத்தியோகத்தர் இல்லாத போதும் இத்தகைய செயல் நடைபெற்றுள்ளது.

சகல தொகுதிகளிலும் தாபிக்கப்பட்டுள்ள தனிய கிராமங்களில் விசேட அக்கறை செலுத்தப்படுகிறது. எனினும் சகல தொகுதிகளிலுமுள்ள வீட்டுத் தோட்டங்களின் வளர்ச்சிக்கு இன்னும் இடமுண்டு.

7. மிருக வளர்ப்பு-

கால்நடை பிரிவின் அபிவிருத்தியில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அரசாங்க வங்கிகளினால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட, வருடத்தின் ஆரம்பப் பகுதியில் பண்டாரவளை தொகுதி வரை விரிவுபடுத்தப்பட்ட வி.அ.அ. சபை விசேட கோழி வளர்ப்புக் கடன் திட்டம், கோழித்தீன் பற்றுக்குறையினாலும், அதன் விலை அதிகரிப்பினாலும் அதிக கஷ்டங்களை எதிர்நோக்கியது. மேலும் முட்டை விலை வீழ்ச்சியினாலும் கோழிப்பண்ணை விவசாயி இலாபமீட்டும் நோக்குடன் செயற்படுவது சாத்தியமற்றதாயிற்று.

8. உரமும், விவசாய இரசாயனப் பொருட்களும்

வி.அ.அ. சபையின் நிர்வாகத் திட்டத்தின் உதவியுடன் வருடம் முழுவதிலும் விவசாயிகளுக்குத் தேவையானளவு உரத்தை உரிய காலத்தில் வழங்கக்கூடியதாக இருந்தது. கடந்த வருடத்தில் விவசாயிகள் தமக்கு வழங்கப்பட்ட உரத்தின் தரத்தைப் பற்றி முறையிட்ட சந்தர்ப்பங்கள் சில உண்டு. இச்சந்தர்ப்பங்களில் எமது முகாமையாளர்கள் கொழும்பிலுள்ள வி.அ.அ. சபை அலுவலகத்திற்கு இத்தகைய இருப்புக்களின் மாதிரிகளை அனுப்பியதன் மூலம் தகுந்த நடவடிக்கையை எடுத்தனர். இம் மாதிரிகளின் ஆராய்ச்சியின் பின் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கென அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

விவசாய இரசாயனப் பொருட்கள் தொடர்பாக தொகுதிகள் போதியளவு இருப்புக்களைப் பெறக்கூடியதாக இருந்தது. கடந்த வருடத்தில் இருப்பில் இல்லாமை தொடர்பாக எத்தொகுதியிலும், எவ்வித முறையீடும் செய்யப்படவில்லை.

9. நீர்ப்பாசனம்

தொகுதி	பெரிய குளங்கள்			சிறிய குளங்கள்			அணைக்கட்டுகள்		
	அ	ஆ	இ	அ	ஆ	இ	அ	ஆ	இ
பண்டாரவளை	—	—	—	1	—	—	68	97	—
வெலிமட	2	—	—	4	12	5	1	16	12
ஊவாபறனகம	—	—	—	11	—	28	55	—	15
ஹப்புத்தளை	—	—	—	3	—	15	44	81	4
மகியங்கனை	4	—	4	14	12	2	36	13	—
வியாளுவ	—	—	—				85	165	50
	6	—	4	33	24	50	289	372	81

அ—செயற்படும் நிலையில் உள்ளது. ஆ—சிறிய திருத்த வேலைகள் அவசியமானவை இ—புனரமைப்பு அவசியம்.

வி.அ.அ. சபையின் கீழுள்ள 6 தொகுதிகள், மகியங்கனை வியாழுவ தொகுதிகளிலேயே பெரிய நீர்ப்பாசன வேலையின் பெரும் பகுதி செய்யப்படுகிறது. பதுளையின் உயர் பகுதிகளிலுள்ள தொகுதிகளில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் நீர்பாய்ச்சப்படுகின்றன.

கடந்த வருடத்தில் கமத்தொழிற் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழான சிறிய நீர்ப்பாசனத்தில் காணப்பட்டுள்ள வளர்ச்சி உண்மையில் பாராட்டப்பட வேண்டியதாகும். வி.அ.அ. சபையின் தலைவர் தமது தொகுதி விஜயத்தின் விளைவாக செய்த சிபாரிசிற்கிணங்க கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சினால் அளிக்கப்பட்ட குறை நிரப்பு வாக்கின் உதவியுடன் மதிப்பிடற்குரிய வேலை செய்யப்பட்டுள்ளது.

பதுளையின் உயர் பகுதிகளில் செயற்படுத்தப்பட்ட கிராம நீர்ப்பாசனப் புனரமைப்புத் திட்டம் நல்ல முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. இது தொடர்பாக எமது முகாமையாளர்கள் அடிக்கடி இத்திட்டங்களின் அபிவிருத்தி குறித்து பரிசீலித்து அறிக்கையிடுகிறார்கள். எனினும் 1980, 1981ஆம் ஆண்டுகளில் மகியங்கனை, வியாழுவ தொகுதிகளில் கி. நீ. பு. திட்டத்தின் கீழ் எத்திட்டமும் கையேற்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது எம்மால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் 1982ஆம் ஆண்டில் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கென மகியங்கனைத் தொகுதியிலிருந்து 6 அம்சங்களும், வியாழுவ தொகுதியிலிருந்து 4 அம்சங்களும் தெரியப்பட்டன. சிறிய, பெரிய நீர்ப்பாசனங்கள் இரண்டிற்கும் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதுடன், எமது முகாமையாளர்கள் ஏதாவது குறைபாடுகள் ஏற்படும்போது அவற்றை சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். இதனால் அத்திணைக்களங்கள் தேவையானபோது தகுந்த நடவடிக்கைகளை எடுத்தல் சாத்தியமாயிற்று. மேலும் இம் முகாமையாளர்கள் கமநல சேவைகள் திணைக்களத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் விவசாயப் பிரதிநிதிகள் ஆகியோருடன் சேர்ந்து, அப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினரின் சம்மதத்துடன் அவ்வருடத்தில் செய்யப்படவேண்டிய முக்கியமான வேலையைத் தெரிவு செய்தனர். கமநல சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட கேள்விச் சபைக்கு விவசாய முகாமையாளர்களை நியமித்ததன் மூலம், தமது தொகுதிகளிலுள்ள சிறிய நீர்ப்பாசன வேலையின் வளர்ச்சியை நன்கு கண்காணித்தல் சாத்தியமாயிற்று.

நீர்ப்பாசனத் துறையில் குறிப்பிடத்தக்களவு வேலை இன்னும் செய்யப்படாமல் எஞ்சியுள்ளது. எனவே, எதிர்காலத்தில், தொகுதிகளின் அபிவிருத்திக்கு மிகவும் அத்தியாவசியமானதாகவுள்ள நீர்ப்பாசன வேலையைப் பூரணப்படுத்துவதற்கு போதியளவு நிதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழங்குவார்களெனத் தீவிரமாக நம்பப்படுகிறது.

சிறிய நீர்ப்பாசனத்திற்கு அளிக்கப்பட்ட நிதி-

தொகுதி	வ.செ.கி. நிதி ரூபா	திணைக்கள நிதி ரூபா	குறைநிரப்பு மதிப்பீடு ரூபா	பூரணப்படுத்தப்பட்டவற்றின் மொத்த எண்ணிக்கை
பண்டாரவளை	239,070	24,189	200,000	21
வெலிமட	67,970	35,936	100,000	09
ஊவாபறனகம	91,770	49,727	150,000	15
ஹப்புத்தளை	426,802	17,595	200,000	36
மகியங்கனை	94,465	55,563	400,000	27
வியாழுவ	87,678	37,472	200,000	22
மொத்தம்	1,007,755	220,488	1,250,000	130

10. பண்ணை வலுவும், யந்திர உபகரணங்களும்

நீர்ப்பம்பிகள், தெளிதூவி விதை கருவிகள், கைதெளி கருவிகள், உழவு யந்திரங்கள் போன்ற விவசாய உபகரணங்களுக்கு தொடர்ந்தும் கேள்வி ஏற்பட்டு வருகின்றது. இவற்றை இவ்வதிகார சபை உற்பத்தியாளர்களால் அளிக்கப்படும் சலுகை விலைகளுக்குக் கொடுக்க வேண்டியுள்ளது. மண்வெட்டி, சூடடிக்கும் கருவிகள், கலப்பைகள் போன்ற ஏனைய உபகரணங்களின் தொகுதி ரீதியான தேவைகள் இம் முடிவடைந்த வருடத்தில் கமநல சேவைகள், கமத்தொழிற் திணைக்களங்களினூல் வழங்கப்பட்டுவிட்டன.

பின்வரும் அட்டவணை இவ்வதிகார சபையினூல் கடந்த வருடம் வழங்கப்பட்ட உபகரணங்கள் தொடர்பாகக் குறிப்பிடுகிறது.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

ஊவா மாகாணம் வருடாந்த அறிக்கை – 1981

தொகுதி	நீர்ப்பம்பிகள்	தெளிதூவு விதைகருவிகள்	கைதெளி கருவிகள்	இரண்டு சக்கர உழவுயந்திரங்கள்
பண்டாரவளை	—	03	40	08
வெலிமட	08	06	12	—
ஊவாபறனகம	10	18	20	—
ஹப்புத்தளை	02	05	31	—
மகியங்கனை	—	—	—	—
வியாளுவ	—	—	—	—
மொத்தம்	20	32	103	08

11. பயிற்சியும் விளம்பரமும்

கடந்த வருடம் மகியங்கனை, வியாளுவத் தொகுதிகளிலுள்ள பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களுக்கு இவ்வதிகார சபையின் பயிற்சி, விளம்பரப் பிரிவினால் தொகுதிரீதியான அடிப்படைப் பயிற்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது. மேலும் இவ்வருடத்தில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்கு வீட்டுத் தோட்டங்களை அமைத்தலும், ஒழுங்குபடுத்தலும் தொடர்பாக பிந்துனுவெவ அரசாங்கப்பண்ணையில் கமநல சேவைகள் திணைக்களத்தினால் பயிற்சி அளிக்கப்பட்டது.

விவசாயிகள் பயிற்சித் திட்டம் தொடர்பான பயிற்சி வகுப்புக்களை தொகுதிரீதியாக ஒழுங்குபடுத்துவதில் எமது முகாமையாளர்கள் கமத்தொழிற் திணைக்களத்துடன் இணைந்துள்ளனர்.

12. கடனும், காப்புறுதியும்-

எமது பொறுப்பிலுள்ள தொகுதிகளின் கிராமிய விவசாயிகளுக்கு நீர்ப்பம்பிகள், தெளிகருவிகள் போன்ற விவசாய உபகரணங்களைக் கடனுக்கு வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுகிறது. இக் கடன்களின் மீளச் செலுத்துகை திருப்திகரமானதாக இருக்கிறது. இதற்குப் பிரதான காரணம் என்னவெனில், தொகுதிகளின் முகாமையாளர்கள் இத்திட்டங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் மிக்க கவனத்துடன் தெரிவு செய்யப்பட்டமையேயாகும்.

மகியங்கனை, வியாளுவ தொகுதிகளை பொறுப்பேற்றது முதல், இத்தொகுதிகளில் தற்போதுள்ள கடன் திட்டங்களை விரிவுபடுத்தும் நோக்குடன், இவ்வதிகார சபையின் உத்தியோகத்தர்களால் கடன் செலுத்தத் தவறியமை தொடர்பாக ஒரு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. மகியங்கனையிலும், குறைந்த அளவில் வியாளுவவிலும் கடன் கொடுக்கத் தகுதியுள்ள விவசாயிகளைத் தெரிவு செய்தல் இலகுவானதல்ல என அறியப்பட்டுள்ளது. ஏனெனில், கடன் பெற்ற ஒவ்வொரு விவசாயியும் பல்வேறு காரணங்களிற்காக இக்கடனை மீளச் செலுத்தவில்லை. எப்படியிருப்பினும், இப் பிரச்சினை அவதானமாகக் கவனிக்கப்படுவதுடன், கடன் செலுத்தத் தவறியவர்களை மிகவும் விரைவாக மீண்டும் ஒரு தடவை கடன் பெறத் தகுதியுள்ளவர்கள் ஆக்குவதற்கென ஒரு திட்டத்தை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெலிமட, ஊவா பறனகம, பண்டாரவளை, ஹப்புத்தளை தொகுதிகளில் பண்ணை ரீதியாக விதை உருளைக்கிழங்கிற்கான களஞ்சியசாலைகளை அமைப்பதற்கென ஒரு கடன் திட்டத்தை செயற்படுத்துதல் தொடர்பான பேச்சுவார்த்தைகள் அரச வங்கிகளுடன் நடாத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் விதை உருளைக்கிழங்கினை களஞ்சியப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடுமென நம்பப்படுகிறது.

13. சந்தைப்படுத்தல்

ஊவா பறனகம, வெலிமட பகுதிகளில் காய்கறிகளை விற்பனை செய்ய முடியாதிருத்தல் தொடர்பான முறைப்பாடுகள் கடந்த பருவத்தை விடக் குறைந்துவிட்டது. இற்றிலை உற்பத்தி வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டிருக்கலாம். காய்கறிகளின் ஏற்றுமதி தொடர்பாக பல தொடர்புகளும், பேச்சுவார்த்தைகளும் நடாத்தப்பட்ட போதும் இதுவரை எம் முன்னேற்றமும் காணப்படவில்லை.

உப உணவுப் பயிர்களின் சந்தைப்படுத்தல் தொடர்பாக, இவ்வதிகார சபையினால், சில தொகுதிகளில் நிலவிலையில் நெற் சந்தைப்படுத்தல் சபையின் மூலம் உப உணவுப் பயிர்களை கொள்வனவு செய்விப்பதன் மூலம் தனி வியாபாரிகளிடையே ஓரளவு போட்டியினை உண்டுபண்ணுதல் சாத்தியமாயிற்று. மகியங்கனைத் தொகுதியில், நாகதீபத்திட்டத்தின் கீழ் சோயா அவரையை விற்பனை செய்தலிலும் பொறுத்தவரையில் விவசாயிகள் தம் சிறுபோக சோயா அவரையை நிலவிலையில் அல்லது அதிலும் கூடிய விலைபோக விற்பனை செய்யக் கூடியதாயிருந்தது. இவ்வதிகார சபை நெற்சந்தைப்படுத்தல் சபையுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளே இதற்குக் காரணமாகும்.

13. பொது-

வி.அ.அ. சபை கடந்த வருடங்களைவிட இவ்வருடத்தில் ஊவா தொகுதிகளில் விவசாய இணைப்பு வேலைகளை அதிக பயனுடையதாக செய்துள்ளது. இவ்விதம் செய்யப்படுவதற்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவமும் அறிவுமே காரணமாகும்.

வி.அ.அ. சபை உத்தியோகத்தர்களின் கடினமான வேலையும், அர்ப்பணிப்பும் பாராட்டப்பட வேண்டியனவாகும். தமது முழுமையான ஒத்துழைப்பையும், தொடர்ச்சியான உதவியையும் அளித்த பல்வகைப்பட்ட திணைக்களங்கள், தாபனங்கள் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நடவடிக்கைகளை தொகுதி ரீதியாக செயற்படுத்துவதற்குத் தலைவரினால் எனக்கு அளிக்கப்பட்ட ஊக்கமும், ஆலோசனையும், வழிகாட்டல்களும் பாராட்டப்படவேண்டியனவாகும்.

அடுத்த வருடத்தில் இன்னும் சிறந்த விளைவுகளை எதிர் நோக்குகின்றேன்.

பீ. ஆர். பீ. பெரேரா,
மாகாணப் பணிப்பாளர் — ஊவா.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

வடமேற்கு மாகாணம்–வருடாந்த அறிக்கை 1981

தொகுதி	விவசாய முகாமையாளர் பெயர்	ஏக்கர்	பி. வ. குடும்பங்கள்
புத்தளம் மாவட்டம்			
ஆனமடுவ வடக்கு	என். நொனிஸ்	178,240	5,132
ஆனமடுவ தெற்கு	ஆர். எம். நிமால் பண்டார	177,920	15,151
சிலாபம்	பீ.ஏ.என்.பீ. பெரேரா (01-11-1981லிருந்து நியமிக்கப் பட்டார்)	98,432	14,396
நாத்தாண்டியா	ஏ.எம். சந்திரசேன	37,120	9,155
புத்தளம்	வீ.ஜீ.கியூ. பெர்னண்டோ (16-03-1981லிருந்து நியமிக்கப் பட்டார்)	204,800	7,610
வென்னப்புவ	எல். பத்திரான	27,840	14,580
குருநாகல் மாவட்டம்			
பின்கிரிய	டபிள்யூ.ஏ.என. விஜேசிங்க	67,840	16,432
தம்பதெனிய	சீ. வத்தேகெதர	58,560	15,806
தொடங்கஸ்லந்த	டி. ஜயசிங்க	52,960	14,201
கல்கமுவ	ரீ. எம். ஜயதிலக (01-05-1981லிருந்து நியமிக்கப் பட்டார்)	181,600	21,387
ஹிரியல	பீ. எம். எஸ். பண்டார	117,760	21,351
கட்டுகம்பொல	டபிள்யூ.எல். ஹெற்றியாராச்சி	67,200	14,959
குளியாப்பிற்றிய	கே.ஏ.எஸ். டபிள்யூ. பெரேரா	64,000	15,793
குருநாகல்	எஸ். பீ. றெக்காவ	40,320	10,786
மாவத்தகம	என்.எஸ்.எஸ்.கே. சேமசிங்க	49,920	14,671
நிக்கவரெற்றிய	எஸ்.ஏ.எல். சேனநாயக்கா	128,640	23,769
பண்டுவஸ்நுவர	கே.ஏ.டி. பீற்றர்	65,280	12,281
பொல்காவலை	ஈ.எம்.ஏ.பீ. எக்கநாயக்க (10.10.1981 லிருந்து நியமிக்கப் பட்டார்)	46,400	13,520
வாரியப்பொல	ரீ. பொறலெஸ்ஸ	76,160	13,069
யப்பகுவ	ஈ. எஸ். குணசேகர	166,720	21,689

1. பொது அறிவித்தல்கள்/தொகுதிகள்:

சிலாபம், புத்தளம் ஆகிய தொகுதிகள் 1981ன் கால் இறுதிப் பகுதியிலேயே கமத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டுவரப்பட்டன. இவ்விரு தொகுதிகளுக்கும் புத்தளம் ஒருமைப்படுத்தும் கிராம அபிவிருத்தித் திட்டத்தினுல் நிதி அளிக்கப்படுகின்றது.

பொல்காவலை, கல்கமுவ, சிலாபம், புத்தளம் தொகுதிகளில் விவசாய முகாமையாளர்களின் புதிய நியமனங்கள் செய்யப்பட்டன.

1981ல் சகல தொகுதிகளுக்கும் தலைவர் விஜயம் செய்தார்.

2. கமநல சேவை நிலையங்கள்/நிர்வாகப் பிரிவுகள்:

குருநாகல் மாவட்டத்தில் 52 கமநல சேவைகள் நிலையங்களும், புத்தளம் மாவட்டத்தில் 15 கமநல சேவைகள் நிலையங்களும் உள்ளன. 1982ல் புத்தளம் மாவட்டத்தில் 2 புதிய கமநல சேவை நிலையங்களும், குருனகல் மாவட்டத்தில் ஒரு புதிய நிலையமும் அமைக்கப்படவுள்ளன. இதற்குரிய நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம், கமத்தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சு ஆகியவற்றினுல் சம அளவில் அளிக்கப்படும்.

பிரதான உத்தியோகத்தர்களுக்கான சகல வெற்றிடங்களும் நிரப்பப்பட்டு விட்டன. எனினும், பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களுக்கான சில வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படாதுள்ளன. வேலை நீக்கம், முடிவுறுத்த பிந்திய விசாரணைகள் ஆகியவற்றினுலேயே இவை நிரப்பப்படாதுள்ளன. இவற்றுள் அநேகமானவை 1½—2 வருடங்களுக்கு மேலாக நடைபெறுவதால், கமநல சேவைகள் திணைக்களம் இவ் விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்ய வேண்டும். மேற்கூறிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமையால், மேற்கூறிய தகுதிகளில் அதிகளவு வேலை செய்யப்படாமல் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையங்களுக்கு வழங்கப்பட்ட அநேக உழவுயந்திரங்களும் றெயிலர்களும், வேலைக்குறைவினால் போதியளவு நிதியைப் பெறவில்லை. இது பிரதானமாக கமநல சேவைகள நிலையங்களிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட உழவுயந்திரங்களுடன் தனியார் உழவு யந்திரங்களின் கட்டணங்கள் கீழிறங்கியமையினால் ஏற்பட்டதாகும்.

மேற்குறிப்பிட்ட உழவு யந்திரங்களில் உபயோகிப்பதற் கென 24 மரக் கலப்பைகள் கமநல சேவைகள் திணைக்களத் தினூல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. தென்னங் காணிச் சொந்தக்காரர்கள், மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்கள் ஆகியோரால் இவ் உழவு யந்திரங்கள் உபயோகிக்கப்படும் என நம்பப்படுகிறது.

கமநல சேவைகள் நிலையங்களின் தொழில் நுட்பக் குழுக்கள் புறக்கணிக்கப்பட்ட காணிகளுக்கு விஜயம் செய்து, தம் நிலங்களை அபிவிருத்தி செய்யாதுள்ள சொந் தக்காரர்களையும், உடைமை செய்வோரையும் எச்சரிக்கை செய்கின்றனர். 6 மாத காலம் முடிவடைந்ததும் இப்புறக் கணிக்கப்பட்ட காணிகளில் சிலவற்றை சுவீகரிக்கத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

குண்டசாலையில் சில கமத்தொழில் விரிவாக்கல உத்தி யோகத்தர்கள் 2 வருட நெறியைப் பின்பற்றுவதால் அநேக தொகுதிகளில் இன்னும் இப் பதவியினர்க்கான வெற்றிடங் கள் காணப்படுகின்றன.

தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கால்நடை நோய் சிகிச்சை நிபுணர்கள் ஆகியோருக்கான சில வெற்றிடங்கள் 2 மாவட்டங்களிலும் இன்னும் காணப்படு கின்றன. தெங்குப் பயிர்ச்செய்கை, கால்நடை நோயிற்கான சேவைகள் ஆகியவற்றை முன்னேற்றுவதானூல், இந்திய மனங்கள் தொடர்புடைய அமைச்சுக்களால் செய்யப்படல் வேண்டும். இவற்றுட் சில வெற்றிடங்கள் 1½—2 வருடங் களுக்கு மேலாக நிரப்பப்படாமல் இருத்தல் வருத்தத்திற் குரிய விடயமாகும்.

3. பிரதான பயிர்ச் செய்கைகள்

நெல்:—

சிறு போக நெற்பயிர்ச்செய்கை இரு மாவட்டங்களிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. எனி னும் பெரும்போகத்தில் காணப்பட்ட அசாதாரண காலநிலை நியதிகளால் இத்தகைய முன்னேற்றத்தை இப் பெரும் போகத்தின் போது காண முடியவில்லை. முழு விஸ்தீரணத் தையும் பயிர் செய்வதற்கான ஒழுங்குகள் யாவும் செய்யப் பட்டபோதும், வருடத்தின் கால் இறுதிப் பகுதியில் ஏற் பட்ட குறைந்த மழை வீழ்ச்சியினால், அநேக வயல்கள் செய்கைபண்ணப்படவில்லை. விதை நெல்லிற்கு உயர்ந்த சந்தை காணப்பட்டதுடன், 80% தேவையை கமத்தொழிற் திணைக்களம் நிறைவேற்றி வைத்தது. சிறு போக விளைச்ச லில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டதுடன் கீழே நான் அவற்றின் ஒப்புநோக்கிய அறிக்கையினைத் தருகிறேன். சராசரி விளைவுகள்—குருணுகல் மாவட்டம்.

1979/80	பெரும் போகம்	58.66 புசல்கள்
1980/81	பெரும்போகம்	63.42 புசல்கள்
1980	சிறுபோகம்	61.67 புசல்கள்
1981	சிறுபோகம்	63.31 புசல்கள்

சராசரி விளைவுகள்—புத்தளம் மாவட்டம்

1979/80	பெரும் போகம்	46.32 புசல்கள்
1980/81	பெரும்போகம்	51.57 புசல்கள்
1980	சிறுபோகம்	27.50 புசல்கள்
1981	சிறுபோகம்	38.00 புசல்கள்

அநேகமாக ஒவ்வொரு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பிரிவிலும் விளக்க வகுப்புக்களும், உரப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. இப் பரிசோதனைகளின் விளைவாக, விவசாயிகள் சரியான உரக் கலவைகளைப் பயன்படுத்துவதற் குத் தூண்டுதல் அளிக்கப்படும் என நம்பப்படுகிறது.

விதை நெல் தொடர்பான தற்போதைய பிரசாரத் திட் டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றபோதும். அநேக விவ சாயிகள் தமது நெல்லை பாவனைக்கென விற்பனை செய் கிறார்கள்.

விநியோகிக்கப்பட்ட விதை நெல்	புத்தளம் மாவட்டம்	குருணுகல் மாவட்டம்
சிறுபோகம் 1981	1900 புசல்கள்	7892 புசல்கள்
பெரும்போகம் 1981	7250 புசல்கள்	25052 புசல்கள்

1981ல் மண்தாவர வெட்டியின் பாதிப்புக் குறைவாக இருந்தமை குறிப்பிடற்குரியதாகும். இந்நோயின் பாதிப்பு அதிகமாகக் காணப்பட்டால் அதனை எதிர்ப்பதற்கான ஒழுங்குகள் கமநலசேவைகள் திணைக்களம், கமத்தொழிற் திணைக்களம் ஆகியவற்றுல் செய்யப்பட்டுள்ளது.

சகல குளங்களிலும் பயிர்ச் செய்கைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் எல்லாப் பகுதிகளிலும் நீர் முகா மைத்துவச் செயல் முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

குருணுகல் மாவட்டத்தில், சிறுபோகத்தின்போது 170 குளங்கள் நீர் முகாமைத்துவத்திற்காக எடுத்துக் கொள்ளப் பட்டதுடன், 1981 பெரும்போகத்தின் போது, இது 249 குளங்களுக்கு அதிகரிக்கப்பட்டது. 1982ல் இதனை 500 குளங்களாக விரிவுபடுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

இரு மாவட்டங்களிலுமுள்ள எல்லா குளங்களுக்கும் பொறுப்பான செயலாளர்களுக்கும் சிறு குளங்களின் நீர் முகாமைத்துவம், பராமரிப்பு என்பன தொடர்பாக ஆரம் பப் பயிற்சி கொடுக்கப்பட்டது. 1980/'81ன் பெரும்போகம் சில குறிப்பிட்ட தொகுதிகளில் வெற்றிகரமாக அமையாத துடன், நீர் வழங்கும் குறிப்பிட்ட திகதிகளுக்குப் பின்ன ரும் கூட நீர் தேவைப்பட்டது. இதற்காக விவசாயிகளுக்கு 4" நீர்ப்பம்பிகளை வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளது.

தென்னை

புத்தளம், குருணுகல் மாவட்டங்களில் மேற்கொள்ளப் பட்ட புனரமைப்பு வேலை—

தென்னை தொடர்பான புனரமைப்பு திருப்திகரமாக இருப்பதுடன், 1981 பெரும்போகத்தின் போது ஏற்பட்ட தூர்திர்ஷ்டமான கால நிலைமைகள் ஏற்பட்டிருக்காவிட்டால், கூடிய விளைவுகளைப் பெற்றிருக்கலாம். சில குறிப்பிட்ட கம நல சேவைகள் நிலையங்களில் காணப்படும் தெங்கு அபி விருத்தி உத்தியோகத்தர்களின் பற்றுக்குறையினுல் விவசா யிகளுக்கான மானியம் தொடர்பாக முறையற்ற தாமதங்கள் ஏற்பட்டன.

எனினும் வி.அ.அ. சபைக்குத் தமது முழுமையான ஒத்துழைப்பை நல்கிய குருணுகல் டி. ஜீ. எம்., பிராந்திய முகாமையாளர்கள், சகல தெங்கு அபிவிருத்தி உத்தியோகத் தர்கள் ஆகியோருக்கு விவசாய முகாமையாளர்கள் சார் பில் எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

வடமேற்கு மாகாணம்–வருடாந்த அறிக்கை 1981

மாவட்டம்	விடயம்	ஏக்கர்	செலுத்திய தொகை ரூபா
புத்தளம்	புனரமைப்பு	6546	1,343,252-25
	மரங்களின் கீழ் நடுதல்	1478	988,642-01
	புதிய நடுகை	1890	1,865,885-31
	சேர்க்கைப் பயிரிடல்		
	கோப்பி	23	12,867-73
	மேய்ச்சல் நிலம்	12	7,100-00
	வறட்சி நிவாரணம்	667	340,343-60
	ஒரு ஏக்கரை விடக் குறைவானது	11	2,650-00
குருணாகல்	மரங்களின் கீழ்நடுதல்/மீளநடுதல்	3044	1,420,384-00
	புனரமைப்பு	18969	3,625,589-00
	சேர்க்கைப் பயிரிடல்		
	கோப்பி	415	269,714-00
	மிளகு	88	91,117-00
	கொக்கோ	48	28,245-00
	மேய்ச்சல் நிலம்	462	185,700-00

தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையானது, புத்தளம் மாவட்டத்திலுள்ள தென்னங் காணிச் சொந்தக்காரர்களுக்கு ஒரு குழாய்க் கிணறு மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. 1982ன் முதற் காற்பகுதியில் வேலையை ஆரம்பிக்கலாம் என நம்பப்படுகிறது.

நாற்று மேடைத் திட்டம்—

புத்தளம் மாவட்டம்—

1981 சிறுபோகத்தில் மொத்த வழங்கல்	196,564
1981 பெரும்போகத்தில் மொத்த வழங்கல்	453,132
மொத்தம்	649,696

தெங்குப் பயிர்ச் செய்கைச் சபை, தெங்கு ஆராய்ச்சி நிலையம் என்பவற்றால் பராமரிக்கப்படும் நாற்று மேடைகள் வெற்றிகரமாக அமைந்துள்ளதுடன், நடுகைப் பொருட்களை விநியோகம் செய்வதில் வி.அ.அ. சபையானது தனது ஒத்துழைப்பை எப்போதும் அளிக்கின்றது.

நாற்றுக்களுக்கான கோரிக்கை, எதிர்பார்த்ததிலும் பார்க்க கூடுதலாக இருந்தது. இதனை நிறைவேற்றுவதற்கு 1982ல் அதிக நாற்றுக்களை உற்பத்தி செய்யலாமென நம்பப்படுகிறது. சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களத்தினால் தென்னங் காணிச் சொந்தக்காரர்களுக்கும், வீட்டுத் தோட்டங்களிற்கும் பின்வரும் அளவுகளில் பயிர்கள் வழங்கப்பட்டன—

தொகுதி	கோப்பி	மிளகு	கொக்கோ	காரம்பு
தொடன்கல்லாத்தை	135,467	10,694	14,425	2,150
வாரியப்பொல	9,000	175	—	—
வென்னப்புவ	20,400	—	—	—
நாத்தாண்டியா	13,520	—	—	—
பின்கிரிய	22,110	2,860	—	—
பண்டுவஸ்நுவர	5,500	—	—	—
குருணாகல்	36,953	15,799	—	—
தம்பதேனிய	147,670	5,430	—	120
மாவத்தகம	40,290	31,980	—	—
குளியாப்பிற்றிய	79,078	720	—	2,960
பொல்காவலை	138,855	30,208	590	21,505

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் நாற்று மேடைகள் உயர்ந்த தரத்தில் இருந்ததுடன், தொடர்புடைய அவ்வத்தியோகத்தர்கள் பராட்டப்பட வேண்டியவர்களாவார்கள். எனினும் குருணாகல், புத்தளம் மாவட்டங்களில் வறட்சியான காலநிலைமைகளுடன், சிறு ஏற்றுமதிப்பயிர்கள் புனரமைப்புத் திட்டம் வெற்றிகரமானதாக இருக்கவில்லை. தொடர்ச்சியான, நீண்ட, வறட்சிக் காலநிலையினால் 1979/80ல் விநியோகிக்கப்பட்ட அநேக பயிர்கள் அழிந்துவிட்டன.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

வடமேற்கு மாகாணம்—வருடாந்த அறிக்கை 1981

நாற்று மேடைத் திட்டத்தின் கீழான வளர்ச்சி—குருநாகல் மாவட்டம்.

அமைவிடம்	'81ன் சிறு போகத்திற்கு வழங்குவதற் கென நாட்டப் பட்ட விதைகள்	1981 சிறு போகம் வரை வழங்கப்பட்ட நாற்றுக்கள்	81/82 பெரும் போகத்திற் கென பயிரிடப் பட்ட விதை	1981/82 பெரும் போகத்தில் வழங்கப்பட்ட நாற்றுக்கள்	82 சிறுபோகத் திற்கென பயிரி டப்பட்ட விதை
பின்கிரிய	24430	18365	49575	35669	49915
தொடன்கஸ்லாந்தை	34100	23732	51145	38751	48171
ஹெற்றிப் பொல	23720	16359	45000	37351	39825
இப்பகமுவ்	149550	85687	231094	159033	116060
கண்தெட்டிய	—	—	42320	21246	49729
குளியாப்பிற்றிய	27380	20497	57009	48670	48255
நிக்கவெரெற்றியா	32900	23085	47146	25346	28024
பொல்காவலை	36150	28073	45400	26954	22634
வாரியப்பொல	38350	24951	58242	27255	36889
வென்னெற்றுவ	26200	20740	49645	36923	36925

4. பழபயிர்கள்

கமத்தொழிற் திணைக்களம் பழ மானியத் திட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்டத்தில் வாழைப் பயிர்ச் செய்கையையும், புத்தளம் மாவட்டத்தில் மாம்பழப் பயிர்ச்செய்கையையும் அறிமுகப்படுத்தி இருக்கிறது. இது தொடர்பான ஆரம்பப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. எனினும், குருநாகல் மாவட்டத்தில் அன்னாசி, மா ஆகியவற்றையும், புத்தளம் மாவட்டத்தில் வாழை, அன்னாசி ஆகியவற்றையும் சேர்த்துக்கொள்வதற்கான வேண்டுதல் ஒன்று செய்யப்பட்டுள்ளது. கமத்தொழிற் திணைக்களம் ஆய்வுகளை மேற்கொண்டு சாத்தியமாயின் இப்பயிர்களையும் அறிமுகப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மா, எனைய பழப்பயிர்களுக்கான கோரிக்கை ஊக்குவிப்பை அளிப்பதுடன், அரசாங்க நாற்றுமேடைகள், தனியார் நாற்றுமேடைகள் ஆகியன இக்கோரிக்கையுடன் ஈடு கொடுக்க முடியாதுள்ளன. மானியத் திட்டத்தின் அறிமுகத்துடன், அதிக கோரிக்கை இவற்றிற்கு ஏற்படுவதுடன், நாற்று மேடைகளின் அளவுகளை அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கே. ஐ. ஆர். டி. பீ கல்கமுவவில் புதிதாக 10 ஏக்கர் தோட்டப் பயிர் நாற்று மேடைக்கு மூல தனமிட்டுள்ளதுடன், வாரியப்பொல நாற்றுமேடையை 5 ஏக்கருக்கு விரிவுபடுத்தியுள்ளது. குளியாப்பிற்றிய தொகுதியிலுள்ள காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் நாற்று மேடை வெற்றியைத் தந்துள்ளது.

5. உப உணவுப் பயிர்கள்—

	புத்தளம் மாவட்டம்	குருநாகல் மாவட்டம்
பெருமபோகம் 1979/'80	11357 ஏக்.	37,000 ஏக்.
பெரும்போகம் 1980/'81	17662 ஏக்.	67,480 ஏக்.
பெரும்போகம் 1981/'82	16191 ஏக்.	25,889 ஏக்.
சிறுபோகம் 1979	4158 ஏக்.	21,800 ஏக்.
சிறுபோகம் 1980	6638 ஏக்.	40,600 ஏக்.
சிறுபோகம் 1981	11706 ஏக.	53,136 ஏக்.

வெளிச்சந்தையில் உப உணவுப் பயிர்களுக்கு கூடிய விலைகள் காணப்படுவதால், அநேக விவசாயிகள் தற்போது இவற்றைப் பயிர் செய்வதற்கு ஆரம்பித்துள்ளனர். சிறுபோகத்தின் போது, குருநாகல் மாவட்டத்தில் மிகப் பெரிய அளவில் எள்ளு பயிரிடப்பட்டதுடன், விவசாயிகள் இதனை சந்தைப்படுத்துவதில் பிரச்சினையை எதிர்நோக்கினர். எனினும் நெற்சந்தைப்படுத்தும் சபையானது நில விலையில் முழு எள்ளையும் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தது பெரும்போகத்தின்போது ஏற்பட்ட தாமதிர்ஷ்டமான காலநிலைமைகளால், உப உணவுப் பயிர்கள் நல்ல விளைவைக் கொடுக்கவில்லை. சிறுபோக நெற்பயிர்ச் செய்கை சாத்தியமற்றதாகவுள்ள நெல் வயல்களில் உப உணவுப் பயிர்களைப் பயிரிடுமாறு இரு மாவட்டங்களிலும் அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளது. சிறுபோகத்தில் உப உணவுப் பயிர்களை செய்கை பண்ணுவதற்கு வேண்டிய நீரை இறைப்பதற்கு ஆழமற்ற கிணறுகளை அகழும்முகமாக விவசாயிகளுக்கு சகல உதவியும், தாண்டுதலும் அளிக்கப்படுகின்றது. விசேடமாக நஞ்சன் கன உயர் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கூடிய மிளகாய் விளைச்சலால், விவசாயிகள் சந்தைப்படுத்தலில் பிரச்சினையை எதிர்நோக்கினர்.

6. மர நடுகை

வட மேல் மாகாணத்திலுள்ள தொகுதிகளில் மர நடுகை இயக்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், வி. அ. அ. சபை, எனைய திணைக்களங்களுடன் இணைந்து இவ்வியக்கங்களுக்கு உதவி அளித்துள்ளது. இங்கும் ஏற்பட்ட வரட்சிக் காலநிலையினால் இம்மரநடுகை இயக்கங்கள் வெற்றிகரமானதாக இருக்கவில்லை.

7. மிருக வளர்ப்பு

உயர்ந்த கோழித்தீன் விலையினாலும், முட்டைகளின் குறைந்த விலையினாலும் கோழி வளர்ப்பு 60%க்கு மேலாகக் குறைந்துள்ளது. அநேக சிறிய கோழி வளர்ப்போர் முழுமையாகத் தமது பிரிவுகளை மூடவேண்டியிருந்ததுடன், வி.அ.அ. சபையினால் ஆரம்பிக்கப்பட்ட விசேட கடன் திட்டமும் தோல்வியையே கண்டது. எனினும் வருடத்தின் இறுதியில் முட்டைக்கு நல்ல விலைகள் காணப்பட்டதால், சில விவசாயிகள் மீண்டும் கோழி வளர்ப்பை ஆரம்பித்துள்ளனர். அநேக பெரிய விவசாயிகள் தமது உணவையே கலந்து போடுவதற்கு ஆரம்பித்து விட்டனர்.

ஆடி, எருமை ஆகியவற்றிற்கு சந்தை காணப்பட்டதுடன் அதனை அரசாங்கப் பண்ணைகளால் பூரணமாக நிறைவேற்ற முடியவில்லை. வி.அ.அ. சபையானது எங்கு சாத்தியமாக உள்ளதோ, அங்கு மிகுதியான காற்நடைகளை விநியோகம் செய்வதில் இணைந்து செயலாற்றியுள்ளது. என். எல். டி. பி. பால் சேகரிப்பதற்கென ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்தது. இது அதிக வெற்றியை அளித்துள்ளது.

8. பண்ணைவலுவும் யந்திர உப காணங்களும் வருடத்தில் விநியோகிக்கப்பட்டவை .

தொகுதி	நீர்ப்பம்பிகள்	கைதெளி கருவிகள்	2 சக்கர உழவு யந்திரங்கள்	தெளிவு கருவி
குருணைகல்	10	109	01	08
பண்டுவஸ்நுவர	05	29	10	—
தம்பதெனியா	01	—	15	—
கல்கமுவ	05	—	11	—
மாவத்தகம	02	—	02	—
நிக்கவரெற்றியா	27	47	14	01
பொல்காவலை	03	—	02	—
தொடன்கஸ்லாந்தை	06	27	01	—
வாரியப்பொல	55	64	—	—
பின்கிரிய	23	01	13	02
குளியாப்பிற்றிய	11	23	08	—
ஆனமடுவ வடக்கு	—	01	—	—
ஆனமடுவ தெற்கு	11	01	—	—
வென்னப்புவ	09	—	—	—
நாத்தாண்டியா	09	02	—	—
புத்தளம்	—	—	—	—

9. நீர்ப்பாசனம்—

கு. ஒ. கி அ. தி-

குருணைகல் ஒருங்கிணைப்பு கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழான நீர்ப்பாசன வேலைகளின் வளர்ச்சி—

திட்ட இலக்கு	500 குளங்கள்
அங்கீகரிக்கப்பட்ட குளங்களின் எண்ணிக்கை	188 ,,
பூரணப்படுத்தப்பட்ட குளங்களின் எண்ணிக்கை	78 ,,
அபிவிருத்தி செய்யப்பட்ட குளங்களின் எண்.	70 ,,

பு. ஒ. கி. அ- தி-

புத்தளம் ஒருங்கிணைப்பு கிராம அபிவிருத்தியினால் அளிக்கப்பட்ட நிதியின் உதவியுடன் 30 சிறிய நீர்ப்பாசன வேலைகளும், 1 பெரிய நீர்ப்பாசன வேலையும் ஆரம்பிக்கப்பட்டன. அநேக வேலைகளில் 75%ற்கு மேற்பட்ட முன்னேற்றம் காணப்படுவதுடன், 1982ன் முதற் காற் பகுதியில் இத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாய முகாமையாளர்கள் மேற்கூறிய பகுதிகளில் மாதாந்தக் கூட்டங்களை நடாத்தி, எடுத்துக்கொள்ளப்பட விருக்கும் வேலையின் விருத்தியையும், தன்மையையும் விளக்குவதற்காக நீர்ப்பாசனத் திணைக்களம், கமநலசேவைகள் திணைக்களம், பயிர்செய்கையாளர்கள் ஆகியோருடன் கூட்டுச் சேர்ந்துள்ளனர். செய்யப்பட்ட அபிவிருத்தி வேலைகள், அமுலாக்கத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் ஆகியவற்றை விவரமாகக் கொண்ட மாதாந்த அறிக்கைகள் வி. அ. அ சபையினால் திட்ட அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

சிறிய நீர்ப்பாசனம்—

நீர்ப்பாசனத் திணைக்களமானது, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினூடும், கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சினூடும் அளிக்கப்பட்ட நிதியின் உதவியுடன் சிறிய நீர்ப்பாசன வேலைகளின் புனரமைப்பினை மேற்கொண்டுள்ளது.

தொகுதிகளில் சிறிய நீர்ப்பாசன வேலைகள் முடிவுற்றால், அதிகளவு பரப்பளவை பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டுவருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

10. முடிவுரை—

வி.அ.அ. சபையின் தலைவர், ஒவ்வொரு தொகுதியினதும் அபிவிருத்தி தொடர்பாக, சகல தொகுதிகளையும் இவ் வருடத்தில் விஜயம் செய்துள்ளார். சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் வழிகாட்டல்களாக எடுக்கப்பட்டதுடன் எனக்கும், எனது பிரதி மாகாணப் பணிப்பாளர்களுக்கும், விவசாய முகாமையாளர்களுக்கும் வி.அ.அ. சபையின் வேலைகளை மேற்கொள்ளுவதில் அவர் அளித்த வழிகாட்டலையும், நகுந்த தலைமைத்துவத்தினையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இறுதியாக, அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைகளைப் பூரணப்படுத்துவதில் வி.அ.அ. சபையுடன் ஒத்துழைத்த சகல அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கூட்டுத்தாபனத் தலைவர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஜீ. ஏ. குமரகே,
மாகாணப் பணிப்பாளர்—வடமேல் மாகாணம்.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

மத்திய மாகாணம் வருடாந்த அறிக்கை – 1981

1. பொது தகவல்/தேர்தல் தொகுதி

தேர்தல் தொகுதி	விவசாய முகாமையாளர் பெயர்	ஏக்கர்	விவசாய குடும்பங்கள்
கண்டி மாவட்டம்	திரு. ஏ. வேரகொட	140,800	9,660
உடுதும்பறை	திரு. ஆர். எம். ரணவீர		
தெல்தேனியா	திரு. எம். விஜேதுங்க	38,432	10,190
ஹேவாகெட்ட	திரு. எச். குணசேகர	59,000	8,804
கலகெதற	திரு. கே. எ. அபயகோன்	30,720	9,126
குண்டசாலே	திரு. பி. எல். ஜினதாச	21,760	6,308
பாதடும்பறை	திரு. எஸ். எம். செனிவிரட்ன	33,280	8,353
ஹறிஸ்பத்துவ	திரு. எஸ்.எம்.எஸ். சுலைமான்	38,240	19,784
மாத்தளை மாவட்டம்			
மாத்தளை	திரு. டி. எஸ். கே. விதாரண	46,913	10,153
டம்புலை	திரு. ஆர்.டபிள்யூ.ஏ. எகெலபொல	177,280	20,348
லக்கல	திரு. என். கே. ரகின்டா	242,162	11,367
றத்தோட்டை	திரு. பீ. பி. ரத்னயக்கா	40,425	9,202

மீளாய்வு காலத்தில் 8 தேர்தல் தொகுதிகளான கலகெதற, குண்டசாலே, பாதடும்பற, ஹறிஸ்பத்துவ; மாத்தளை; டம்புல, லக்கல மற்றும் றத்தோட்டை அபிவிருத்தித் தொகுதிகளாக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. மாத்தளை மாவட்டத்தில் உள்ள நாலு தேர்தல் தொகுதிகளின் அபிவிருத்தி வேலைகளுக்குரிய செலவுகள் மாத்தளை திரட்டப்பட்ட கிராம அபிவிருத்தித் திட்ட செலவினத்தில் இருந்து செலவு செய்யப்படுகின்றது.

விவசாய அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் இந்த தேர்தல் தொகுதிகளுக்கு விஜயம் செய்து தொகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகளுக்குரிய வழிவகைகளை விளக்கிக் கூறியுள்ளார்.

கண்டி மாத்தளை மாவட்டங்களுக்கு இரு பிரதி மாகாண பணிப்பாளர்களை நியமித்ததோடு மாகாண நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஒழுங்கு, விவசாய அபிவிருத்தி அதிகார சபை இந்த இரு மாவட்டங்களிலும் விவசாய சம்பந்தப்பட்ட வேலைகளுக்குரிய பணிப்புரைகள், மேற்பார்வை, தொடர்பு வேலைகள் மேற்கொள்வதை இலகுவாக்கியுள்ளது.

லக்கல தேர்தல் தொகுதியே இந்த மாவட்டத்தில் பெரிய தொகுதியும் கண்டமான பிரதேசமுமாகும். இங்கு அபிவிருத்தி வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு ஒரு மேலதிக விவசாய முகாமையாளர் நியமிக்கவேண்டியுள்ளது. மேற்படி நியமனம் 1983ம் ஆண்டு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உடுதும்பறை விவசாய முகாமையாளர் 1981 ஜூன் மாதம் 30ந் திகதி பதவியில் இருந்து விலகிக் கொண்டார். இவரின் ஸ்தானத்திற்கு திரு. ஏ. எம். ரணவீர என்பவர் நியமிக்கப்பட்டு 1981 நொவம்பர் 15ந் திகதி பதவி ஏற்றுள்ளார்.

2. கமநல சேவைகள் நிலையங்கள் நிர்வாக கூறுகள்

மத்திய மாகாணத்தில் ஒரு கேவிஎஸ்ஸுக்குரிய விவசாயக் குடும்பங்கள் சராசரி 1000 ஆக தீர்மானிக்கப்பட்டுள்ளன. ஒரு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் 400 விவசாயக் குடும்பங்கட்கு சேவை செய்வார்.

சகல கே.வி.எஸ்.களும் சிறிய நீர்ப்பாசன வேலைகளில் பயிற்சி பெற்றுள்ளனர். சகல பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும் அவரவருக்குரிய இடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் ஒரு தொழில் நுட்ப உத்தியோகத்தரை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சகல கமநல சேவை நிலையங்களுக்கும் ஒவ்வொரு உழவு யந்திரமும் செயிலரும் வழங்கப்பட்டுள்ளன. கமநல சேவைகள் குழு நியமனங்கள் சகல தேர்தல் தொகுதிகளிலும் செய்யப்பட்டுள்ளன. விவசாய அபிவிருத்தி அதிகார சபை விவசாய முகாமையாளர்கள் சில குழுக்களின் தலைவர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குழுவிலும் 6 விவசாய பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கை விவசாய அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் நடை முறையிடல் வேலைகளில் விவசாயிகளையும் பங்குகொள்ளச் செய்வதேயாகும்.

சகல கமநல சேவை நிலையங்களுக்கும் தொழில் நுட்ப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும் இவைகள எதிர் பார்த்த அளவு தொழிற்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன். சகல நிலையங்களும் நல்ல முறையில் பேணப்படுவதுடன் நிதி நிலைமையிலும் திருத்தம் காணக்கூடியதாக இருக்கின்றது.

முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் உள்ளீடுகை பொருட்கள் விநியோகம் மற்றும் விரிவாக்க சேவைகளில் இவ்வருடம் கணிசமான அளவு முன்னேற்றம் காணப்படுகின்றன. இந்தப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் விவசாயிகட்கு மிகவும் பரீட்சார்த்தமானவர்களாகிவிட்டனர். கே.வி.எஸ்; சி ஓ; சிடிஓ; எம்ஈசி; புகையிலை உத்தியோகத்தர்கள் மத்தியில் இப்பொழுது நல்ல உறவு நிலவி வருகின்றது

3. பிரதான பயிர்ச்செய்கை

தொகுதி / கண்டி மாவட்டம்	நெல் ஏக்கர்	தேயிலை ஏக்கர்	தென்னை ஏக்கர்	சி.ஏ.ப. ஏக்கர்	புகையிலை ஏக்கர்	காய்கறி ஏக்கர்
உடுதும்பறை	15,820	12,720	223	4,639	1,444	972
தெல்தேனியா	4,700	1,121	4,250	4,750	1,100	700
ஹேவாகெற்ர	4,140	17,407	4,564	3,300	696	3,001
கலகெதற	3,292	1,547	3,306	3,827	—	—
குண்டசாலே	2,130	1,393	1,910	4,223	—	750
பாதடும்பறை	2,235	10,525	530	3,805	—	525
ஹறிஸ்பத்து	5,373	5,187	902	8,406	—	350
மாத்தளை மாவட்டம்						
மாத்தளை	3,461	2,063	1,599	4,250	560	2,500
டம்புல	17,111	—	6,599	1,115	7,470	3,571
லக்கல	13,945	8,192	1,263	—	698	2,611
றத்தோட்டை	4,015	10,078	1,357	8,645	—	159
மொத்த ஏக்கர்	76,222	70,233	26,503	46,960	11,968	15,139

நெல்

நெல் சாகுபடியில் சென்ற வருடத்திலும் பார்க்க இவ் வருடம் கைப்பிடிக்கப்பட்ட முறைகள் சிறந்தவையாக உள்ளன. திருந்திய இனவர்க்க விதைநெல் உபயோகம் அதிகரித்துள்ளது. பயிர்ச்செய்கைக்குழு கூட்டங்கள் சரியான காலத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு பயிர்ச்செய்கை நேர சூசியின் பிரகாரம் நீர் விநியோக திகதிகள் நிர்ணயிக்கப்பட்டன. மாரிய நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் நடைபெறும் பயிர்ச்செய்கை குழுக் கூட்டங்களில் விவசாயிகள் பங்கு மிகவும் போற்றுதற்குரியதாகும். ஆனால் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வரும் பயிர்ச் செய்கைக் குழுக் கூட்டங்களில் விவசாயிகள் பங்கு கொள்வது அவ்வளவு போற்றுதற்கில்லை.

சகல வயல்களிலும் நாற்று நடுகை மேற்கொள்ளப்பட்டன. அதே நேரத்தில் பயிர்ச்செய்கைத் தரா தரமும் உயர்ந்துள்ள மினிப்பே தொகுதியில் ஒரு ஏக்கருக்கு 100 புசலுக்கு மேல் அறுவடை பதிவு செய்யப்பட்டுள்ளது. மழைநீர் பயிர்ச்செய்கை மற்றும் சிறிய பாசனத்தின் கீழ்வரும் இடங்களில் ஏக்கருக்கு 45/55 புசல் வரையில்தான் கிடைத்துள்ளது. இவற்றில் இன்னமும் திருந்துவதற்கிடம் உண்டு. அடிப்படை மட்டத்தில் உள்ள விவசாய திணைக்கள விரிவாக்க உத்தியோகத்தர்கள் மெச்சத்தக்களவு கடமை புரிந்துள்ளார்கள். ஒவ்வொரு கேவிஎஸ் பிரிவிலும் பரீட்சார்த்த பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு, சரியான அளவு உரம், விதை பொருட்கள் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்கள் உபயோகம் பற்றிய விளக்கம் சகலருக்கும் கொடுக்கப்பட்டன. இதற்கு மேலாக விவசாய போதனாசிரியர்களினால் விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்புகளும் நடாத்தப்பட்டன.

ஏக்கருக்குரிய விளைச்சல்

காலபோகம் 80/81	மாத்தளை மாவட்டம்	கண்டி மாவட்டம்
	50.53 புசல்	55.64 புசல்
சிறுபோகம் 1980	—	58.03 புசல்
சிறுபோகம் 1981	59.83 புசல்	60.91 புசல்
காலபோகம் 79/80	65.21 புசல்	62.21 புசல்

உரத்தின் விலை அதிகரித்த போதிலும் உர உபயோகத்தில் வீழ்ச்சி ஏற்படவில்லை. அநேக விவசாயிகள் ஆரம்ப உரம் பாவிப்பது உற்சாகமூட்டக் கூடியதொன்றாகும். கமநல சேவைகள் நிலையங்களினூடாக வேண்டியளவு உரம் விநியோகிக்கப்பட்டன. விவசாயத் திணைக்களத்தினால் வேண்டியளவு விதை நெல் விநியோகிக்கப்பட்டன. இந்தப் பகுதியில் நாம் அடைந்த குறிப்பிடத்தக்க பெறுபேறு, விவசாய திணைக்களத்தினால் நெல் பயிரிடுவோருக்கு வழங்கியுள்ள அயராத அறிவுரைகளும் ஒத்துழைப்பினாலுமே என்றுதான் கூற வேண்டும்.

தேயிலை

சிறிய தோட்டங்கள் தொடர்ந்தும் கவனிப்பாரற்றே இருக்கின்றன. அதிகார சபையினால் சிறிய தோட்டங்களில் மறு நடுகையை மேற்கொள்வதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் அவ்வளவு பலன் கொடுக்கவில்லை. இதற்கு முக்கியமான ஒரு காரணம் உயர்ந்துகொண்டு போகும் செலவிற்கேற்றபடி பச்சைக் கொழுந்துக்கு விலை பெற முடியாதிருப்பதேயாகும். அரசாங்கத்தினால் நடாத்தப்படும் தேயிலைத் தொழிற்சாலைகள் கூட பச்சைக் கொழுந்திற்குரிய உத்தரவாத விலையினைக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றன. இது விற்பனை சராசரி விலை வீழ்ச்சியினால் என்றுதான் கூற வேண்டும். பச்சைக் கொழுந்திற்கு கொடுக்கப்படும் முற்பணங்கள் சரியான திகதிகளில் கொடுபடுவதில்லை. இ. அ. பெ. நோ. கூட்டுத்தாபனம் ஸ்திரமற்ற நிலையில் உள்ளது. இதற்கு எடுத்துக்காட்டக்கூடிய உதாரணம் ஹரிஸ்பத்து தொகுதி சிறிய தேயிலைத் தோட்டங்களாகும். சிறிய தோட்டங்களின் இன்றைய நிலைமை திருந்த வேண்டுமாயின் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் பெருந் தோட்டங்கள் உண்மையான முயற்சி எடுத்து சிறிய தோட்டங்களுக்குரிய கொடுப்பனவுகளை குறிப்பிட்ட திகதியில் கொடுத்தல், பச்சைக் கொழுந்து ஏற்றி இறக்குவதற்கு வாகன வசதி செய்தல், கொழுந்திற்கு உத்தரவாத விலை கொடுத்தல், போன்ற வற்றை செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் சிறிய தோட்டங்களின் தரம் உயர வழியுண்டு.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

மத்திய மாகாணம் வருடாந்த அறிக்கை – 1981

தென்னை

மத்திய மாகாணத்தில் தென்னை ஒரு வீட்டுத்தோட்ட பயிராகும்ம் வீட்டுத் தோட்டப்பயிர் என்பதற்காக இதன் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடக்கூடாது. இதனை அபிவிருத்தி செய்வதன்மூலம் சகல குடும்பங்களுக்கும் வேண்டிய தேங்காயில் தன்னிறைவு அடையச் செய்யலாம். இந்த மாவட்டத்தில் 1981ல் 142,525 தென்னம் பிள்ளைகள் விநியோகிக்கப்பட்டன. வரட்சி நிலவிய பொழுதிலும் இது ஒரு சாதனை எனவே கூறலாம். இவைகள் பாரிய தோட்டங்களுக்கன்றி வீட்டுத் தோட்டங்களுக்கே விநியோகிக்கப்பட்டன. வீட்டுத்தோட்டங்களில் இவைகளைப் பராமரிப்பது நீர் ஊற்றுவது போன்ற வேலைகள் இலகுவில் செய்யக் கூடிய தொன்றாகும்.

தென்னம் பிள்ளைகள் விவசாய திணைக்களத்தின் உப்ப லோகம பண்ணையில் இருந்தும் தென்னை பயிரிடும் சபையினது பல்லேகல நாற்றுப் பண்ணையில் இருந்தும் பெறப் பட்டன. தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மிகவும் சுறுசுறுப்பாக விவசாய முகாமையாளருடன் நெருங்கி ஒத்துழைந்து வந்தார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிறிய ஏற்றுமதிப் பயிர்கள்

தேர்தல் தொகுதி	கோப்பி	மிளகு	கொக்கோ	கராம்பு	சாதிக்காய்
உடுதும்பறை	35,000	14,000	—	3000	—
தெல்தேனியா	204,000	226,000	5600	4000	—
ஹேவாகெற்ற	48,000	51,000	13000	39000	1500
கலகெதற	102,040	158,300	40000	65500	3540
ஹறிஸ்பத்துவ	71,488	125,560	8478	24225	4750
குண்டசாலே	389,446	235,695	24045	10000	—
பாததும்பற	93,000	21,400	17200	10650	800
மாத்தளை	16,750	37,100	26500	7500	600
ரத்தோட்டை	27,000	44,000	14000	32000	575
மொத்தம்	986,724	913,055	148823	195875	11795

விநியோகிக்கப்பட்ட நடுகைப்

பொருள் தேர்தல் தொகுதி	கோப்பி	மிளகு	கராம்பு	சாதிக்காய்	கொக்கோ
உடுதும்பறை	8000	2000	350	—	—
தெல்தேனியா	51355	80070	4320	375	3905
ஹேவாகெற்ற	27125	38845	1850	520	1800
கலகெதற	27635	49730	5340	125	7940
ஹறிஸ்பத்து	31043	49210	4068	2750	2098
குண்டசாலே	21980	22618	2647	1276	3910
பாதகும்பற	12875	15425	5915	90	3385
மாத்தளை	12040	39015	1240	95	9155
ரத்தோட்டை	10415	20600	7150	165	6750
லக்கல	13000	9600	—	—	—
மொத்தம்	215468	327113	32880	5396	38943

மத்திய மாகாணத்தில் சிறிய ஏற்றுமதிப் பயிர்கள் வீட்டுத் தோட்டப் பயிர்களுடன் கலப்புப் பயிர்களாகவே பயிரிடப்படுகின்றன. பல தனியார் நாற்றுப் பண்ணைகள் தாபிக்கப்பட்டு செவ்வனே தொழிற்படுகின்றன. இவ்விடத்தில் நடுகைப் பொருட்கள் உற்பத்தியில் இந்த மாகாணத்திற்கு தேவைப்படுவனவற்றை இங்கேயே உற்பத்தி செய்யக் கூடிய வசதியுண்டு என்பதை நான் திடமாகக் கூறுவேன்.

வீட்டுத் தோட்டத்திற்கு வழங்கும் மானியம் இந்த மாகாணத்தில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளது. மேற் கொண்டு ஐ. ஆர். டி. பி.யின் உதவியுடன் ரத்தோட்டையில் ஒரு பொது நாற்றுப் பண்ணை ஆரம்பிக்கப்படவுள்ளது. ஒவ் வொரு தேர்தல் தொகுதியிலும் கோப்பி கப்பாத்து செய் யும் விதம் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. கண்டி மாவட் டத்திற்கு வேண்டிய சகல உத்தியோகத்தர்களும் நியமிக் கப்பட்டுள்ளனர். உடுதும்பறை மற்றும் ஹரிஸ்பத்துவா தொகுதிகளுக்கு தலைவரின் சிபார்சின் பேரில் மேலதிக உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்குரிய உரத்தினை சகல கம நல சேவைகள் நிலையங்களிலும் சேமித்துவைக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயிர்ச்செய்கைக் குழுக்கள் மூலம் சி.ஒ.ப. உரவகைகளை கைக்கடக்கமான 2கிகி/5கிகி பைக்கற்றுகளில் விநியோகிக்கத் திட்டம் தீட்டப்பட்டுள் ளது. கடந்த காலத்தில் பயிர்ச் செய்கையில் உரத்தின் பிர யோகம் மிகவும் குறைந்திருந்தபடியினால் உர உபயோகம் பற்றி விரிவான பிரசாரமும் மேற்கொள்ளப்பட்டது. மானி யத் திட்டத்தின் கீழ் மனுக்களைப் பரிசீலனை செய்யும் வேலை களில் தாமதம் ஏற்பட்டது. இருந்தும் மேலதிக விரிவாக்க உத்தியோகத்தர் ஒருவரின் நியமனம் இவற்றை துரிதப் படுத்தி தேங்கிக் கிடந்த மனுக்களை விரைவில் பரிசீலனை செய்யக் கூடியதாக இருந்தது. சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களத்தினைச் சேர்ந்த வெளிக்கள உத்தியோகத்தர்கள் தங்களின் கடமைகளை மிகவும் போற்றும் வண்ணம் நிறை வேற்றியதுடன் விவசாய முகாமையாளர்களுக்கும் தங்க ளின் நெருங்கிய ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளார்கள்.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

டத்திய மாகாணம் வருடாந்த அறிக்கை – 1981

புகையிலை பதனிடும் கொட்டில்

தேர்தல் தொகுதி	விஸ்தீரணம்	சிறியது	பெரியது	மொத்தம்	ஒரு போகத்திற்கு தேவைப்படும் விறகு தொன்
உடுதும்பறை	585	155	108	263	11,130
தெல்தேனியா	280	82	55	137	5,490
ஹேவாகெற்ற	276	42	61	103	4,950
மாத்தளை	—	—	—	—	—
டம்புல	893	100	199	299	14,940
லக்கல	213.5	50	64	114	5,340
	2346	429	487	916	41,850

மண் பாதுகாப்பு

தேர்தல் தொகுதி	கல்அணை கட்டு வடிகால்	ஏக்கர்
உடுதும்பறை	430	1004.6
தெல்தேனியா	128	148.0
ஹேவாகெற்ற	495	—

காடு வளர்த்தல்

தேர்தல் தொகுதி	இன்றுவரை	1981ல் விநியோகிக்கப் பட்ட மரங்கள்
உடுதும்பறை	246,350	61,300
தெல்தெனியா	67,735	8,000
ஹேவாகெற்ற	73,010	18,165
டம்புல	40,765	—
மாத்தளை	—	—
லக்கல	5,300	—
மொத்தம்	433160	87,465

விவசாய அபிவிருத்தி அதிகார சபை, சிலோன் ருபாக்கோ கம்பனி லிமிட்டட், புகையிலை பதனிடும் கொட்டில் உரிமையாளர் சங்கம், மண் பாதுகாப்புப் பகுதி விவசாய திணைக்கள புகையிலை விரிவாக்கப் பிரிவு, ஆகியவற்றுடன் ஆரம்பித்து வைத்துள்ள கலந்துரையாடலின் நிமித்தம் கணிசமான அளவு மண் பாதுகாப்பு வேலைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. எமது விவசாய முகாமையாளர்கள் இது சம்பந்தமான வேலைகளை மேற்பார்வையிட்டனர். மகிலப்பிட்டிய மெடு கொடைப் பகுதிகளில் எமது முகாமையாளர்கள் மேற்பார்வை செய்து முடிக்கப்பெற்ற நீர்வடி கால்கள் மற்றும் மண் பாதுகாப்பு கல் அணைகளைக் காணலாம்.

இத்தேர்தல் தொகுதிகளுக்கு வெளியில் இருந்து மேற்படி புகையிலை உலர்த்துவதற்குத் தேவைப்படும் விறகைக் கொண்டுவந்து விநியோகிக்க சிலோன் ருபாக்கோ கம்பனி உண்மையான முயற்சி எடுத்துள்ளது. உடுதும்பற தொகுதிக்கு தேவைப்பட்ட விறகை மேற்படி கம்பனி றன்தெனிகல என்னுமிடத்தில் இருந்து கொண்டுவந்து கொடுத்தார்கள். ஏற்றைய தொகுதிகளைப் பொறுத்தவரையில் கம்பனி அரச மரக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது. அதிகார சபை மேற்படி கம்பனிக்கு புகையிலை பதனிடும் தொகுதிகளில் விறகுகாலைகளை தாபிப்பதற்கு அறிவுரை வழங்கியுள்ளது. புகையிலை உலர்த்துவதற்கு விறகு உபயோகிப்பதுவே இத்தொகுதிகளில் உள்ள காடுகள் அழிக்கப்படுவதற்குக் காரணமாகும். புகையிலை பயிரிடும் இடங்களில் வீட்டுப் பாவனைக்குத் தண்ணீர் எடுப்பதும் கஷ்டமாக இருக்கின்றது.

வருங்காலத்தில் பாரிய அளவில் காடுகள் அளிக்கப்படுவதைத் தடுப்பதற்கு ருபாக்கோ கொம்பனியினரை உடனடியாக ஒரு பாரிய மரம் நடுகைத் திட்டத்தினை மேற்கொள்ளவற்புறுத்த வேண்டும். இதனை மனதில் கொண்டே அதிகார சபை ருபாக்கோ கொம்பனியுடன் கலந்துரையாடி 20 வருடங்களுக்கு தேவையான விறகை உற்பத்தி செய்யக் கூடிய மரநடுகை திட்டமொன்றை தயாரித்து வருகின்றது. ருபாக்கோ கம்பனி இத்திட்டத்தினை ஓரளவு ஏற்றுக் கொண்டுள்ளது. ஆரம்பத்திற்கு ஹேவாகெற்ற தொகுதியில் 250 ஏக்கர் தரிசு நிலம் இக்கம்பெனிக்கு 30 வருடங்களுக்கு மரம் நடுவதற்கும் வெட்டுவதற்குரிமையும் கொண்டுள்ளதாக குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. 1982ம் ஆண்டில் ஹேவாஹெற்ற தொகுதியில் மேலும் 250 ஏக்கர் நிலத்தில் மரம் நடுகையை மேற்கொள்ளத் தாண்டப்படுவர்.

இத்திட்டம் உடுதும்பறை மற்றும் லக்கல தொகுதிகளில் 1983ம் ஆண்டு இதே முறையில் நடைமுறையிட எத்தனித்துள்ளோம். சிலோன் ருபாக்கோ கம்பனியினர் அவர்களாகவே புகையிலை பதனிடும் கொட்டில்காரரை அவர்களுக்கு வேண்டிய விறகை அவர்களின் நிலங்களில் 3 வருடங்களில் உற்பத்தி செய்யும்படி வேண்டியுள்ளனர். இது அவ்வளவு வெற்றியைக் கொடுக்கவில்லை. பாரம்பரிய முறையினை விட்டு சூடாக்கப்பட்ட காற்றினைக்கொண்டு புகையிலை உலர்த்தும் முறை ஒன்றை கம்பனி கண்டுபிடித்துள்ளது. இதனால் 37 சதவீத விறகுப் பிரயோகத்தை சேமிக்கக்கூடியதாகவுள்ளது. நெல் உமி மற்றும் தும்புக்கழிவுகளில் கட்டிகள் செய்து அவற்றை விறகிற்குப் பதிலாக பாவிக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை கம்பனி ஆராய்ந்து தூண்டுதல் வேண்டும்.

காய்கறி

சிறு போக காலத்தில் நெல் வயல்களில் பெருமளவில் காய்கறி பயிரிடப்படுகின்றன. இதனால் சிலவேளைகளில் சந்தைப்படுத்தல் மற்றும் நல்ல விலை பெறுதல் போன்ற விட

யங்களில் சில கஸ்டங்கள் ஏற்படுகின்றன. இதற்கு உதாரணம் கடந்த 1981ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தக்காளி உற்பத்தியை எடுத்துக்கொள்ளலாம். நல்ல வேளையாக இக்காலத்தில் வி.அ.அ. சபை தலையிட்டு 103,000 கி-கி- தக்காளியினை அத்தனகலை, நாராகென்பிட்டியா ஆகிய இடங்களில் உள்ள அரசாங்கத்தினது தகரத்தில் அடைக்கும் தொழிற்சாலைக்கு கொள்வனவு செய்ய ஒழுங்கு செய்துள்ளது. பாரம்பரிய காய்கறி பயிர்ச் செய்கையை விட்டு உப உணவுப் பயிர் செய்கையைமேற்கொள்ளும்படி விவசாயிகளை விவசாய திணைக்கள விரிவாக்க உத்தியோகத்தர்கள் கேட்டு வருகின்றார்கள். உப உணவுப் பயிர்கட்கு எப்பொழுதும் சந்தைப்படுத்தல் வசதியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அதே நேரத்தில் அவைகளுக்கு களவிலைகளும் உண்டு. 1982ம் ஆண்டு ஜனவரி மாத முதல் கமநல சேவைகள் நிலையங்கள் உப உணவு பயிர்களை களவிலையில் கொள்வனவு செய்வதற்கும் வேண்டப்பட்டுள்ளது. உப உணவுப் பயிர்ச்செய்கைக்கு ஊக்கமளிக்கக் கூடியதொன்றாகும்.

மரநடுகை

கடந்த சில வருடங்களாக காடுகள் வெட்டப்படுவதினால் மண் அரிப்பு அதிகரித்துக்கொண்டே வருகின்றது. சகல நீர் நிலையங்களும் சிறு நீர்ப்பாசன குளங்களும் வற்றிக் கொண்டே போகின்றது. குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்படும் நிலை சில இடங்களில் உண்டு. பாரிய துர் அதிர்ஷ்ட விளை வைத்திடுப்பதற்கு திட்டமிட்ட மரநடுகை ஆரம்பித்தேயாக வேண்டும். 1981ம் ஆண்டு எதிர்பார்த்தளவு மரநடுகை நடை பெறவில்லை. இப்பொழுதும் மலைப் பிரதேசத்தில் சேனைப் பயிர்ச் செய்கை நடைபெறுகின்றது. அரசாங்க காடுகள் களவாக மரம் வெட்டுபவர்களால் அளிக்கப்பட்டு வருகின்றன. வன ஒதுக்கு பிராந்தியத்தில் எவரும் செல்வதற்கு முக்கியமாக புயலினால் அடித்து வீழ்த்திய மரங்களை அகற்றுவதற்கு எனச் செல்பவர்களை தடை செய்யவேண்டும் என நாம் சிபார்சு செய்கின்றோம்.

திட்டமிட்ட ஒரு காலத்திற்கு மர நடுகையை மேற் கொள்ள பெரும் தொகைப் பணத்தை மாத்தளை கிராமிய அபிவிருத்தித் திட்டம் ஒதுக்குவதற்கு முன்வந்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இதற்காக இரண்டு மர நாற்றுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. 1982ம் ஆண்டு கண்டி மாவட்டத்தில் மரநடுகையை மேற்கொள்ளும் ஒரு திட்டத்தை வன பரிபாலனப் பகுதி வகுத்துள்ளது.

உரமும் விவசாய இரசாயனமும்

கமக்காரர்களுக்கு உரமும் விவசாய இரசாயனமும் தாராளமாக கிடைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வி.அ.அ. சபை இந்த உள்ளிடுகைகள் கமக்காரர்கட்கு சரியான நேரத்தில் கிடைக்கின்றதா என்பதை கிரமமாக கவனித்து வருகின்றது. 1981ல் விலை அதிகரித்த போதிலும் உரத்தின் உபயோகத்தில் வீழ்ச்சி காணப்படவில்லை.

சிறிய நீர்ப்பாசனம்—1981ல் செலவு செய்யப்பட்ட தொகை

தேர்தல் தொகுதி	பன்முக வரவு செலவு நிதி	கமநல சேவை நிதி	அமைச்சின் விசேஷ நிதி	மொத்தம்	முடிவடைந்த வேலை
கண்டி மாவட்டம்	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	
உடுதும்பறை	488,950	35000	—	523,950	42
தெல்தேனியா	20,500	35000	100,000	155,500	13
ஹேவாகெற்ர	523,000	35000	125,000	683,000	31
கலகெதற	—	35000	185,000	220,000	17
குண்டசாலே	76,100	35000	150,000	261,100	16
பாதடும்பற	296,500	35000	200,000	531,500	41
ஹறிஸ்பத்துவ	—	35000	325,000	360,000	22
மொத்தம்	1,405,050	245000	1,085,000	2,735,050	182
மாத்தளை மாவட்டம்	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	
மாத்தளை	324,723	75000	180,000	579,723	38
டம்புல	227,500	75000	200,000	502,500	31
லக்கல	37,000	75000	—	112,000	9
றத்தோட்டை	—	75000	200,000	275,000	24
மொத்தம்	589,223	300000	580,000	1,469,223	101

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

மத்திய மாகாணம் வருடாந்த அறிக்கை – 1981

மத்திய மாகாணத்தில் சிறிய நீர்ப்பாசனம் முக்கிய பங்கு வகிப்பதினால் 1981ம் ஆண்டு சிறிய நீர்ப்பாசன குளங்களைத் திருத்துவதற்குரிய திட்டம் வகுக்கப்பட்டது. அணைக்கட்டுகள் குளங்கள் ஆகியவற்றைப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களின் கணக்கெடுப்பின் பிரகாரம் 3 பகுதிகளாக பிரிக்கப்பட்டன.

"அ" பகுதி—உபயோகிக்கக் கூடியவை

"ஆ" பகுதி—பழுதுபார்த்தல் செய்யவேண்டியவை

"இ" பகுதி—பூராவும் திருத்தி அமைக்கப்பட வேண்டியவை.

சேகரிக்கப்பட்ட தகவல்களில் இருந்து சிறிய நீர்ப்பாசன வேலைகளில் நிலைமை உடனடியாக கவனத்திற்கு எடுக்கவேண்டியதும் திருத்தி அமைக்கப்பட வேண்டிய தொன்றுகும் என கண்டுள்ளோம். வி.அ.அ. சபைத் தலைவர் மேற்படி இடங்களை நேரில் சென்று பார்த்ததின் பின் அவசர வேலைகளுக்கு விவசாய அபிவிருத்தி அதிகார சபை நிதி வழங்கியுள்ளது. கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு இதற்காக 1,665,000 ரூபாவை வழங்கியுள்ளது. திருத்த வேலைகள் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சம்பாஷித்து தயாரிக்கப்பட்ட முன்னுரிமை பட்டியலின் பிரகாரம் கமநல சேவைகள் நிணைக்களம் வேலைகளை மேற்கொண்டுள்ளது. சகல விவசாய முகாமையாளர்களுக்கும் மதிப்பீட்டுப் பிரதிகள் வழங்கப்பட்டு குறுக்கு வழியில் செல்லும் ஒப்பந்தகாரர்களின் மேல் கவனமாக இருக்கும் பிரகாரம் பணிக்கப்பட்டுள்ளனர். ஒதுக்கப்பட்ட நிதியினை உபயோகித்துக் கொடுக்கப்பட்ட வேலைப்பட்டியலில் குறிப்பிட்ட காலத்தில் கமநல சேவைத் திணைக்களம் கண்டங்களுக்கிடையில் நிறைவேற்றியுள்ளது. கண்டியில் பெறுபேறுகள் நல்லதாக இருந்த பொழுதிலும் மாத்தளையில் வேலைகளுக்கு வருடத்தின் இறுதியில்தான் பண வசதி செய்து கொடுக்கப்பட்டதன் நிமித்தம் குறிப்பிட்ட காலத்தில் முடித்துக்கொள்ள முடியவில்லை. 1982ம் ஆண்டுக்குரிய வேலைகள் குறிப்பிடப்பட்டு அதற்கான வேலைகள் ஜனவரி 1982லேயே ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளன.

மினிப்பே திட்டம்.

1ம், 2ம், 3ம், 4ம் பருவங்கள்

மினிபே கால்வாயின் நீளம் 48 மைலாகும். இது கண்டி ஹசலக்கவில் ஆரம்பித்து மாத்தளை, ஹந்துங்கமுவாவில் முடிவடைகின்றது. இக்கால்வாய் 15,000 ஏக்கர் நிலத்திறகு நீர்ப்பாசனம் வழங்குகின்றது. இந்த பாரிய திட்டம் பல வருடங்களாக கவனிக்கப்படவில்லை. முக்கியமாக இந்த கால்வாய் முழுப் பிரதேசமும் துப்புரவு செய்யப்பட்டு அணைக்கட்டுகளும் பெலப்படுத்த வேண்டும். சுவர்களும் மதகைகள் குறுக்கிடுவதற்கு வசதியான குறுக்கு வழிகளும் நிர்மாணிப்பதன் மூலம் அணைக்கட்டிற்கு பழுது ஏற்படாது தடுக்க முடியும். இதேபோன்ற ஒரு திட்டத்தினை கல்லோயாவினைத் திருத்துவதற்கு யு எஸ் ஏ ஐ டி. உதவியுடன் நீர்ப்பாசன நிணைக்களம் வகுக்க வேண்டும்.

திரும்ப குடியேற்றுதல்

டம்புல மற்றும் லக்கல தொகுதிகள் தவிர்ந்த மற்ற தொகுதிகள் யாவும் சனநெருக்கமுள்ளவைகளாகும். ஹறிஸ்பத்து தொகுதியே ஆகக் கூடிய சனத்தொகையைக் கொண்டுள்ள தொகுதியாகும். இங்கு 38,240 ஏக்கர் நிலத்தில் 136,690 பேர் வசிக்கின்றார்கள். இங்கு பயிர்ச்செய்கைக்கு 20,318 ஏக்கர்தான் உண்டு. இத்தொகுதியில் இருந்து மகாவலி பிரதேசத்திற்கு செல்வதற்கு அநேக விவசாயிகள் விரும்புகிறார்கள். சன நெருக்கடி ஒரு தேசிய பிரச்சினையாகும். இதனைக் கவனமாக கையாளுதல் வேண்டும். மிகவும் சனத்தொகை கூடியுள்ள இடங்களில் அதனை குறைப்பதற்குரிய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டும். இதனைச் செய்யாதவிடத்து மக்களின் தாராதாரத்தை உயர்த்த முடியாத நிலை ஏற்படும்.

முடிவுரை

தொகுதிகளில் கிராமிய விவசாயியின் தராதரத்தை, விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் பிரசன்னம் உயர்த்தியுள்ளது என்று கூறுவதில் நான் சந்தோஷப்படுகின்றேன்.

மாவட்ட மற்றும் தொகுதி மட்டங்களில் தொழில்படும் உத்தியோகத்தர்களுக்கு ஏனைய திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களிடம் இருந்து கிடைத்துள்ள வரவேற்பு, வளைந்து கொடுக்கும் மனப்பான்மை, ஒத்துழைப்பு ஆகியவை மிகவும் உற்சாகத்தையும் புத்துணர்வையும் கொடுத்துள்ளது.

சகலரின் நன்மைக்காக தற்பொழுது நிலவிவரும் நம்பிக்கையும் பொது நோக்கும் சகல உத்தியோகத்தர்களின் மத்தியிலும் தொடர்ந்து நிலவவேண்டும். விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கங்களும் அபிலாசைகளும் விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் கடமைகளிலும் பொறுப்புகளிலும் தப்பபிப்பிராயங்களோ அல்லது இரட்டைக் கருத்துக்களுக்கோ இடம் இல்லை.

விவசாய முகாமையாளர்களின் தொழில் இலேசான தொன்றல்ல. அவர்கள் அனைவரின் அயராத கடமையுணர்வுக்கு எனது பாராட்டை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

எனது கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பை வழங்கியுள்ள பாராளுமன்ற அங்கத்தவர்கள், அரசாங்க அதிபர்கள் மற்றும் பொது சேவை ஊழியர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடைசியாக தொகுதிகளில் வேலைகளை ஒழுங்கு செய்து தொழில்படுத்துவதற்குரிய பணிப்புகளை செவ்வனே நிறைவேற்ற தலைவர் அவர்கள் வழங்கிய மதி உரைகட்கும் வழி நடத்தலுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பற்றிக் சி. அபயநாயக்கா,
மாகாணப் பணிப்பாளர், மத்திய மாகாணம்.

03—03—1982.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

வட மாகாணம் வருடாந்த அறிக்கை–1981

(1) பொது அறிவுறுத்தல்கள்/தொகுதிகள்

தொகுதிகள்	செயல்முறை ஆரம்பம்	கமத்தொழில் முகாமையாளர்கள் பெயர்கள்	காணி விஸ்தீரணம் சதுர மைல்கள்	ஏக்கர்கள்	சனத்தொகை	விவசாயக் குடும்பங்கள்
கிளிநொச்சி வலயம் 1	1.2.81	கே. அரசகுலசிங்கம்	242	154,880	18,335	5,015
கிளிநொச்சி வலயம் 11	1.2.81	எஸ். சண்முகம்	296	189,440	55,680	11,358
முல்லைத்தீவு வலயம் 1	1.2.81	என். செல்வராசா	458	293,120	56,625	9,885
முல்லைத்தீவு வலயம் 11	1.11.81	வீ. சிறீஸ்கந்தராஜா	565	361,600	20,887	6,830
மன்னார் வலயம் 1	1.6.81	எஸ். பீ. பிகுராடோ	270.6	173,184	54,373	8,013
மன்னார் வலயம் 11	1.6.81	எம். சந்தாம்பிள்ளை	454.4	290,816	42,568	5,901

இவ்வருடத்தில் வட மாகாணத்திலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் தொகுதிகள் வி.அ.அ. சபையின் கீழ் கொண்டுவரப்பட்டன. இத்தொகுதிகளின் பரந்துபட்ட தன்மை காரணமாக ஒவ்வொரு தொகுதிக்கும், அவற்றின் விவசாய சமூகத்திற்கு சிறந்த முறையில் சேவையளிக்கும் முகமாக இரு விவசாய முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு பொருத்தமான அபேட்சகரை நியமிப்பதில் ஏற்பட்ட கஷ்டத்தினால் முல்லைத்தீவு வலயம் 11ற்கு முகாமையாளர் வருடத்தின் கால் இறுதிப் பகுதியிலேயே நியமிக்கப்பட்டார்.

பிராந்திய நிர்வாகத்தைப் பன்முகப்படுத்தும் நோக்குடன், அரை ஆண்டுப் பகுதியில் வவுனியாவில் ஒரு பிராந்திய முகாமைப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டார். இப்பதவிக்கு திரு. ஐ. எம். வேதநாயகம் நியமிக்கப்பட்டார்.

வவுனியா தொகுதி 1982ஆம் ஆண்டிலிருந்து கூவிகரிக்கப்படும். இதுகூட ஒரு பெரிய தொகுதியாக இருப்பதால் இரு முகாமையாளர்கள் நியமிக்கப்படுவர்.

மேலே குறிப்பிடப்பட்ட சகல தொகுதிகளையும் வி. அ. அ. சபையின் தலைவர் இவ்வருடத்தின் மூன்றாம் காற்பகுதியில் விஜயம் செய்ததுடன் விவசாய அபிவிருத்திக்கு சில குறிப்பிட்ட வழிப்படுத்தல்களையும் கூறினர்.

(2) கமநல சேவைகள் நிலையங்கள்/நிர்வாகப் பிரிவுகள்

தொகுதி	கமநல சேவைகள் நிலையங்களின் எண்ணிக்கை	கமநல சேவைகள் திணைக்களம் (டி.ஓ.) உ.உ.	உ.உ. (சீ.ஓ.)	கமத்தொழில் திணைக்களம் சி.போ.	கே. வீ. எஸ். (எ.ஐ.)	விவசாயக் குடும்பங்கள் ஒரு ப. உ.	ஒரு கே. வி. எஸ்.ற்கு
கிளிநொச்சி வலயம் 1	3	2	10	03	13	501	385
கிளிநொச்சி வலயம் 11	4	3	17	06	21	668	541
முல்லைத்தீவு வலயம் 1	6	5	15	07	17	659	581
முல்லைத்தீவு வலயம் 11	3	3	11	03	12	621	569
மன்னார் வலயம் 1	5	5	12	06	19	668	421
மன்னார் வலயம் 11	5	4	15	05	19	393	310
மொத்தம	26	22	80	30	101	587	465

வி. அ. அ. சபையின் கீழுள்ள தொகுதிகளின் 26 கமநல சேவைகள் நிலையங்களில் கிளிநொச்சி க.ந.சே.நி. ஒரு மாதிரியாகக் கருதப்படலாம். 31.12.81ல் இந்நிலையம் நிரந்தர வைப்புக்கணக்கில் 250,000 ரூபாவையும் சேமிப்புக் கணக்கில் 22,450 ரூபாவையும் கொண்டிருந்தது. 1981ஆம் ஆண்டில் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வருமானம் பின்வருமாறு:—

	ரூபா சதம்
உரம்	29056-16
விவசாய இரசாயனப் பொருட்கள்	4126-49
தென்னம் நாற்றுக்கள்	5004-50
ஏனைய விதைப் பொருட்கள்	2938-50
இரு உழவு யந்திரங்களிலிருந்து வருமானம்	34985-54

இந்நிலையத்தின் நிர்வாகம் தொடர்பாக அறிந்துகொள்வதற்காக, வட மாகாணத்தின் சகல பிராந்திய உத்தியோகத்தர்களும் இங்கு விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் ஏனைய கமநல சேவைகள் நிலையங்களும் தம்மைத்தாமே கவனிக்கக் கூடிய நிலையில் திறமையாக இயங்க முடியும்.

இவ்வருடத்தில் சகல நிலையங்களும் திருப்திகரமாகப் பேணப்பட்டுள்ளன. சில பிராந்திய உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் எமது கடமைகளைப் புறக்கணிப்பதால், விவசாயிகளுக்கு ஒரு சிறந்த சேவையை அளிக்கத் தவறுகிறார்கள். இது வருத்தத்திற்குரியதோர் விடயமாகும். முல்லைத்தீவு தொகுதியில் அவதானிக்கப்பட்ட பல்வகைப்பட்ட குறைபாடுகளினால், ஒக்டோபர் 1981ல் சகல பிராந்திய உத்தியோகத்தர்களும் வெளியிடங்களிற்கு மாற்றப்பட்டு, புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக கமநல சேவைகள் நிலையம் ஒன்று முல்லைத்தீவு வலயம் 1ல் அமைக்கப்படுவதற்காக சிபாரிசு செய்யப்படுகின்றது. பாராளுமன்ற உறுப்பினர் இதற்கு வேண்டிய நிதியினை 1982ன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்

திட்டத்தின் கீழ் அளிப்பதற்கு இணங்கியுள்ளார். கிளி நொச்சித் தொகுதியின் வலயங்கள் 1, 11 ஆகியவை ஒவ் வொன்றிற்கும் ஒரு மேலதிக கமநலசேவைகள் நிலையத்தினை அமைப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இவ்வருடத் தில், ஏற்பட்ட வெற்றிடங்கள் அநேகமாக நிரப்பப்பட்டுவிட் டன. இன்னும் நிரப்பப்படாதுள்ள சில வெற்றிடங்களும் 1982 முதற் பகுதியில் நிரப்பப்பட்டுவிடும் என நம்பப்படு கிறது.

ஒவ்வொரு கமநல சேவைகள நிலையத்திற்கும் ஒவ் வொரு உழவு யந்திரமும், நிறையரும் வழங்கப்பட்டுள்ளன.

சகல தொகுதிகளிலும் கமநல சேவைகள் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவுத் தொகுதியில் காணப் பட்ட அரசியற் போட்டி காரணமாக இங்கு இக்குழுக்களின் நியமனத்தில் தாமதம் ஏற்பட்டது. இதனால் குழுக்கள் வரு டத்தின் இறுதிப் பகுதியிலேயே செயலாற்றத் தொடங்கின.

(3) நெல்

1980ல் வடகிழ் பருவப் பெயர்ச்சிக்காற்று மழை இல் லாமையினால், 1980/81 காலபோகம், 1981 சிறுபோகம் என பன பெரும் பாதிப்பை அடைந்தன. அநேக பிரதேசங்களில் பயிர் தீரின்றி வாடின. 1981ஆம் ஆண்டின் சிறுபோகத்தில், நீர் போதாமையினால் 1.3% பரப்பளவிலேயே பயிர்ச் செய்கை பண்ணப்பட்டது.

தொகுதி	விதைக்கும் பரப்பளவு (ஏக்)	சிறு போகம் 1981 (ஏக்.)	கால போகம் 81/82 (ஏக்.)
கிளிநொச்சி வலையம் 1	16190		15,496
கிளிநொச்சி வலையம் 11	41604	225	39,174
முல்லைத்தீவு வலையம் 1	21650	1258	21,568
முல்லைத்தீவு வலையம் 11	13940	201	13,739
மன்னார் வலையம் 1	27270	93	22,714
மன்னார் வலையம் 11	25439	137	21,327
மொத்தம்	146093	1913	134,018

எப்படியிருப்பினும், மன்னார் தொகுதியின் சில பகுதி களைத் தவிர, மேற்குறிப்பிடப்பட்ட ஏனைய தொகுதிகளில் 1981/82 கால போகத்தில் திருப்திகரமான காலநிலை காணப் பட்டது. கமத்தொழில் திணைக்களம் புதிய திருந்திய விதை நெல் வர்க்கங்களை, கூடிய அளவில் வெற்றிகரமாக விநியோ கித்துள்ளது. புதிய நெல் வர்க்கங்கள், உரப்பாவனை, நாற்று நடுகை, களைக்கட்டுப்பாடு ஆகியன தொடர்பான வயலின் தனமை பற்றிய ஆய்வு விளக்க அமைப்புக்கள் கமததொழிற் திணைக்களத்தினால் ஏற்படுத்தப்பட்டது. அத்துடன கமத் தொழில் திணைக்களத்தினால் ஒரு சிறந்த விரிவாக்கற்சேவை யும் அளிக்கப்பட்டது. 1981/82 கால போகத்தின்போது பெறப்படும் விளைவுகளில் ஒரு அதிகரிப்புக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே கூறப்பட்டவாறு, மன்னார் தொகுதியின் பகுதிகளில் அனுகூலமான காலநிலை நியதிகள் காணப்பட வில்லை. காலபோகத்தின் போது, இராட்சதக் குளத்தின் நீர்மட்டம் 8½ அடிகளாக காணப்பட்டது. காலநிலையில் மாற்றம் ஏற்படாவிட்டால், ஏறக்குறைய 10,000 ஏக்கர்கள் நெற் பயிர் பாதிக்கப்படும் நிலையில் உள்ளது.

ஒவ்வொரு குளம் தொடர்பாகவும் பயிர்ச் செய்கைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு, பயிர்ச்செய்கை நேரசூசிகை மிகவும் கடுமையாக அமுல் நடாத்தப்பட்டது. வெற்றிக ரமான நெற் பயிர்ச் செய்கையைப் பாதிக்கும் வகையில், விவ சாயிகளிடையே இன்னும் ஒழுங்கீனங்கள் காணப்படுகின் றன. நீர்ப்பாச்சற் கால்வாய்களைத் தடைப்படுத்தல், வெட்டு தல், நிலுத்தற் பலகைகளைத் திருடுதல், மதகுகளையும், ஒழுங் காக்களையும் சேதப்படுத்தல் போன்ற அநேக சம்பவங்கள் முறையிடப்பட்டுள்ளன. இத்தகைய செயல்களைச் செய்வோ ருக்கெதிராக கண்டிப்பான நடவடிக்கையினை எடுக்குமாறு விவசாய முகாமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சில பகுதிகளில், பயிர்ச்செய்கைக் கூட்டங் களில் எடுக்கப்படும் தீர்மானங்களை விவசாயிகள் புறக் கணிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்விவசாயிகள் கால போகப் பயிர்ச்செய்கையை பிந்தித் தொடங்குவதால் மேல திக பாவனையும், நீர் வீணாக்கலும் ஏற்படுகின்றது. விவசாயி கள் ஒழுங்காக செயற்படல் வேண்டும். மழைநீரினை உபயோ கித்து கால போகப் பயிர்ச்செய்கையை செய்யும் முகமாக விவசாயிகள், இப்பயிர்ச் செய்கையை முன்னரே ஆரம்பிப்ப தற்குத் தூண்டப்படல் வேண்டும். இதன்மூலம் குளங்களில் கிடைக்கப்பெறும் நீரை சிறுபோகப் பயிர்ச் செய்கைக்கு சேமித்து வைக்கக்கூடியதாக இருக்கும்.

1981ஆம் ஆண்டில் நவம்பர் மாதக் கடைசியில் கிளி நொச்சி, முல்லைத்தீவுத் தொகுதிகளில் பலமான மழை காணப்பட்டது. 4 மணித்தியாலங்களுள் 19 அங்குல மழை வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டது. இது பல பெரிய, சிறிய குளங்கள் உடைப்பெடுப்பதற்குக் காரணமாயிற்று. எப்படி யிருப்பினும், நெல்லிற்கு ஏற்பட்ட சேதம் புறக்கணிக்கப் படத்தக்கதாகும். நெற்பயிரைப் பாதுகாப்பதற்கு சாத்திய மாகவுள்ள எல்லா நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரசபைகள் எடுத்துள்ளன.

பொதுவாக, நெற் பயிர்ச்செய்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. திருந்திய விதை நெல் வர்க்க பாவனையினாலும், உகந்த பாரம்பரிய செயல்முறை களின் கைக்கொள்ளலினாலும் குறிக்கப்பட்ட விளைவுகள் எதிர்பார்க்கப்படுகின்றது. இது கமத்தொழிற் திணைக்களத் தினால் நெற் செய்கையாளர்களுக்கு அளிக்கப்படும் உதவி யிலும், வழிகாட்டலிலுமே தங்கியுள்ளது.

எவ்விதமான பெரிய நோய்கள் பற்றியும் இவ்வருடத்தில் குறிப்பிடப்படவில்லை .இலை சுருளுதல், இலைவெடித்தல், மண் தாவரத் தத்துவெட்டிகள் போன்ற சிறு பாதிப்புக்கள் அவதானிக்கப்பட்டு, கமத்தொழிற் நிணைக்களத்தின் விசேவான நடவடிக்கையினால் அவை உடனடியாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன.

கிளிநொச்சி வலயம் 1ல் நெற்பிரதேசத்தின் பெரும் பகுதி மழை வீழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே செய்கைபண்ணப்படுகின்றது. இங்கு விவசாயிகள சாதாரண விதைநெல் வர்க்கங்களையே தொடர்ந்தும் பயன்படுத்துகின்றனர். இப்பிரதேசங்களிலுள்ள பாவனையாளர் சிவப்பு அரிசி வர்க்கங்களையே அதிகம் விரும்புகின்றனர். ஏனைய எல்லாப் பகுதிகளிலும் 75%க்கு மேற்பட்ட பரப்புகள் புதிய திருந்திய இனங்களின் கீழுள்ளன.

81/82 காலபோகத்தின்போது பின்வரும் அளவு விதை நெல விநியோகிக்கப்பட்டது.

தொகுதி	மொத்தம் பதிவு செய்யப் பட்ட விதை நெல் (புசல்கள்)	உறுதிப்படுத் தப்பட்ட விதை நெல் (புசல்கள்)
கிளிநொச்சி வலையம் 1	999	3017
கிளிநொச்சி வலையம் 11	2577	6286
முல்லைத்தீவு வலையம் 1	1074	1780
முல்லைத்தீவு வலையம் 11	426	1520
மன்னார் வலையம் 1	2607	6998
மன்னார் வலையம் 11	1683	3741
	9366	23342

நெல்லு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு உறுதிப்படுத்தப்பட்ட விதைநெல் விநியோகிக்கப்பட்டுள்ளது. கமத்தொழில் நிணைக்களத்தின் வழிப்படுத்தலுடன், ஒவ்வொரு தொகுதியையும் விதை நெற் தேவைகளில் தன்னிறைவடையச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாய முகாமையாளர்கள் விதை நெல் உற்பத்தியில் கவனம் செலுத்துமாறும், விவசாயிகளை, அவர்கள் உற்பத்தி செய்த வர்த்தக நெல்லை இராமிய மட்டத்தில் பாவனை நெல்லுடன் மாற்றுவதற்கு முன்றுதல் அளிக்குமாறும் வேண்டப்படுகின்றனர்

(4) தென்னை

கடந்த வருடங்களில் தெங்குச் செய்கைப் பகுதிகளில் பெரும்பாலானவை புறக்கணிக்கப்பட்டிருந்தன. ஏறத்தாள 60 %க்கு மேற்பட்ட பரப்பளவுகள் புனரமைக்கப்படல வேண்டும். தெங்குச் செய்கையாளர்களின் பிரதான குறைபாடுகள் என்னவெனில்:—

(அ) புதிய நடுகைக்கான போதுமான தென்னம் நாற்றுக்கள் கிடைக்கப்பெறுமை.

(ஆ) தென்னம் உரம் கிடைக்கப் பெறுமை

(இ) மானியம் வழங்கலில் தாமதம்.

உரக்கடன் திட்டத்தைப் பொறுத்தவரையில், அதன் பங்கு முன்னர் மிகவும் குறைவாகவே இருந்தது.

வெளிக்கள விளக்கங்கள் நடாத்தப்பட்டு, தெங்குச் செய்கையாளர்கள் அவர்களின் நிலங்களைப் புனரமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். உரப்பாவனை, முதிர்ச்சியடைந்த கன்றுகளை அகற்றல், வடிகால்கள் வெட்டுதல் ஆகியவை தொடர்பாக பிரசாரம் மேற்கொள்ளப்படடது.

விசேடமாக கிளிநொச்சி வலையம் 11ல் பயிர் செய்யப்பட்ட 251 ஏக்கர்களிலும் சிறந்த விளைவு பெறப்படடது. விவசாய முகாமையாளர்கள், தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஒழுங்காகத் தென்னங் காணிகளுக்கு விஜயம் செய்து, தேவையான உதவிகளைச் செய்து வருகிறார்கள். தொடர்ந்து தமது காணிகளைப் புறக்கணித்து வரும் காணிச் சொந்தக்காரர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், கமநல சேவைகள் கட்டளைச் சட்டத்திற்கிணங்க, தமது காணிகளை அபிவிருத்தி செய்யாதவர்களிடமிருந்து காணிகள் பறிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் கீழுள்ள தொகுதிகளில் 3 தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மட்டுமே இருத்தல் மிகவும் அதிர்ச்சிக்குரிய ஒரு விடயமாகும். தென்னங் காணிகளின் புனரமைத்தல் தொடர்பாக, அதிக வேலைகள் செய்யப்பட வேண்டியிருப்பதால், 1982ஆம் ஆண்டளவில் ஒவ்வொரு வலையத்திற்கும், ஒவ்வொரு தென்னம் அபிவிருத்தி உத்தியோகத்தரை நியமிக்குமாறு தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையின் அதிகாரிகளுக்கு கோரிக்கை செய்யப்பட்டுள்ளது.

மேர்கொள்ளப்பட்ட பிரசாரத்தின் விளைவாக, அநேக காணிச் சொந்தக்காரர்கள் தம் காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக மானிய விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க ஆரம்பித்துள்ளமை, குறிப்பிடத்தக்கவோர் விடயமாகும். கிளிநொச்சித் தொகுதியில் 1981ல் 938 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

1981ல் பின்வரும அளவுகளில் தென்னம் நாற்றுக்கள் வழங்கப்பட்டன.

தொகுதி	விஸ்தீரணம் ஏக்கர்கள்	1981ல் பயிரிடப் பட்ட பரப்பளவு	சீ. டி. ஓ. எண்ணிக்கை	நாற்றுமேடைகளின் எண்ணிக்கை	நாற்றுகளின் கொள்வனவு
கிளிநொச்சி வலையம் 1	2637	94	—	—	—
கிளிநொச்சி வலையம் 11	9345	232	1	1	175,000
முல்லைத்தீவு வலையம் 1	6777	251	1	1	150,000
முல்லைத்தீவு வலையம் 11	120	30	—	—	—
மன்னார் வலையம் 1	7343	63	1	—	—
மன்னார் வலையம் 11	2127	27	—	—	—

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

வடமாகாணம் வருடாந்த அறிக்கை—1981

தொகுதி	வழங்கப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை	
	தென்னை	
கிளிநொச்சி வலயம் I	8675	475
கிளிநொச்சி வலயம் II	17810	1400
முல்லைத்தீவு வலயம் I	24380	—
முல்லைத்தீவு வலயம் II	1950	—
மன்னார் வலயம் I	26250	45
மன்னார் வலயம் II	12500	—
மொத்தம்	91565	1920

விவசாய முகாமையாளர்கள் வீட்டுத் தோட்டங்களிற் கும தென்னம் நாற்றுக்களை விநியோகிப்பதற்கு உகந்த நட வடிக்கைகளை எடுத்துள்ளனர். தென்னம் நாற்றுக்களுக்கு ஒரு உயர்ந்த சந்தை இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. மன்னார் கிளிநொச்சித் தொகுதிகளுக்குத் தென்னம் நாற் றுப் பெற்றுக்கொடுப்பதில் அதிகளவு கஷ்டம் எதிர்நோக் கப்பட்டது. ஏனெனில் மன்னார் தொகுதியில் தென்னம் நாற்றுமேடை ஒன்று இருக்கவில்லை. தெங்குப் பயிர்ச்செய் கைச் சபையானது 1982ல் மன்னார் தொகுதியில் ஒரு நாற்றுமேடை அமைப்பதற்கு எண்ணியுள்ளதாக அறிவித் துள்ளது இப்பிரேரணை வரவேற்கப்படுவதுடன், தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையானது தாமதமின்றி இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமென நம்பப்படுகிறது.

கிளிநொச்சித் தொகுதியைப் பொறுத்தவரையில், இங்கு தென்னம் நாற்றுமேடை ஒன்று அவசியமாக இருப்பதுடன், யாழ்ப்பாணக் குடாநாட்டின் தேவைகளையும் அளிக்கவேண் டியுள்ளது. இதனால் கிளிநொச்சித் தொகுதியிலுள்ள விவ சாயிகளுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட அளவு நாற்றுக்களே இடைக்கிடை கூடியதாக உள்ளது. தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையானது, இவ்விடயம் தொடர்பாக நன்கு அவதா னித்து, சாத்தியமாயின் யாழ் குடாநாட்டிலும் ஒரு நாற்று மேடையை அமைத்தல் வேண்டும்.

தென்னம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடந்த வரு டத்தில் விவசாய முகாமையாளர்களுக்குத் தமது முழுமை யான ஒத்துழைப்பை நல்கியுள்ளனர். அதிக புனரமைப்பு வேலைகள் செய்வதற்குள்ளமையால், 1982ஆம் ஆண்டில் ஒவ் வொரு தொகுதியிலும் நிறைவேற்றப்படவேண்டிய இலக்கு கள் தீர்மானிக்கப்பட்டுவிட்டன.

(5) உப உணவுப் பயிர்கள்

1981ல் பயிரிடப்பட்ட பரப்பளவு

பயிர்	கிளிநொச்சி		முல்லைத்தீவு		மன்னார்		மொத்த ஏக்கர்கள்
	வலயம் I (ஏக்.)	வலயம் II (ஏக்.)	வலயம் I (ஏக்.)	வலயம் II (ஏக்.)	வலயம் I (ஏக்.)	வலயம் II (ஏக்.)	
மிளகாய்	740	1264	3200	1150	732	186	7272
பாசிப்பயறு	585	152	253	146	45	40	1221
உழுந்து	124	290	1386	1741	58	224	3823
வெங்காயம்	157	765	1625	140	22	51	2760
சோளம்	16	74	82	28	7	11	218
கௌப்பி	135	172	175	32	80	117	716
குரக்கன்	112	29	70	16	10	29	266
நிலக்கடலை	135	143	5680	70	54	68	6150
எள்ளு	141	139	184	865	5	15	1349
சோயா அவரை	15	24	11	—	3	—	53
மொத்தம்	2160	3052	12666	4188	1021	741	23828

உப உணவுப் பயிர்களின் வெற்றிகரமான பயிரச் செய் கைக்காக விதை நடுகைப் பொருட்கள், உரம், விவசாய இர சாயனப் பொருட்கள் போன்ற அத்தியாவசிய தேவைகள், ஒரு சிறந்த விரிவாக்கல் சேவையுடன் அளிக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதிச் சந்தையையும், சிறந்த சில விலைகளையும் கொண்ட சுத்தம் செய்யப்படாத தானியங்கள், பருப்பு வகைகள் போன்ற உயர்ந்த பெறுமதியுள்ள பயிர்களைப் பயி ரிடுவதற்கு விவசாயிகள் தூண்டப்படுகின்றனர். கமத் தொழிற் திணைக்களம் விளக்க அமைப்புக்களைத் தாபிப்ப தற்கும், பயிற்சி பகுப்புக்களை நடாத்துவதற்கும் நடவடிக் கைகளை எடுத்துள்ளது. விவசாயிகள் நீர் கிடைப்பதைப் பொறுத்து, வளரும் பயிர்களை செய்கை பண்ணுமாறு கூறப் பட்டுள்ளனர்.

உப உணவுப் பயிர்களின் கீழான பரப்பளவை அதி கரிப்பதற்கு இன்னும் அதிக நிலங்கள் செய்கை பண்ணப் படாதுள்ளன. உழுது பயிரிடாதுள்ள நிலங்களைக் கணிக்கு மாறு சகல விவசாய முகாமையாளர்களும் கேட்கப்பட்டுள் ளனர். 1982ல் வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் ஆழமற்ற கிணறுகளை அகழ்வதற்கும், நீர்ப்பம்பிகளை வழங்குவதற்கும் அவசியமான உதவி அளிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் வருடத்தில் நிலக்கடலையின் கீழுள்ள பரப் பளவை அதிகரிப்பதற்கு எல்லாவகையான தூண்டுதலும் அளிக்கப்படும். நிலக்கடலையின் பரப்பளவில் உண்மையான அதிகரிப்பு காணப்படுமாயின், முல்லைத்தீவுத் தொகுதியில் உற்பத்திப் பயிர் ஒன்றை உருவாக்குவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(6) பழப்பயிர்கள்

இவ்வருடத்தில் பின்வரும் பழப்பயிர் வகைகள் விநியோகிக்கப்பட்டன.

தொகுதி	மாம்பழம்	தோடை	எலுமிச்சை	பலா	கஜூ	கொடித் தோடை
கிளிநொச்சி வலயம் 1	475	100	75	50	90	90
கிளிநொச்சி வலயம் 11	1000	50	50	225	30	35
முல்லைத்தீவு வலயம் 1	—	225	550	—	—	—
முல்லைத்தீவு வலயம் 11	—	150	250	250	—	—
மன்னார் வலயம் 1	260	250	400	—	90	25
மன்னார் வலயம் 11	385	675	400	—	500	100
மொத்தம்	2120	1450	1725	525	710	250

1982ஆம் ஆண்டளவில் போதுமானளவு நாற்றுக்களை விநியோகம் செய்வதற்கு அரசாங்கப் பண்ணைகளில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. முருங்கன் அரசாங்கப் பண்ணையில் பயிர் வழங்கல் நாற்றுமேடை ஒன்றினை அமைப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்திற்கு ரூபா 26,000 அளிக்கப்பட்டுள்ளது.

தனியார் நாற்று மேடைகளுக்கும் ஊக்குவிப்பு அளிக்கப்பட்டு வருகின்றது. கிளிநொச்சி வலயம் 11ல் உள்ள தனியார் நாற்றுமேடை ஒன்றிலிருந்து ஏனைய தொகுதிகளுக்கு மாங்காய் ஒட்டுக் கன்றுகளை வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவை அநேகமாக கிழக்கு, வட மத்திய மாகாணங்களிலுள்ள தொகுதிகளுக்கே விநியோகிக்கப்பட்டன.

(7) மரப்பலகை

1981ல் விவசாய முகாமையாளர்களால் வழங்கப்பட்ட தாவரங்கள்.

தொகுதி	தேக்கு	யூக்கலிப்டஸ்	இயில் இயில்
கிளிநொச்சி வலயம் 1	2000	500	—
கிளிநொச்சி வலயம் 11	1700	200	600
முல்லைத்தீவு வலயம் 1	2000	200	—
முல்லைத்தீவு வலயம் 11	—	—	—
மன்னார் வலயம் 1	100	90	1000
மன்னார் வலயம் 11	—	—	—

இம்மரங்கள் பிரதானமாக வீட்டுத் தோட்டங்களிற்கே வழங்கப்பட்டன. மேற் கூறப்பட்ட அளவுகளை விட ஏனைய வழங்கல்கள் காட்டு இலாகா நாற்று மேடைகளின் மூலம் செய்யப்பட்டது.

(8) மிருக வளர்ப்பு

கால்நடை வழங்கல்கள்—1981

ஒரு நாள் குஞ்சுகள்	— 6850
ஒரு மாதக் குஞ்சுகள்	— 656
தாரா	— 994
பசுக்கன்றுகள்	— 16
காளைக்கன்றுகள்	— 03
இறைச்சிக்காக வளர்க்கும் குஞ்சுகள்	— 644
ஆடுகள்	— 26
பன்றி	— 23

கால்நடைத் தொழிலின் பிரதான இடையூறுகளாவன, தகுந்த உதவிச் சேவைகள் பற்றாக்குறை, தரமான இருப்புக்கள் இல்லாமை ஆகியனவாகும். கடந்த சில வருடங்களாகக் கால்நடைத் தொழிலில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. கால்நடை நோய் சேவை நிலையங்கள் கால்நடை விவசாயிக்கு ஒரு சிறந்த திறமையான சேவையை அளிப்பதற்கு முயலல் வேண்டும். உயர்ந்த உற்பத்தி விலை, கோழித்தீனின் குறைந்த விநியோகம் ஆகியவை காரணமாக கோழி வளர்ப்புத் திட்டங்கள் க. அ. அ சபையினால் ஊக்குவிக்கப்படவில்லை.

கால்நடை நோய் சிகிச்சை வைத்தியர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல், கால்நடைகள், புற்தரைகள் சேவைகள் போன்றவற்றை கால்நடை விவசாயிகள் பெற்றுக்கொள்வதில், விவசாய முகாமையாளர்கள் அவர்களுக்கு உதவி அளித்துள்ளனர். செயற்கை முறைச் சினைப்படுத்தல் ஊக்குவிக்கப்பட்டதன் விளைவாக, இவ்வருடத்தில் இத்தகைய 1520 செயற்கை முறைச் சினைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1981ல் 602 ஏக். புற்தரைகள் விதைக்கக் கூடியதாயிருந்தது.

பால் சேகரிப்பு நிலையங்கள்

தொகுதி	நிலையங்களின் எண்ணிக்கை	கொள்ளளவு (லிற்றரில்)
கிளிநொச்சி வலயம் 1	—	—
கிளிநொச்சி வலயம் 11	01	5000
முல்லைத்தீவு வலயம் 1	—	—
முல்லைத்தீவு வலயம் 11	—	—
மன்னார் வலயம் 1	01	2000
மன்னார் வலயம் 11	—	—

முல்லைத்தீவுத் தொகுதியில் ஒரு புதிய பால் சேகரிப்பு நிலையம் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைசசு இவ்விடயம் தொடர்பாகத் தனது கவனத்தைச் செலுத்தி, இப்புதிய நிலையத்தின் அமைப்பை விரைவுபடுத்த வேண்டும்.

சேகரிப்பு நிலையங்களின் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கான பிரதிநிதித்துவங்களும் பாற சபை அதிகாரிகளுக்குச் செய்யப்பட்டுள்ளன. இவ்விடயம் தீர்க்கப்பட்டால், தினமும் எடுக்கப்படும் பாலின் அளவு அதிகரிக்கும்.

மன்னர் தொகுதியிலுள்ள கால்நடை விவசாயிகள், தற் போதுள்ள நீலியத்தின் கொள்வனவை 4000 லிற்றர்களாக அதிகரிக்கும்படியும், இப்பகுதியில் அதிகளவில் கால்நடை கள் இருப்பதால் வலியம் 11 இன்னுமொரு மேலதிக நிலை யத்தினை தாபிக்குமாறு கோரிக்கை செய்துள்ளனர்.

(9) நீர்ப்பாசனம்

பெரிய நிர்ப்பாசனம்

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் அவசியமான இடத் தில் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு குளங்கள் திருப்திகரமான முறையில் பேணப்பட்டு வந்தன. எப்படி யிருப்பினும், நீர்ப்பாசனக் கால்வாயை சுத்தம் செய்தல், ஒழுங்காக்கிகளின் திருத்த வேலைகள் தொடர்பாக அதிக வேலை செய்யப்படவுள்ளது. இத்தகைய வேலைகளைச் செய்வ தற்கு 1982ல் போதியளவு நிதி அளிக்கப்படுமென நீர்ப் பாசன அதிகாரிகள் அறிவித்துள்ளனர். மன்னர், முல்லைத் தீவு தொகுதிகளின் சில குறிப்பிட்ட பகுதிகளில் வாட்சி நிவாரண நிதியின் உதவியுடன் கால்வாய்களைத் துப்புரவாக் கும் வேலை மேற்கொள்ளப்பட்டது. இம்மாவட்ட அரசாங்க அதிபர்களில் எடுக்கப்பட்ட முயற்சியினாலேயே, இது சாத்தியமாயிற்று.

கிளிநொச்சி, முல்லைத்தீவுத் தொகுதிகளில் நவம்பர் 1981ல் பெறப்பட்ட பலத்த மழையினால் ஐந்து பாரிய குளங்கள் உடைப்பெடுத்தன. இந்த ஐந்து குளங்களினாலும் போஷிக்கப்படும் பரப்பளவு அண்ணளவாக 4196 ஏக்கர் களாகும் நீர்ப்பாசனத் திணைக்களம் மதிப்பீடுகளைக் கணிக் கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதுடன், இக்குளங்களைத் திருத்தி அமைப்பதற்கான நிதிகள் தாமதமின்றிக் கொடுக் கப்பட வேண்டும். சட்ட விரோதமாக நீரைப்பெறல், நீர்ப் பாசனக் கால்வாய்களை வெட்டுதலும் சேதப்படுத்தலும், ஒழுங்காக்கிகளை சேதப்படுத்தல்போன்ற அநேகசம்பவங்கள் முறையிடப்பட்டுள்ளன. இது தொடர்பாக, விவசாய முகா மையாளர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மன்னர் வலியம் 11லுள்ள அகத்திமுறிப்புக் கால்வாய் தொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்களத்தால் மேற்கொள்ளப் பட்ட வேலை வருடத்தின் கால் இறுதிப் பகுதியில் செய்து முடிக்கப்பட்டது.

மன்னர் தொகுதியிலுள்ள இராட்சதக் குளத்தைப் பொறுத்தவரையில், கால்வாய் நுழைவாயிலைச் சுத்தம் செய் வதற்குப், மல்வத்து ஓயாவில் இருந்து இராட்சதக் குளத் தினுள் பாயும் நீரின் அளவை அதிகரிக்கும் முகமாக 'தேக் கம்' அணைக்கட்டினை 2 அடிகளுக்கு உயர்த்துவதற்கும் நீர்ப் பாசனத் திணைக்களம் நிதியினை அளிக்க இருக்கிறது.

தொகுதி	பெரிய குளங்கள் குளங்களின் மொத்த எண்ணிக்கை	பாவனையில் உள்ளவை	பாவிக்கப படாதவை	சிறிய குளங்கள் குளங்களின் மொத்த எண்ணிக்கை	பாவனையில உள்ளவை	பாவிக்கப் படாதவை
கிளிநொச்சி வலியம் 1	03	03	—	56	37	19
கிளிநொச்சி வலியம் 11	06	05	01	134	105	29
முல்லைத்தீவு வலியம் 1	10	09	01	92	72	20
முல்லைத்தீவு வலியம் 11	14	11	03	116	82	34
மன்னர் வலியம் 1	03	03	—	116	100	16
மன்னர் வலியம் 11	04	04	—	51	105	46

முல்லைத்தீவு வலியம் 11லுள்ள வவுனிக்குளம் "குளத்து நீர்ப்பாசன நவீனமயப்படுத்தும் திட்டத்"தின் கீழ் புன ரமைக்கப்படுகிறது. இதற்கான நிதியினை உலக வங்கி அளிக் கிறது. இக்குளத்திற்கு இருபது மில்லியன் ரூபா கொடுக்கப் பட்டுள்ளதுடன் வேலை திருப்திகரமானதாகவும் உள்ளது.

சிறு நீர்ப்பாசனம்

1981ல் கமநல சேவைகள் திணைக்களத்தினால் மன்னர், முல்லைத்தீவு, கிளிநொச்சித் தொகுதிகளிலுள்ள மொத்தம் 126 சிறிய குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தால் அளிக்கப்பட்ட நிதியுடன் மன்னர் தொகுதியில் மேலும் 9 குளங்களில் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. "கிராம நீர்ப்பாசனத் திட்டத்தின்" கீழ் மேற்கூறிய தொகுதிகளில் 6 குளங்களில் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சகல தொகுதிகளிலும் 1982 ஆம் ஆண்டிறுகான முதன்மை நிரல்கள் தயாரிக்கப்பட்டுவிட்டதுடன், வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று ஆரம்பிக்க முன் வேலையை ஆரம்பித்து முடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிராம நீர்ப்பாசனப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 1982 இல் 27 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

(10) சூழாய்க்கிணறுகள்

மன்னர், முல்லைத்தீவு, கிளிநொச்சித் தொகுதிகளின் சில பகுதிகளில் விவசாயிகள் குடிநீர் தொடர்பாக அதிக கஷ்டதசை அனுபவிக்கிறார்கள். அத்துடன் சிறுபோகத்தின் போது நீர் பற்றாக்குறையினால் பயிர்ச் செய்கை செய்தல் சாத்தியமற்றதாயிருந்தமை குறிப்பிடற்குரியதாகும். கஷ்டப் பிரதேசங்கள் அறியப்பட்டுள்ளதுடன் நீர் மூல சபை சூழாய்க் கிணறுகளை அகழ ஆரம்பித்துள்ளது. முதலில் இக் கிணறுகள குடிநீர் நோக்கங்களிற்காகவே அளிக்கப்படும். கிளிநொச்சி வலியம் 11ன் "திருவையாறு குடியேறறத் திட் டத்"தில் சூழாய்க்கிணறுகளை நீர்ப்பாசன நோக்கத்திற்கு அளிப்பதற்காக அது தொடர்பான வேலைகள் வருடத்தின் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(11) உரமும் விவசாய இரசாயனப் பொருட்களும்

கிளிநொச்சி, மன்னர் தொகுதிகளிலுள்ள மாவட்ட உரக் களஞ்சியங்கள் போதியளவு உரத்தைக் கொண்டிருந்

தன. கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள நான்கு உரக் களஞ்சியங்கள் தற்போது உபயோகிக்கப்படுவதில்லை. இவை 1982ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விவசாய முகாமையாளர்கள் கிராமிய மட்டத்தில், விவசாய இரசாயனப் பொருட்கள், உரம் ஆகியவற்றின தேவையை நிறைவேற்றினர். எப்படியிருப்பினும், நவம்பர் மாதத்தின் கடைசிப் பகுதியில் யூரியா விநியோகத்தில் ஒரு தடை ஏற்பட்டது. இவ்விடயம் உரக் கூட்டுத்தாபனத்தின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவரப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(12) உபகரணங்களும் பண்ணை வலுவும்

விவசாய முகாமையாளர்கள் கிராம மட்டத்தில் உபகரணங்கள் பண்ணை வலு ஆகியவற்றின் தேவையை நிர்வகித்து வந்தனர். பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களுக்கும், கமத்தொழில் விரிவாக்கல் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்ட தெளிகருவிகள் விவசாயிகளுக்கு வாடகை அடிப்படையில் கிடைக்கப்பெற்றது. அத்துடன் இவ் விவசாய முகாமையாளர்கள் உழவு யந்திர சொந்தக்காரர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தி, உழவு யந்திரங்களின் குறைவான விநியோகம் உள்ள பகுதிகளுக்கு உழவு யந்திரங்களை, உழுவதற்கு அனுபபுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எண்ணெய் விலை அதிகரிப்பினால் உயர்ந்த உழவு யந்திரக் கட்டணங்கள் காரணமாக, பல தொகுதிகளில் கதிரடி கருவிகளுக்கு கோரிக்கை ஏற்பட்டுள்ளது. இத்தேவைகளை 1982ல் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

விவசாய முகாமையாளர்கள் தெளிகருவிகள், நீர்ப்பம்பிகள் போன்ற உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதில் விவசாயிகளுக்கு உதவி அளித்துள்ளனர். விவசாயிகள் தம் தேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய கடன் வசதிகளைப் பெறுவதற்கான ஒழுங்குகளும் அரசாங்க வங்கிகளுடன் செய்யப்பட்டுள்ளன.

(13) விவசாயக் கடனும், காப்புறுதியும்

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு தொகுதிகளிலுள்ள 90% விவசாயிகள் அரசாங்க வங்கிகளினால் அளிக்கப்பட்ட கடனைத் திரும்பச் செலுத்தத் தவறியுள்ளனர். எமது விவசாய முகாமையாளர்கள் கடந்த வருடத்தின்போது, இவ் விவசாயிகளைத் தமது கடனை மீளச் செலுத்துமாறு தூண்டியுள்ளனர். முறையான வழிநடத்துகை அவசியப்படுவதுடன், விவசாய சமூகத்தை மீண்டும் விவசாயக் கடனைப் பெறச் செய்வதற்கான ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்படுகிறது. கமத்தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சின் சிபாரிசிற்கிணங்க, 81/82 பெரும்போக நெற் பயிர்ச் செய்கைக்கு "கட்டுப்படுத்தப்பட்ட கடன் வசதிகளை" அளிப்பதற்கு அரசாங்க வங்கிகள் இணங்கி உள்ளன. தேவையான போது, விவசாயிகள் பயிர்ச்செய்கைக்கும், விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் அவசியமான கடன் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு, விவசாய முகாமையாளர்கள் உதவி அளித்துள்ளனர்.

வட மாகாண விவசாயிகளை எதிர்நோக்கும் பிரதான குறைபாடு என்னவெளில், கமநலசேவைகள் நிலையங்களில் வங்கி வசதிகள் இல்லாமையாகும். பயங்கரவாத நடவடிக்கைகளினாலும், தற்போதைய வங்கிக் கொள்ளைகளினாலும் கமநல சேவை நிலையங்களிலுள்ள சகல வங்கிக் கிளைகளும் மூடப்பட்டுவிட்டன.

விவசாயக் காப்புறுதியினை நோக்கும் போது, நான் வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியது என்னவெனில் விவசாயிகள் விவசாயக் காப்புறுதிச் சபையினால அளிக்கப்பட்ட சேவையினால் ஏமாற்றம் அடைந்துள்ளனர். விவசாயிகள் இவ் விவசாயக் காப்புறுதி தொடர்பாக நம்பிக்கையை இழப்பது போல் தோன்றுவதால், இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துதல் வேண்டும். கிளிநொச்சி வலையம் 1ல் 6 விவசாயிகள் மட்டுமே தமது பயிரைக் காப்புறுதி செய்துள்ளனர். எப்படியிருப்பினும், மன்னார் தொகுதியில் பயிர்க் காப்புறுதி திருப்திகரமாக உள்ளது.

81/82 பெரும் போகத்தின்போது, மன்னார் வலையம் 1, 11 ஆகியவற்றில் காப்புறுதிக் கட்டணமாக ரூபா 189314-50, ரூபா 107,999-25 என்ற தொகைகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

14. பயிற்சி

சகல விவசாய முகாமையாளர்களும் விவசாயம் தொடர்பாக கன்னொறுவ சேவைக் காலப் பயிற்சி நிலையத்தில் ஒரு கிழமை பயிற்சி நெறியினை மேற்கொண்டனர். இவ் வருடத்தில் மன்னார் வலையம் 1, கிளிநொச்சி வலையங்கள் 1, 11 ஆகிய பகுதிகளிலுள்ள பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வகுப்புக்களும் நடாத்தப்பட்டுள்ளன.

நெல், தெங்கு, உப உணவுப் பயிர்கள் தொடர்பான விவசாயப் பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்கான ஒழுங்குகள் விவசாய முகாமையாளர்களால் செய்யப்பட்டன.

15. சந்தைப்படுத்தல்

தனி வியாபாரியினால் விவசாயிகள் பாதிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் முகமாக, அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உற்பத்திகளின் தேவைகள் தொடர்பாக சந்தைப்படுத்தும் திணைக்களம், நெற்சந்தைப்படுத்தும் சபை போன்ற அரசாங்க முகவர் நிலையங்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், விவசாயிகள் தம் உற்பத்தியினை விற்பனை செய்வதற்கு உதவியும் அளிக்கப்பட்டுள்ளனர். நில விலைகளையும், ஏற்றுமதிச் சந்தையையும் கொண்டுள்ள உப உணவுப் பயிர்களை செய்கை பண்ணுவதற்கு விவசாயிகளுக்கு தூண்டுதல் அளிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் மிளகாயைத் தவிர ஏனைய உற்பத்திகளை விற்பனை செய்வதில் அதிக கஷ்டத்தை எதிர்நோக்கவில்லை. சந்தைப்படுத்தல் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இவ் வகையைக் கொள்வனவு செய்வதில் போதிய அக்கறை எடுக்காமை வருத்தத்திற்குரிய விடயமாகும். எனினும், இவ்விடயம் உயர் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு நில விலையில் மிளகாயைக் கொள்வனவு செய்யுமாறு அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் இணைப்புடன், நிலக்கடலை விவசாயிகள், தமது உற்பத்திக்கு நல்ல விலையினைப் பெற்றுள்ளனர். என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நிலக்கடலை ஏற்றுமதியாளர்களுக்குத் தேவைப்படும் அளவு பற்றி அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் முழுப்பயிரையும் ஒரு இணக்கமான விலைக்குக் கொள்வனவு

செய்துள்ளனர். இவ் ஏற்றுமதியாளர்கள், எதிர்காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குத் தமக்கு அதிக அளவு தேவைப்படுகிறதெனக் குறிப்பிட்டுள்ளனர். 1982ல் இப்பயிரின் பரப்பளவினை அதிகரிப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

81/82 பெரும் போகத்தின் போது நிலவிலைத் திட்டத்தின் கீழ் நெல், உப உணவுப் பயிர்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்காக, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு தொகுதிகளில் 13 கமநல சேவைகள் நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

16. முடிவுரை

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு தொகுதிகளிலுள்ள அதிகளவு பரப்பளவுகள் அபிவிருத்தி செய்யப்படாததுடன், பாவனைக்குட்பட்டுமுள்ளது. முறையாக நீர்ப்பாசன வசதிகள் அளிக்கப்பட்டால் உணவு உற்பத்தி அளவினை அதிகரிக்கலாம். விவசாய அபிவிருத்தி அதிகார சபை 1981ஆம் ஆண்டு வட மாகாணத்தில் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன், முதல் வருடத்தில் அதிகளவு காலம் புறக்கணிக்கப்பட்ட நீர்ப்பாசன வேலைகளை புனரமைப்பதற்கென ஒதுக்கப்பட்டது.

அவதானிக்கப்பட்ட பலவகைக் குறைபாடுகள் சம்பந்தப்பட்ட நிணைக்களங்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படடன. அநேக சந்தர்ப்பங்களில் பாதிப்புக்கள் எவ்வித தாமதமுமின்றி திருத்தப்பட்டன. கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், கமத்தொழில் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள ஏனைய நிணைக்களங்களுடன் மிகவும் நெருக்கமாக வேலை செய்து வருகின்றனர். கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையும், விவசாயத்துடன் தொடர்புடைய ஏனைய நிணைக்களங்களும் உணவு உற்பத்தியை அதிகரித்தல், கிராமிய விவசாயப் பிரிவினை உயர்த்தல் ஆகிய இலக்குகளை நோக்கி செயற்படுவதற்கு பலமான நம்பிக்கை இருத்தல் அத்தியாவசியமாகும்.

இவ் வருடத்தின் செயற்பாடுகள் திருப்திகரமாய் இருந்ததுடன், 1982ல் மிகச் சிறந்த விளைவுகளைப் பெறவும் எண்ணியுள்ளோம். மதிப்பிற்குரிய மாவட்ட அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், க. அ. அ. சபைத் தலைவர் ஆகியோர் தேவையான போது எனக்கு ஆலோசனையும், நெறிமுறுத்தல்களும் தந்தமைக்காக, அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ் வருடத்தில் எனது கடமைகளைச் செய்வதில், தமது பூரண ஒத்துழைப்பை நல்கிய க. அ. அ. சபையின் உத்தியோகதத்தர்கள், விவசாயத்துடன் தொடர்புடைய ஏனைய நிணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜீ. எப். சீ. வைத்தியரட்ன,
பிரதி மாகாணப் பணிப்பாளர்—வ. மா.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

வடமத்திய மாகாணம்—வருடாந்த அறிக்கை 1981

1. பொது விவரம்:

தேர்தல் தொகுதி	நடவடிக்கைகள் ஆரம்பித்த தினம்	கமத்தொழில் முகாமையாளர்	காணிப்பரப்பு (ஏக்கரில்)	விவசாயக் குடும்பங்கள்
பொலன்னறுவ மாவட்டம்				
மின்னேரிய வலயம் 1	01.02.81	பி.டபிள்யூ.திலகரத்ன பண்டா	171,576	4,672
மின்னேரிய வலயம் 2	01.07.81	யூ. ஜி. அப்புஹாமி	93,064	5,581
மெதிரிகிரிய	15.02.81	டி. எம். புஞ்சிபண்டா	192,000	14,038
பொலன்னறுவ வலயம் 1	01.08.81	எஸ். பி. விஜேக்கோன்	335,232	4,881
பொலன்னறுவ வலயம் 2	01.08.81	டி. பி. வீரசூரியகெதர	98,560	4,730
அனுராதபுர மாவட்டம்				
அனுராதபுரம் கிழக்கு	15.03.81	டபிள்யு. தர்மவர்தன	111,360	10,123
அனுராதபுரம் மேற்கு	15.04.81	ஆர். எஸ். டி. மகடியுல்வெவ	453,120	9,841
ஹொறவபத்தானை	06.05.81	ஏ. ஆர். எம். ஏ. ரத்னயக்க	458,560	13,431
மதவாச்சி	01.12.81	டி. எம். என். எத்தகட	325,120	17,791
கலாவெவ	01.08.81	எஸ். ஆர். பி. பளுகஸ்வெவ	126,400	20,469
மிஹிந்தலை	06.05.81	கே. பி. ரத்னயக்க	150,400	8,420
கெக்கிராவ	15.03.81	ஈ. எம். பி. பண்டாரநாயக்க	172,800	13,924

அனுராதபுர மாவட்டத்திலுள்ள தொகுதிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் அனுராதபுரம் வரண்ட வலய விவசாயத் திட்டத்தின்கீழ் வருகின்றன. பொலன்னறுவையிலும் அனுராதபுரத்திலும் நிலைகொண்டுள்ள பிரதி மாகாண அதிபர்கள் இந்த இரு மாவட்டங்களினதும் அலுவல்களை மேற்பார்வை செய்து வருகிறார்கள்.

2. கமநல சேவை நிலையங்கள்

மாவட்டம்	நிலையங்களின் எண்ணிக்கை	வெளிக்கள விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்	பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்
பொலன்னறுவ	08	60	56
அனுராதபுரம்	39	146	198

அனுராதபுரம், பொலன்னறுவ ஆகிய மாவட்டங்களில் முறையே 425 விவசாயக் குடும்பங்களும் 350 விவசாயக் குடும்பங்களும் ஒவ்வொரு விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தரின் பொறுப்பில் விடப்பட்டுள்ளன. விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களின் ஆளணி எண்ணிக்கை மேற்காணப்படுகிறது. வெற்றிடங்கள் 1982ல் நிரப்பப்படும்.

வடமத்திய மாகாணத்தில் மொத்தம் 47 கமநலசேவை நிலையங்கள் உள்ளன. இவையே அடிமட்ட நிறுவனங்கள். கிராமப்புற விவசாய சமூகத்திற்கு இவை இன்றியமையாதவை. எனவே, (அ) இந்த கமநல சேவை நிலையங்களின் பயன் (ஆ) இவை எத்தகைய குறைபாடுகளைக் கொண்டுள்ளன? இக்குறைபாடுகளை நீக்கி நிலையங்களைத் திறம்பட செயல்படுத்துவது எப்படி? என்பன பற்றி ஆராய்ந்தறிவது அதிகார சபையின் முதல் நடவடிக்கைகளுள் ஒன்றாகும்.

கணக்கு விவரம்:

கிட்டத்தட்ட எல்லா நிலையங்களுமே திறமையற்ற முறையில், இன்னும் சொல்லப்போனால் சீர்கேடான முறையில் நிர்வகிக்கப்பட்டு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டமை கவலைக்குரிய விஷயமாகும். அதேகமான நிலையங்கள் முறையான பதிவேடுகளையோ கணக்குப் புத்தகங்களையோ வைத்திருக்கவில்லை. இறுதிக் கணக்கு அறிக்கைகளை சில நிலையங்கள் 1975 லிருந்தே தயாரிக்கவில்லை.

முறையான கட்டுப்பாடும் கண்காணிப்பும் இல்லாத காரணத்தால் சில கமநல சேவை நிலையங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஆயிரக் கணக்கான ரூபா பணத்தை மோசடி செய்தார்கள்.

பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் அசிரத்தையினாலும் உள்ளக கட்டுப்பாடுகளின் பலவீனத்தாலும் ஊழல், மோசடி என்பன கட்டுக்கடங்காமல் நிலவியது.

உள்ளக அமைப்பு தொடர்பாக முறையான கண்காணிப்பும் கணக்காய்வும் கொண்டுவரப்படாத பட்சத்தில் முன்னேற்றம் ஏற்படப்போவதில்லை. எமது வேண்டுதலின் பேரில் 1981ம் ஆண்டு சில பரிசோதனைகளும் வெளியிட கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. ஐந்து லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட வியாபாரத் தொகையைக் கொண்ட சகல நிலையங்களினதும் கணக்குகள் வருடாவருடம் வெளியிட கணக்காய்வாளர்களினால் பரிசோதிக்கப்படுவது கட்டாயப்படுத்தப்பட வேண்டும். கமநல சேவைகள் திணைக்களத்தின் கணக்குவைப்புப் பிரிவும் உள்ளக கணக்காய்வுப் பகுதியும் மிக விழிப்பாக இருந்து இந்த நிலையங்களின் கணக்கு வைப்பு அலுவல்களில் ஒழுங்கு முறையைப் பேணுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

நிதி:

பண மோசடிகள் இடம்பெற்றதால் அநேகமான நிலையங்களில் அன்றாட அலுவல்களைக் கொண்டு நடத்துவதற்கான தொழிற்படு மூலதனம் இருக்கவில்லை. இந்த நிலையங்கள் பெரும் கடன்களையும் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருந்தன. விவசாயிகள் காணி வரியைச் செலுத்த மறுத்து வந்ததால் இந்த நிலைமை மேலும் மோசமானது. உடனடியான நிதி நெருக்கடிகளைச் சமாளிக்க விவசாய அபிவிருத்தி அதிகார சபை இந்த நிலையங்களில் சிலவற்றிற்கு நிதி வசதிகளைப் பெற்றுக்கொடுத்தது. ஓரளவுக்காயினும் கட்டுப்பாட்டை வைத்திருக்கும் நோக்கத்துடன் சமூக சேவை நிலையங்களின் நடவடிக்கைகளை மாதா மாதம் அவதானித்து வருகின்றோம். ஊழல்களைத் தடுக்கவும் கணக்கு விவரங்கள் நேர்த்தியாகப் பேணப்படுவதை உறுதிப்படுத்தவும் இந்த நடவடிக்கை உதவுகின்றது.

முன்னைய விவசாய உற்பத்திப்பெருக்க குழுக்களின் பதவிக்காலத்தில் காணப்பட்ட ஊழலும் திறமையின்மையும் மீண்டும் தலைதூக்கி விவசாயிகளுக்கும் அரசாங்கத்திற்கும் சுமையை உண்டுபண்ண இடமளிக்க முடியாது.

3. நெல்

பொலன்னறுவை மாவட்டம் — 89,430 ஏக்கர்

அனுராதபுரம் மாவட்டம் — 54,000 ஏக்கர்

பொலன்னறுவ மாவட்டத்திலுள்ள பிரதான நீர்ப்பாசனத் திட்டப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் நீண்டகால கடும் வரட்சியினால் நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. வட மத்திய மாகாணத்திலே நெற்செய்கையானது எவ்வளவுதூரம் காலநிலையில் தங்கியுள்ளது என்பதை மீண்டும் உணர்ந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

அனுராதபுரம் மாவட்டத்தில் பயிர்ச்செய்கைக்குரிய 177,000 ஏக்கர் காணியில் (மகாவலி தவிர்ந்த) 73,000 ஏக்கரில் மாத்திரமே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதிலும் 50,000 ஏக்கருக்கும் குறைவான காணியில் இருந்தே சுமாரான அறுவடையைப் பெறமுடிந்தது. மகாவலி 'எச்' பிரதேசத்தில் 50 சதவீதத்திற்கும் கூடுதலான காணிகள் வரட்சியினால் நாசமாகிவிடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பொலன்னறுவை மாவட்டத்தில் அதிர்ஷ்டவசமாக நல்ல அறுவடை எதிர்பார்க்கப்படுகின்றது. சராசரி ஏக்கர் விளைச்சல் அங்கு 80 புசலாக இருக்கக்கூடும். 80/81 பெரும் போகத்தில் சராசரி விளைச்சல் 78.5 புசலாக இருந்தது. சிறுபோகத்தில் சராசரியாக ஏக்கர் ஒன்றிற்கு 59 புசல் நெல்லே விளைந்தது.

1982ம் ஆண்டு சிறுபோக வேளாண்மை மிக மோசமாகவே இருக்கப் போகின்றது. மழை பெய்தாலும்கூட வட மத்திய மாகாணத்தில் நெற்செய்கைக்கு எவ்வித இடமும் இருக்காது என்று கருதப்படுகிறது. வற்றிக்காய்ந்து போயிருக்கும் குளங்களில் போதியளவு நீர் நிரம்புவது சாத்தியமில்லை. மகாவலி நீரைப் பெறும் பிரதான நீர்ப்பாசனத் திட்டப் பகுதிகளிலேகூட ஒரு சிறிய தொகைக் காணிகளிலேயே நெற்செய்கையை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். பெரும்போக வேளாண்மைக்குப் பின்னர் இந்தக் குளங்களில் மிகச் சொற்ப நீரே இருக்கும். எனவே, 1982ம் ஆண்டிற்கான விவசாய இலக்குகளை நிர்ணயிக்கும் பொழுது திட்டமிடல் அதிகாரிகள் இந்த நிலைமைகளை மனதிற் கொள்ள வேண்டும்.

அத்தாட்சி பெற்ற விதை நெல்

வட மத்திய மாகாணத்தில் சிறந்த ரக நெல்லினங்களின் உபயோகம் பரவலானது. 81/82 பெரும்போகத்தில் விவசாயத் திணைக்களம் அனுராதபுரத்திலும் பொலன்னறுவையிலும் விவசாயிகளின் பூரண விதைநெல் தேவைகளை வழங்க முடியாத நிலையில் இருந்தது.

சிறந்த ரக நெல்லினங்களின் அனுகூலங்களை விவசாயிகள் அறிந்துவிட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த மாவட்டங்களின் மொத்தத் தேவையில் 15 முதல் 20 சதவீதம் வரையில் வழங்கக்கூடிய நிலையை விவசாயத் திணைக்களம் அடைய வேண்டும். களஞ்சிய வசதியை அதிகரிக்கும் நோக்கத்துடன் கருதுவெல பண்ணையில் மேலதிகக் களஞ்சிய சாலை ஒன்றை அமைக்க விவசாய அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் சிபாரிசு செய்துள்ளார். கதுருவெலைக்கும் ஹிங்குராகொடைக்கும் அண்மையில் விஜயம் செய்திருந்த அவர் நேர்த்தியானதும் நம்பிக்கையானதுமான களஞ்சிய வசதி விதைநெல்லுக்கு இருக்க வேண்டுமென்றும் குறுகிய காலத்திற்கு அல்லது நீண்டகாலத்தில் அறுவடை செய்யக்கூடிய நெல்லினங்கள் கையிருப்பில் வைக்கப்படுவது அவசியம் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

பொலன்னறுவ மாவட்டத்தில் 81/82 பெரும்போகத்தில் 18,698 புசல் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, பதிவுசெய்யப்பட்ட விதைநெல் விநியோகிக்கப்பட்டது. 80/81 பெரும்போகத்தில் வழங்கப்பட்ட தொகை 4,630 புசலாகும். இதன்படி, அதிகரிப்பு 300 சதவீதத்திற்கும் அதிகமானதாகும். சகல கமநல சேவை நிலையங்களுக்கும் உரிய வேளையில் விதைநெல் அனுப்பப்பட்டது. மிக விரைவாக இந்த விதை நெல் அனைத்தும் கொள்வனவு செய்யப்பட்டது. தொகுதிக்கு வெளியே இருந்து விதை நெல்லைப்பெற்றுக் கொள்வதில் போதனை விவசாயத் திணைக்கள அலுவலகம் உதவியது. வருங்காலத்தில் இந்த மாவட்டத்திற்குத் தேவையான விதைநெல் முழுவதும் இங்கேயே உற்பத்தி செய்யப்படும்.

அனுராதபுரம் மாவட்டத்தில் 23,736 புசல் விதைநெல் விநியோகிக்கப்பட்டது. 80/81 பெரும்போகத்தில் விநியோகிக்கப்பட்ட தொகை 13,714 புசலாகும். இது 73 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது.

களைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்படவில்லை. இரசாயனக் களைகொல்லிகளை பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. பெருந்தொகையான விவசாயிகள் சிறந்த இன நெல் வகைகளை பயிரிட்டபோதிலும் இவர்கள் எல்லோருமே உரிய அளவு உரு வகைகளைப் பயன்படுத்தினர்கள் என்று சொல்ல முடியாது. குறிப்பாக பேசோல் உரத்தை அநேகமானோர் பயன்படுத்தவில்லை.

பொலன்னறுவ மாவட்டத்தில் சராசரி ஏக்கர் விளைச்சல் 100 புசலாக, அதாவது தற்போதுள்ளதைவிட 20 சதவீதம் அதிகமானதாக, இருக்காவிட்டால் நெல்லுற்பத்தியில் தன்னிறைவு ஏற்படுவது சாத்தியமில்லை என்று விவசாய அதி

பர் கருத்துத் தெரிவித்துள்ளார். சிறந்த ரக விதைநெல் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும் களைநீக்கம் உரப் பாவனை என்பன சரிவர மேற்கொள்ளப்படாத காரணத்தினால் எதிர்பார்த்த பலாபலன்கள் முழுவதையும் பெற முடியவில்லை. இது பெரும் அதிர்ஷ்டக் குறைவாகும். உரப் பாவனையும் களைநீக்கமும் சரிவர மேற்கொள்ளப்பட்டிருந்தால் சராசரி ஏக்கர் விளைச்சல் 90 புசலாக அதிகரித்திருக்க முடியும். பேசோல் (வீ 1), ஈ. டி. எம் ஆகிய உரவகைகளின் பாவனை முறையே 4.8 சதவீதத்தினாலும் 16.4 சதவீதத்தினாலும் அதிகரித்தது. யூரியா பாவனை 26.3 சதவீதம் வீழ்ச்சியடைந்தது.

ஹொறவப்பொத்தானையில் விதைநெல் உரம் ஆகியவற்றின் விசேட விநியோகம்

தொடர்ச்சியான வரட்சியினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்ட விவசாயிகளின் பரிதாப நிலையை விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தனது ஹொறவப்பொத்தானை விஜயத்தின்போது நேரில் கண்டறிந்தார். பச்சைப் பசேலென்று காட்சியளிக்க வேண்டிய வயல்கள் காய்ந்து கட்டாந்தரையாகக் கிடந்ததை அவர் கண்டார். மழையை நம்பியிருக்கும் சேனைப் பயிர்ச் செய்கையாளர்களும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள். சில இடங்களில் ஓளவு நீர் காணப்பட்ட போதிலும் அங்குகூட பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாத அளவுக்கு அவர்கள் வறுமையில் வாடினார்கள்.

விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தெரிவித்த யோசனையைத் தொடர்ந்து விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை அமைச்சர் விடுத்த வேண்டுகோளின் பேரில் மாண்புமிகு ஜனாதிபதி ஜயவர்தன இத்தொகுதி விவசாயிகளுக்கு விதை நெல்லையும் உரத்தையும் கடனுக்கு வழங்கும் திட்டமொன்றை அமுல்செய்வதற்கு அனுமதியளித்தார். குறுகிய காலப்பகுதிக்குள் 547,575 கிலோ (26,199 புசல்) நெல்லும் 325 மெட்ரிக் தொன் ரி. ரி. எம். உரமும் வழங்கப்பட்டன. விவசாயிகள் நெல் வழங்குவதன் மூலம் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவார்கள்.

விவசாய அபிவிருத்தி அதிகார சபை, கமநல சேவைகள் நிலைக்களம், விவசாயத் திணைக்களம், நெல் சந்தைப்படுத்தும் சபை, கொழும்பு கொமேர்ஷல் கம்பனி (உர) லிமிட்டெட் விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித் துறை அமைச்சு ஆகியவற்றிற்கிடையே நிலவிய நெருங்கிய தொடர்பும் ஒத்துழைப்பும் காரணமாகவே இந்த விநியோகம் சாத்தியமானது.

4. உப உணவுப் பயிர்கள்

அதிக விளைச்சல் கொடுக்கும் சிறந்த இனப் பயிர் விதைகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்ததுடன் உரப் பாவனையும் மிகக் குறைவாக இருந்தது. நவீன தொழில் நுட்பமும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது. சீரற்ற கால நிலை காரணமாக பயிர்ச்செய்கை மட்டுப்படுத்தப்பட்டது. வறட்சி நிலவுவதால் 1982ம் ஆண்டிலும் விதை பொருட்கள் தொடர்பான நிலைமை மோசமாகவேஇருக்கும்.

சிறு போகத்தின்போது நெல் வயல்களிலும் பெரும் போகத்தின்போது கணிசமானளவு மேட்டு நிலக் காணிகளிலும் சோயா அவரையைப் பயிரிட விவசாயிகளைத் தூண்டுவதில் அனுராதபுரம் உதவி விவசாய அதிபர் வெற்றி கண்டார். இம்மாவட்டத்தில் சோயா அவரை மிகக் கூடுதலான ஏக்கர் காணிகளில் செய்கை பண்ணப்பட்டது இதுவே முதற் தடவையாகும். பெரும்போகத்திற்கான விதைகள் சிறுபோகத்திலிருந்து பெறப்பட்டன. நைதரசன் இலைக் குலம் உரத்தை எல்லா விவசாயிகளும் பயன்படுத்தினர்கள். விளைச்சல் நன்றாக இருந்தது. சந்தைப்படுத்துதலும் திருப்திகரமாக இருந்தது. அனுராதபுரம் உதவி விவசாய அதிபருக்கே இந்தப் பெருமை சாரும்.

5. சேனைப் பயிர்ச்செய்கை

அத்துமீறிய காணிக் குடியேற்றங்கள் தொடர்பாக பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விவசாயிகள் தாம் செய்கை மேற்கொள்ளும் காணிகளின் உரிமையாளர்கள் என்ற நிலைக்கு வந்ததும் வரம்புகள் நீர் வழிந்தோடும் வாய்க்கால்கள் முதலியவற்றை நேர்த்தியாகக் கட்டி மண் ணரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கக்கூடியதாக இருக்கும். இப்பொழுது மண்வளத்தைப் பாதுகாப்பதற்கான ஒழுங்குகள் எதுவுமே இடையாது.

6. பயிர்க் காப்புறுதி

அநேகமான இடங்களில் பாசனத்திற்கான நீரைப் பெறுவது நிச்சயமில்லை என்பதால் பயிர்ச்செய்கையின் வெற்றிக்கான வாய்ப்புகள் ஐம்பதுக்கு ஐம்பதாகவே இருக்கும். அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள சில இடங்களில் கடந்த மூன்று பெரும்போகங்களாக நெல்லறுவடை மோசமாகவே இருந்துள்ளது. நேரகாலத்துடன் செய்கையை ஆரம்பிக்கும்போது ஏற்படக்கூடிய தீய விளைவுகளையிட்டு அச்சங்கொள்ளும் விவசாயிகள் இத்தகைய முயற்சியில் ஈடுபடத் தயங்குகின்றார்கள். துணிச்சலுடன் நேரகாலத்துடன் விதைப்பை மேற்கொண்ட சில விவசாயிகள் தமது பயிர்கள் பாதிக்கப்பட்டதைப் பின்பு உணர்ந்துகொண்டார்கள். மகாகந்தாவ திட்டம் இதற்கு நல்ல உதாரணம். நஷ்ட ஈடு கோரும் கட்டத்திற்கு வரும்போது விவசாயிகளின் நிலைமை திரிசங்கு சுவர்க்கமாகிவிடுகின்றது. இதனால் விவசாயிகள் பயிர்ச்செய்கைக் காப்புறுதியில் நம்பிக்கை இழந்துள்ளார்கள். அண்மைக்காலமாக எமது முகாமையாளர்கள் வெளிக்கள மட்டத்திலான காப்புறுதி நடவடிக்கைகளில் பயிர்க் காப்புறுதிச் சபையுடன் ஒத்துழைத்து வருகிறார்கள். அநுராதபுரம் வரட்சியினால் அடிக்கடி பாதிக்கப்படும் ஒரு பிரதேசம் என்பதால் காப்புறுதிக் கட்டணமாகச் சேகரிக்கப்படும் தொகையைவிட மிகக்கூடுதலான பணத்தை நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டி நேரிடுவதால் இப்பொழுது எதிர்நோக்கப்படும் உடனடிப் பிரச்சினையாகும்.

7. உரம்

உரப் பாவனை மிகக் குறைவாக, பெரும்பாலும் நெற் செய்கையுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கின்றது நெற்செய்கையில்கூட ஒரு சிறிய தொகை விவசாயிகளே சொரிசு செய்யப்பட்ட அளவு உரவகைகளைப் பாவிக்கிறார்கள். உரவகைகள் தேவைப்படும் வேளையில் கிடைக்காமல் விடுவதும் தாமதமாகிக் கிடைப்பதும் முன்னர் எதிர்நோக்கப்பட்ட ஒரு முக்கிய பிரச்சினையாகும்.

தேவை அதிகமாக இருக்கும் காலங்களில் பற்றுக்குறை ஏற் படுவது சகஜம். இந்த நிலைமைக்கு இப்பொழுது பரிகாரம் காணப்பட்டுள்ளது. சகல கமநல சேவை நிலையங்களிலும் உரிய வேளையில் உர வகைகள் கிடைப்பதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் 81/82 பெரும்போகத்தில் உரப் பாவனை பொதுவாக 19 சதவீதம் வீழ்ச்சியடைந்தது. உர வகைகளின் விலை அதிகரிப்பு இதற்குக் காரணமாக இருக்க லாம். பொலன்னறுவ மாவட்டத்தில் யூரியா உரம் மட்டுமே 26.3 சதவீதம் குறைந்தது. வீ 1, ரி. டி. எம். ஆகிய உர வகைகளின் பாவனை முறையே 4.8 சதவீதமும் 16.38 சத வீதமும் அதிகரித்தது. பேசோல் உரமும் ரி.டி.எம். உரமும் தேவைப்பட்டபோது தாராளமாகக் கிடைத்தன. கையி ருப்பு நிலைமை கவனமாக அவதானிக்கப்பட்டது. விநியோ கத் தவறின் காரணமாக ரி.டி.எம். உரத்திற்கு பற்றுக்குறை ஏற்பட்டபோது உடனடியாக பரிகார நடவடிக்கைகள் எடுக் கப்பட்டன. பேசோல் உரம் ரி.டி.எம். உரம் ஆகியவற்றின் பாவனை மிகக்கூடுதலாக அதிகரிக்காத போதிலும் உரிய வேளையில் அவை பயன்படுத்தப்பட்டதால் அதிக விளைச்சல் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பல கமநல சேவை நிலையங்கள் உரக்கூட்டுத்தாபனத் திற்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுவது தெரியவந்தது. இந்த நிலையங்கள் பழைய கடன்களைத் திரும்பவும் கொடுத்து புதிதாக உரவகைகளைப் பெற்றுக்கொள்ள கமநல சேவைகள் மத்திய நிதியத்தில் இருந்து கடன்வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதில் விவசாய அபிவிருத்தி அதிகாரசபை விசேட கவனம் செலுத்தியது. ஒவ்வொரு நிலையத்தினதும் உர விநியோக அலுவல்களை சபை அவதானித்து வருகின்றது.

உர விற்பனையில் தனியார்துறை வர்த்தகர்களும் பங்கு கொள்ளாவிட்டால் விநியோக அமைப்பு முறையை திருப்தி கரமானதென்று சொல்ல முடியாது. கமநல சேவை நிலையங் கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவே பிர தான விநியோக நிலையங்களாகும். இலங்கை உரக் கூட்டுத் தாபனம் வழங்கும் இலாப எல்லை 2 சதவீதத்திற்கும் குறை வாக இருக்கின்றது. இதன் காரணமாகவே தனியார்துறை வர்த்தகர்கள் உர விநியோகத்தில் பங்குகொள்ள முன்வருவ தில்லை. அமைப்பு முறை, நிர்வாகம், நிதிக்கட்டணங்கள் என் பவற்றை கருத்திற்கு எடுத்துக்கொள்ளும்போது வர்த்தகப் பற்றுக்குறை நிலவுவதைக் காணலாம். கமநல சேவை நிலை யங்களைப் பொறுத்தமட்டில் இந்த விஷயங்கள் கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதேயில்லை. நிலையங்கள் பெரும் நிதி நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதற்கான காரணமும் இதுவே. கமநல சேவை நிலையங்கள் சிறப்பாக செயல்பட வேண்டுமானால் வழமையான கணக்கியல் நடை முறைகளைப் பின்பற்றுதலும் கூடுதலான இலாப அளவை வழங்குதலும் அவசியமாகும்.

8 விவசாய உபகரணங்கள்

சாதாரண விவசாய உபகரணங்களுக்கு விவசாயிகள் மத்தியில் பற்றுக்குறை நிலவுகின்றது. பாவிக்கப்படும் சில உபகரணங்கள் காலத்திற்கொவ்வாதவை. தெளிகருவிகள், விசிறு கருவிகள் என்பனவும் போதாது.

அனுராதபுரம், கங்காரு உழவு இயந்திர நிலையத்தில் இருந்து 22 டைன் கலப்பைகளை கமநல சேவை நிலையங்க ளுக்குப் பெற்றுக்கொடுக்க விவசாய அபிவிருத்திச் சபை ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தது. கணிசமான வேகத்தில் காணிகள் பண்படுத்தப்படுவதால் விவசாயிகள் இதன்மூலம் பெரும் நன்மையடைந்தார்கள்.

3,450 மண்வெட்டிகளை வாங்குவதற்காக கமநல சேவை நிலையங்களுக்கு ரூ. 250,000 பெற்றுக்கொடுக்கப்பட்டது. இந்த மண்வெட்டிகள் 47 கமநல சேவை நிலையங்கள் மூலம் விற்கப்பட்டன.

ஒற்றை உழவு தொடர்பான செய்முறை விளக்கம் பொலன்னறுவ, மெதிரிகிரிய ஆகிய இடங்களில் அளிக்கப் பட்டது. சூடுபோடும் இயந்திரங்கள், நீரிறைக்கும் இயந்தி ரங்கள், தெளிகருவிகள் ஆகியவற்றைப் பாவிக்கும் முறை கள் பற்றியும் பொலன்னறுவ மாவட்டத்தில் விவசாயிகளுக் குச் சொல்லிக் கொடுக்கப்பட்டது. விவசாய அபிவிருத்தி அதிகார சபை மூலம் இந்த உபகரணங்கள் விவசாயிகளுக்கு விசேஷ சலுகைக் கட்டணத்தில் வழங்கப்படுகின்றன.

9. நீர்ப்பாசனம்

வட மத்திய மாகாண வாழ்க்கை அங்குள்ள பெருந் தொகையான பெரிய, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களிலேயே தங்கியுள்ளது. குளங்களில் தேங்கும் நீரிலேயே விவசாயக் குடும்பங்கள் பயிர்ச் செய்கைக்கும் வீட்டுத் தேவைக்கும் தங்கியுள்ளன.

கைவிடப்பட்ட நிலையிலுள்ள பெருந்தொகையான சிறிய குளங்களைப் புனரமைப்புச் செய்ய வேண்டியிருக்கின்றது. இப்பொழுது பயன்படுத்தப்படும் சிறிய குளங்களில் அநேக மானவை பழைய வி.ரி. நீர்த் தடைக் கதவுகளையே கொண் டுள்ளன. இவற்றிற்குப் பதிலாக நவீன நீர்த்தடைக் கதவு கள் பொருத்தப்பட வேண்டும். பெரிய குளங்களுடன் இணைந்த நீர்ப்பாசன வாய்க்கால்களும் நீரோடைகளும் மிக மோசமான நிலையில் உள்ளன. இவை புனரமைப்புச் செய் யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரவேண்டும்.

கைவிடப்பட்ட எல்லாக் குளங்களும் கண்டுபிடிக்கப் பட்டு வகைப்படுத்தப்படுகின்றன. அடர்ந்த காட்டுப் பகுதி யில் புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் குளங்களும் பட்டியலில் சேர்க்கப்படுகின்றன.

அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள தந்திரிமலை, பரவா கறகம ஆகிய இடங்களில் கிராமியக் குளங்களின் புன ரமைப்புத் தொடர்பாகவும் கிராம அபிவிருத்தி தொடர்பாக வும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு தேசிய பட் டினி ஒழிப்பு இயக்கச் சபை நிதி வசதி அளித்தது.

இத் திட்ட வேலைகள் துரிதமாக முன்னேறி வருகின் றன. தேசிய குழுவின் சார்பில் 1980/81ம் ஆண்டுகாலப் பகுதியில் நீர்ப்பாசனத் திணைக்களம் 87 வேலைத் திட்டங் களைப் பூர்த்தி செய்தது.

அனுராதபுர மாவட்டம்	பிரதான குளங்கள்	சிறிய குளங்கள்	ஆணைக் கட்டுகள்
(அ) பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளவை:	38	560	19
(ஆ) திருத்தம் செய்யப் பட வேண்டியவை:	09	1739	26
(இ) முற்றுகப் புனரமைப்பு செய்யப்பட வேண்டியவை:	—	1041	10
	47	3339	55

பொலன்னறுவ மாவட்டம்	பிரதான குளங்கள்	சிறிய குளங்கள்	ஆணைக் கட்டுகள்
(அ) பயன்படுத்தக்கூடிய			
(ஆ) திருத்தஞ்செய்யப்பட வேண்டியவை:	—	18	02
நிலையில் உள்ளவை:	11	120	17
(இ) முற்றுகப் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியவை:	02	33	06
	13	161	25

10. வன வளம்

கிராமவாசிகள் மரத்தையும் விறகையும் பெறுவதற்கு காடுகளே தொடர்ந்தும் முக்கிய இடமாக இருந்து வருகிறது. வட மத்திய மாகாணத்தில் காடுகளின் பரப்பு குறைந்து கொண்டு வருவதை இப்பொழுது காண்கிறோம். இந்த நிலையைத் தடுப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. பலகை, விறகு முதலியவற்றைத் தரக்கூடிய மரங்களை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் கிட்டிய எதிர்காலத்தில் மோசமான பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வேலிகளில் நடுவதற்கென 20,000 இப்பில்—இப்பில் மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு விநியோகிக்க விவசாய அபிவிருத்தி அதிகார சபை திட்டமிட்டிருந்தது. ஆயினும், கடும் வரட்சி காரணமாக இத்திட்டம் தடைப்பட்டது.

நிழலுக்காக வளர்க்கப்படும் மரக்கன்றுகளும் பல வகை மலர்ச் செடிகளும் ஹபரணை, சிகிரியா, பொலன்னறுவ ஆகிய இடங்களிலுள்ள பிரபல ஹோட்டல்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இந்த ஹோட்டல்கள் தாவரங்களை நன்கு பராமரிக்கக் கூடிய வசதிகளைக் கொண்டுள்ளன. இதற்கு எதிர்மாறாக, பல அரசாங்க நிறுவனங்களில் தடல்புடலாக மரம் நாட்டும் விழா நடைபெறுவதும் பின்னர் அத்தாவரங்கள் கவனிப்பாரற்று செத்து மடிவதும் சகஜம்.

காட்டு மரங்கள் சட்ட விரோதமாகத் தறிக்கப்படும் பிரச்சினை தொடர்ந்து நிலவுகின்றது. அரசாங்க அதிகாரிகள் சிலரின் உதவியுடன் இதற்கென நன்கு திட்டமிடப் பட்ட ஓர் இயக்கமே இருப்பது போலத் தெரிகிறது.

11. வீட்டுத் தோட்டம்

இந்த மாகாணத்தில் கீழ்க் காணப்படும் தாவரங்களை கமநல சேவைகள் திணைக்களமும் விவசாயத் திணைக்களமும் விநியோகித்தன. எனினும், வரட்சி காரணமாக இந்தத் தாவரங்கள் தப்பிப் பிழைக்குமா என்பது எமக்குச் சந்தேகமாகவே இருக்கிறது.

	பொலன்னறுவ மாவட்டம்	அனுராதபுர மாவட்டம்
செவ்விளநீர் கன்றுகள்	500	1,542
தென்னம்பிள்ளைகள்	19,585	31,178
தேக்கு	10,000	—
ஒட்டு மா	1,025	6,365
எலுமிச்சை	840	5,800
தென்னை (தெங்கு செய்கைச் சபை வழங்கியவை)	54,591	—

12. சந்தைப்படுத்தல்

சந்தைப்படுத்தல் துறையில் பெரும் பகுதி தனிப்பட்ட வர்த்தகர்களின் கைகளிலேயே உள்ளது. விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை கிராமப்புறச் சந்தைகளுக்குக் கொண்டு செல்கிறார்கள் அல்லது தம்மிடம் வரும் தனிப் பட்ட வியாபாரிகளுக்கு விற்றுவிடுகிறார்கள். 1982 ஜனவரி தொடக்கம் அநேகமான கமநல சேவை நிலையங்கள் நெல் சந்தைப்படுத்தும் சார்பில் நெல்லையும் சில உப உணவுப் பயிர்களையும் உத்தரவாத விலையில் கொள்வனவு செய்ய இருக்கின்றன. விவசாயிகள் தனிப்பட்ட வியாபாரிகளுடன் பேரம் பேசி விற்பதற்கு இந்த வர்த்தகப் போட்டி உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

"இடைநிலை வர்த்தகர்களை" சமூக ஒட்டுண்ணிகள் என்றும் மற்றையோர் உற்பத்தி செய்யும் பொருட்களை வாங்கி விற்கும் தொழில் ஒன்றையே அவர்கள் செய்கிறார்கள் என்றும் இழிவாகக் கருதுவது அரசியல்வாதிகளுக்கும் உயர் திர்வாக அதிகாரிகளுக்கும் வழக்கமாகிவிட்டது. இது ஒரு தர்ப்பாக்கிய நிலையாகும். செய்யப்படும் சேவைகளின் தன்மையை, உற்பத்திப் பொருட்களில் முதலீடு செய்யப்படும் கணிசமான தொகையை, சந்தைப்படுத்தும் முயற்சியில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளை எவரும் கருத்திற்கு எடுத்துக்கொள்வதில்லை. பாவனையாளர்கள் கொடுக்கத் தயாராக இருக்கும் விலைகளைப் பொறுத்தே விவசாயிகளுக்கு வழங்கப்படும் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதையும் நாம் மறந்து விடுகிறோம்.

அநேகமான உப உணவுப் பயிர்களின் அறுவடை பெப்ருவரி மாத நடுப்பகுதியிலேயே ஆரம்பமாகிறது. மீண்டும் தனிப்பட்ட வியாபாரிகளே கொள்வனவில் முன்னிற்கிறார்கள்.

பொது

விவசாய அபிவிருத்தி பற்றிப் பேசும்போது பயிர்ச் செய்கை பற்றி மாத்திரம் கூறுவதுடன் நின்றுவிட முடியாது. போக்குவரத்து, ஆராய்ச்சி, வர்த்தகம், அரசாங்கக் கொள்கைகள், வங்கி முறைகள், அரசாங்கத் திணைக்களங்களின் நிர்வாகத் திறன் என்பன பற்றியும் கவனிக்கவேண்டியிருக்கிறது. உள்ளக நிர்வாக அமைப்பின் மந்தநிலை அல்லது சீர்கேடு கவலைக்குரிய ஒரு விஷயமாகும். துரித தொடர்புக்கு அவசியமான தொலைபேசி பெரும்பாலும் செயலிழந்ததாகவே இருக்கிறது. தந்திகள் போய்ச் சேருவதற்கு சில சந்தர்ப்பங்களில் மூன்று தினங்கள் எடுக்கின்றன. கடிதங்கள் உரிய இடத்திற்குப் போய்ச் சேருவதுமில்லை. வீதிகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் லொறிகளும் ஏனைய வாகனங்களும் பழுதடைகின்றன. பொலன்னறுவை போன்ற இடங்களில்கூட இந்த வாகனங்களுக்கான பராமரிப்பு நிலையங்கள் கிடையாது. தூர இடங்களில் வசிக்கும் அரசாங்க ஊழியர்களுக்கு முறையான இருப்பிட வசதியோ அல்லது ஏனைய அடிப்படை வசதிகளோ வழங்கப்படவில்லை. விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களுக்கு வாகன வசதி கிடையாது. மூன்றேற்றத்திற்குத் தடையாக இருக்கும் இந்த விஷயங்களில் கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும்.

ஒப்பம் /என். ஜீ. விக்கிரமசிங்கா,
மாகாண அதிபர் — வட மத்திய மாகாணம்.

விவசாய அபிவிருத்தி அதிகார சபை

பயிற்சி பிரசாரம் பிரிவு—ஆண்டறிக்கை 1981

பயிற்சி:

விவசாய அபிவிருத்தி அதிகார சபையின்
மாகாண பணிப்பாளர்கள்,
பிரதி மாகாணப் பணிப்பாளர்கள்,
விவசாய முகாமையாளர்கள்

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை உயர் உத்தியோகஸ்தர்களுக்கான, கமத்தொழில், கமத்தொழில் சார் துறைகளிலான தூண்டற் பயிற்சித் திட்டங்கள் இந்த ஆண்டிலும் தொடர்ந்தன. இந்தப் பயிற்சித் திட்டங்கள், கமத்தொழிற் கடன், கமத்தொழிற் காப்புறுதி, விலங்கு வேளாண்மை, "வேளாண்மை முறைகளின் காப்பு" ஆகிய முக்கிய விடயங்களை உள்ளடக்கின. கன்னெறுவாவில் உள்ள சேவைக்கால பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற ஐந்து நாள் பயிற்சியில் 11 பிரதி மாகாணப் பணிப்பாளர்களும், 46 கமத்தொழில் முகாமையாளர்களும் பங்கு கொண்டனர். கமத்தொழிற் திணைக்களம், விலங்கு உற்பத்தி—சுகாதார திணைக்களம், சிறுபயிர் ஏற்றுமதித் திணைக்களம், கமத்தொழிற் காப்புறுதிச் சபை, தெங்கு ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றுடன் சர்வதேச உலர்வலய விவசாய நிலையத்தின் இலங்கைப் பணிப்பாளர் திரு. ரே. விஜயவர்த்தனவும் ஒன்றிணைந்து இந்தத் திட்டங்களிற் செயற்பட்டனர்.

விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் உயர் உத்தியோகத்தர்களுக்கு உலர்வலய பயிற் செய்கை முறையற்றிய பயிற்சி கிடைத்தது. "வலகம்பாகுவ எண்ணக்கரு"வின் பாற்பட்ட நீர்ப்பாசன முகாமையில் பயிற்சித்திட்டம் அதிக அழுத்தம் கொடுத்தது. மகா இலுப்பலகம நீர் முகாமை பயிற்சி கமத்தொழில் முகாமையாளர்களுக்கு நன்மையானது. இதன் வழி பெரும்போகத்தில் முன்னதாகவே வேளாண்மையைச் செய்வதன் மூலம் இன்றைய நீர்வீணுக்கல் நிலைமை தவிர்க்கப்படலாம். இவ்வாறு சேமிக்கப்படும் நீர், சிறுபோகத்திலே உப உணவுப் பயிர்களை அல்லது நெல்லை விளைவிக்க உதவும். கமத்தொழில் முகாமையாளர்கள் இங்கு பெறும் பயிற்சியின் மூலம், சிறு நீர்ப்பாசனத் தாங்கிகளுக்கு பொறுப்பானவர்களை உரிய முறையில் வழி நடத்த முடியும். இந்தப் புதிய எண்ணக்கருவின் நடைமுறைக்களமான வலகம்பாகு கிராமத்திற்கான சுற்றுலாவையும் இந்த மகா இலுப்பலகம பயிற்சித் திட்டம் உள்ளடக்கியது. ஈரவலய கமத்தொழில் முகாமையாளர்களுக்கான மாக்கறி, பழ உற்பத்திக்கான செறிவான பயிற்சி பிதுறுவேவ சேவைக்கால பயிற்சி, நிலையத்தில் தொடர்ந்தது, உள்ளூர் மாக்கறி உற்பத்தியை முடிந்தால் தேர்தற் தொகுதி அடிப்படையில் ஊக்குவிப்பதாக இது அமைந்தது. இத் திட்டத்தின்கீழ் பண்டாரவளை ஆராய்ச்சி நிலையத்தினை பார்வையிடும் வாய்ப்பும் கிடைத்தது.

பிரிவு உத்தியோகத்தர்கள்—

கமத்தொழிற் சேவை திணைக்களம்.

கொழும்பிலுள்ள, கமத்தொழில் ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனத்தில், கமத்தொழிற் சேவை திணைக்களத்தைச் சேர்ந்த 331 பிரிவு உத்தியோகத்தர்களுக்கென 3 நாள் பயிற்சித் திட்டங்கள் எட்டு ஒழுங்கு செய்யப்பட்டன. பிரிவு உத்தியோகத்தர்களினால் நிர்வகிக்கப்படும் விவசாய சேவை நிலையங்களின் கணக்கியல் முறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் முகமாகவே இது ஒழுங்கு செய்யப்பட்டது. வீட்டுத் தோட்டம், நெல் உற்பத்தி, விவசாய சேவைகள் சட்டம், விவசாய சேவை நிலையங்களின் முறையான கணக்குவைப்புகள், கமத்தொழிற் சந்தைசார் அம்சங்கள் ஆகியவற்றினை இப்பயிற்சித் திட்டம் உள்ளடக்கியிருந்தது. கமத்தொழிற் திணைக்களம், கமத்தொழிற் சேவைகள் திணைக்களம், உரயாக்கம், மெஸ்லேஸ் மனேஜ்மன்ற் எயிட் லிமிட்டெட், கமத்தொழில் ஆராய்ச்சி, பயிற்சி நிறுவன பயிற்சி உத்தியோகத்தர்களுடன், விவசாய அபிவிருத்தி கார சபை உத்தியோகஸ்தர்களும் இணைந்து வேண்டிய விரிவுரைகளை வழங்கினர்.

இதற்கு மேலதிகமாக, மாவட்ட மட்டத்திலே 245 பிரிவு உத்தியோகத்தர்களுக்கான தனியான பயிற்சி வகுப்புகளும் ஒழுங்கு செய்யப்பட்டன. நெல் சந்தைப்படுத்தும் சபை, கமத்தொழிற் சேவைகள் திணைக்களம், நெல்சந்தைப்படுத்தும் சபையின் ஒரு முகவராக உப உணவுப் பயிர் கொள்வனவு தொடர்பான பயிற்சியை பிரிவு உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் கமத்தொழிற் சேவைகள் திணைக்கள விற்பனைப் பிரிவு ஆகியன ஒன்றிணைந்தே இதனை ஒழுங்கு செய்தன. தெரிவு செய்யப்பட்ட உற்பத்திப் பகுதிகளில் உப உணவுப பயிர்களுக்கான கொள்வனவு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. பல்வேறு மாவட்ட நிலையங்களிலும் பிரிவு உத்தியோகத்தர்களுக்கான 11 வகுப்புகள் நடத்தப்பட்டன. அநுராதபுரம், அரிசி பதப்படுத்தும் அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர்களே இங்கு முக்கிய விரிவுரையாளர்கள். 1982 ஜனவரியிலிருந்து நெல்லையும், உப உணவுப் பயிர்களையும் கொள்வனவு செய்யும் இந்த திட்டமூலம் விவசாயிகள் தனி வியாபாரிகளிடம் குறைந்த விலையிற் தம் உற்பத்திகளை விற்கும் நிலை மாறியது.

விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் பாத்திரப் பங்கினை தெளிவுபடுத்தி கமத்தொழில் சேவைகள் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து செயற்படும் நிலையினை விவசாய சேவை திணைக்கள உதவி ஆணையாளர்களும், பிரிவு உத்தியோகத்தர்களும் இந்த பயிற்சித் திட்டத்தின் வழி பெற முடிந்தது.

பயிற்செய்கை உத்தியோகத்தர்—

கமத்தொழிற் சேவைத் திணைக்களம்.

கமத்தொழில், கமத்தொழில் சார் விடயங்களில் அடிப்படைப் பயிற்சியானது பின்வரும் தேர்தற் தொகுதிகளைச் சேர்ந்த பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் கிராமிய மட்டத்தில் விவசாய அபிவிருத்தியிலும், உற்பத்தியிலும் ஈடுபடும் பல்வேறு திணைக்களங்களிடையேயும் அதியுயர் ஒத்துழைப்பினைக் காண முடியலாம் இந்தப் பயிற்சித் திட்டம் ஐந்து நாட்களைக் கொண்டது. பல்வேறு விவசாய சேவை நிலையங்களிலும் நடைபெற்றது.

வருடத்தில் பயிற்றப்பட்ட பயிர்செய்கை உத்தியோகத்தரின் மொத்த எண்ணிக்கை 842. கமத்தொழிற் திணைக்களம், விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களம், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம், தெங்கு உற்பத்தி சபை, கமத்தொழிற் காப்புறுதிச் சபை மக்கள் வங்கி, இலங்கை வங்கி, மற்றும் ஏனைய கூட்டுத்தாபனங்களிலிருந்தும் பயிற்று

விப்பாளர்கள் இடம் பெற்றனர். 1978 இலிருந்து இன்று வரை 76 தேர்தற் தொகுதிகளிலுமிருந்தும் 2631 பயிற்செய்கை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

மாகாணம்	தேர்தற் தொகுதி		பஉ.எண்
வடமேல் மாகாணம்	புத்தளம்		27
மேல் மாகாணம்	மத்துகம		37
	பண்டாரகம		35
	அகலவத்த		32
	புலத்சிங்கல		45
	ஹொரண		28
	பியகம		19
	மகர		32
	பாததும்பற		21
மத்திய மாகாணம்	கலகெதர		44
	தம்புள்ள		51
	குண்டசாலே		28
	ஹரிஸ்பத்துவ		71
	ஹெவாஹெற்ற		31
கிழக்கு மாகாணம்	சேருவில		21
	மூதூர்		22
ஊவா மாகாணம்	வியாலுவ		21
	மாகியங்கணை	1X2	24
வட மாகாணம்	கிளிநொச்சி	1	15
	கிளிநொச்சி	11	14
	முல்லைத்தீவு	1	15
	மன்னார்	1	15
வடமத்திய மாகாணம்	மின்னேரியா வலயம்	1, 11	19
	அநுராதபுரம் கிழக்கு		18
	அநுராதபுரம் மேற்கு		29
	மிஹிந்தலை		30
	கெக்கிராவ		28
	ஹொரவப் பொத்தான		28
	பொலநறுவை வலயம்	1, 11	20
	கலாவேவ		21
			842

மேலதிகமாக மூன்று முதல் ஐந்து நாள் வரையிலான வதிவிட களப்பயிற்சியும் அடிப்படைப் பயிற்சியை முடித்த பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. வடமேல் மாகாணத்தில் வாரியபொலவிலும், கிழக்கு மாகாணத்தில் மல்வத்தவிலும், தென் மாகாணத்தில் லபுதுவவிலும், மேல் மாகாணத்தில் அம்பேபுஸ, வல்பிற்ற ஆகிய உள்ள விவசாய பயிற்சிப் பண்ணைப் பாடசாலைகளில் இந்த இடங்களிலும், மத்திய மாகாணத்தில் வகொல்லவிலும் தப் பயிற்சிகள் நடந்தன.

வடமேல் மாகாணம்	வாரியபொல	28
	மாபகுவ	45
	பொல்காவெல	39
	நிக்கவரெட்டியா	40
மேல் மாகாணம்	மினுவாங்கொட	38
	கம்பஹா	36
	ஜாஎல	23
மத்திய மாகாணம்	உடுதும்பற	16
	தெல்தெனியா	28
கிழக்கு மாகாணம்	சம்மாந்துறை	55
	பட்டிருப்பு	32
		448

1978 முதல் இன்று வரை இந்த பயிற்சியை பெற்றுக் கொண்ட மொத்த பயிற்செய்கை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 36 தேர்தற் தொகுதிகளைச் சேர்ந்த 1313.

இந்த ஆண்டிலே விவசாயிகளின் வீட்டுத் தோட்டங்களை விருத்தி செய்வதிலும் மாதிரி வீட்டுத் தோட்டங்களை அமைப்பதிலும் விவசாயிகளுக்கு உரிய பயிற்சி அளிப்பதிலும் பயிற் செய்கை உத்தியோகத்தர்கள் ஆர்வங்காட்டினர். இந்த திட்டம் கமத்தொழிற் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பெற்றது. இப்பயிற்சி கமத்தொழிற் திணைக்கள பண்ணைகளிலும், சேவைக்கால பயிற்சி நிலையங்களிலும், மாவட்ட பயிற்சி நிலையங்களிலும் நடைபெற்றன.

விசேட ஆர்வ குழுக்கள்:

அநுராதபுரத்திலுள்ள பண்ணை இயந்திரமயமாக்க பயிற்சி நிலையத்திலே கமத்தொழிற் சேவைகள் திணைக்களத்தின் உழவுயந்திர இயக்குநருக்கான பயிற்சி தொடர்ந்து நடந்தது. இந்தப் பயிற்சியில் 'ஷிகிபௌரா,' 'குபோரா' ஆகிய நான்கு சக்கர உழவு இயந்திரங்களை இயக்கவும், பேணவும் மேலதிகமாக 108 இயக்குநருக்கு பயிற்சியளிக்கப்பட்டது. நிலைய விரிவுரையாளர்களினால் பயிற்சி அளிக்கப்பட்டது. 5 நாள் பயிற்சித் திட்ட முடிவில் உழவு இயந்திர ஓட்டிகளுக்கான தகுதிகாண் சோதனைகளும் நடத்தப்பட்டன.

தேயிலைப் பயிர்ச்செய்கை, சிறு அளவிலான தேயிலைக் காணிகளின் பராமரிப்பு தொடர்பாக விவசாய திணைக்களத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு, வலஹவ்டுவ தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பயிற்சி நிலையத்தில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

சிறு அளவிலான தேயிலை உற்பத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களிடமிருந்து வேண்டிய ஆலோசனை உதவியைப் பெறும் வகையில் 25 உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. மாத்தறை, உதவி கமத்தொழில் பணிப்பாளரின் கீழ் பணியுரியும் சிறு அளவிலான தேயிலை உற்பத்தி பெருமளவில் மேற்கொள்ளப்படும் பகுதிகளில் வேலை செய்யும் உத்தியோகத்தர்களே இப் பயிற்சியைப் பெற்றனர்.

விவசாய அபிவிருத்தி அதிகார சபை

பயிற்சி பிரசாரப் பிரிவு—ஆண்டறிக்கை 1981

நீர்ப் பாவனை, பயிர் செய்கை கூட்டங்களின் தீர்மானங்களை அனுசரித்து நடத்தல், பயிர்களுக்கு மேலதிகமாக நீர்ப்பாசனம் செய்வதால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான ஒரு நாள் பயிற்சி, தென் மாகாண பயிற்செய்கை உத்தியோகத்தர்களுக்கு அளிக்கப்பட்டது. பயிற்சியின் பின்னர் நடத்தப்பட்ட கலந்துரையாடல் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. பெருமளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் கையாளுவதற்கு நீர்ப்பாசன திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் சேவையினைப் பெற முடியாமற் போனமையினால், சிறு அளவிலான நீர்ப்பாசன அமைப்புகள் தொடர்பான நீர்ப்பாவனை பற்றிய தாகவே கலந்துரையாடல் அமைந்தது. இந்த இயைபுபடுத்திய பயிற்சித் திட்டத்தை வழங்குவதில் கமத்தொழில் சேவைகள் திணைக்களம், விவசாய திணைக்களம் ஆகியன விவசாய அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்களுடன் இணைந்து செயலாற்றின.

ஓர்க்கிட் வளர்ப்பு, உயிரின வாயு உற்பத்தி உபகரணங்களை அமைத்தலும் அதனைப் பயன்படுத்தலும், இளைஞர்களுக்கு சுயதொழில் என்ற முறையில் தேனீ வளர்த்தல், இஞ்சி, மஞ்சள் அதிகமாகப் பயிரிடப்படும் பகுதிகளில் அவற்றைப் பதனிடுதல், வீட்டுத் தோட்டங்களை அமைத்தல், ஆகியவற்றில் பல தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. பாதகும்பற தேர்தல் தொகுதியில், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம், விவசாய திணைக்களம் ஆகியவற்றின் உதவியுடன் பண்ணை இளைஞர்களுக்கு பயிற்சி வகுப்புகளை மாவட்ட மட்டத்தில் விவசாய முகாமையாளர் ஒழுங்கு செய்தார். 12 பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு நவயலதன்ன பண்ணையில் விவசாயத்தில் செய்முறைப் பயிற்சி அளிக்கப்பட்டது.

தொம்பே தேர்தல் தொகுதியில், வீட்டுத் தோட்டங்களை அமைத்தல் தொடர்பான ஒரு போட்டியில் தெரிவு செய்யப்பட்ட 100 விவசாயிகள், தொம்பே விவசாய முகாமையாளரினால் கல்விச் சுற்றுலா ஒன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்தச் சுற்றுலாவில், பதலகொட அரிசி ஆராய்ச்சி நிலையம், மஹா இலுப்பலம வறண்ட வலய ஆராய்ச்சி நிலையம், கலாவெவ "எச்" பகுதிகள், மஹாவலி அபிவிருத்தித் திட்டத்திலுள்ள போவத்தன நீர்த்தேக்கம் ஆகிய இடங்களுக்குச் சென்றனர். பதலகொட அரிசி ஆராய்ச்சி நிலையத்தில் வழங்கப்பட்ட, புதிய நெல் வகைகளை உருவாக்குதல், அவற்றைப் பெருக்குதல் தொடர்பான தகவல்களில் விவசாயிகள் அதிக அக்கறை கொண்டுள்ளனர்.

தகவல் வெளியீடுகள்

கமத்தொழில் திணைக்களத்தினால் வெளியிடப்படும் வெளியீடுகள் விவசாய முகாமையாளர்கட்கு அவ்வப்பகுதி உதவி விவசாய பணிப்பாளர்கள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. தென்னை புனர்நடுகை, தென்னையிடையே கலப்புப் பயிர்ச் செய்கை பற்றிய வெளியீடுகள் இவ்வருடத்திலும் தொடர்ந்தும் விநியோகிக்கப்பட்டன.

பல தொகுதிகளிலும் உள்ள விவசாய முகாமையாளர்களுக்கு கமத்தொழில் திணைக்களத்தின் கல்வி புகட்டல் பகுதியினால் தயாரிக்கப்பட்டு அச்சடிக்கப்பட்ட கைநூல் ஒன்றும் விநியோகிக்கப்பட்டது.

திரைப்படம்

சில தேர்தல் தொகுதிகளில் விவசாய திணைக்களத்தினதும், அரசாங்க மற்றும் தாபனங்களினதும் உதவியுடன் வருடாந்த மற்றும் நிரந்தர பயிர் செய்கை பற்றிய விளக்கத் திரைப்படங்களை விவசாயிகட்கு காண்பிக்க விவசாய முகாமையாளர்கள் ஒழுங்கு செய்துள்ளார்கள். மாடு கட்டி உழும், கலப்பைகள் பாவிக்கப்படும் இந்திய விவசாய முறைத் திரைப்படங்கள் களுத்துறை மாவட்டத்தில் இந்திய உயர் தானிகரின் உதவியுடன் காண்பிக்கப்பட்டன. ப. ச. ஞா. மண்டபத்தில் எம்மால் நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்ட அழைப்பாளர்கள் அனைவருக்கும் பிரான்சு தூதரகத்தினால் வழங்கப்பட்ட விவசாயம் சம்பந்தப்பட்ட திரைப்படம் ஒன்று காண்பிக்கப்பட்டது. இதன் தலைப்பங்கம் "தொழிலின் விவசாய உபகரண கண்டுபிடிப்பு" என்பதாகும். இதில் சிறிய கமக்காரர்களுக்கு மிருக சக்தியைக் கொண்டு கூடிய பயிர்ச் செய்கை பண்ணும் வழிவகைகள் விளக்கப்பட்டுள்ளன. கன்னெறுவாவில் நடைபெற்ற உள்-சேவை பயிற்சியின்போது கலந்துகொண்டவர்கட்கு "ஸ்லைட்" படக்காட்சி ஒன்றும் காட்டப்பட்டது.

கருத்தரங்கு

1981ம் ஆண்டு மே மாதம் 6-ந் திகதி ப.ச.ஞா. மண்டபத்தில் ஒரு நாள் கருத்தரங்கு ஒன்று மாண்புமிகு ஜனதிபதியின் தலைமையில் நடைபெற்றது. இங்கு கலந்துரையாடலுக்கு, சிறிய, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் எதிர்படும் பிரச்சினைகள், விவசாய உற்பத்தி இலக்குகள், குடியேற்றம், கமநல சேவைகள், விதை உற்பத்தி மற்றும் விநியோகம், விவசாயக் கடன், தேசிய உணவு காப்பு நிட்டம் போன்ற விடையங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த கலந்துரையாடலுக்கு விவசாய அபிவிருத்தியில் தொடர்புள்ள அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், செயலாளர்கள் விவசாய அபிவிருத்தி அதிகார சபை அதிகாரத்தில் வரும், மாவட்ட அமைச்சர்கள், திணைக்களத் தலைவர்கள், கூட்டுத் தாபனத் தலைவர்கள், விவசாய அபிவிருத்தி அதிகார சபை தொழில்படும் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள்—அரசாங்க அதிபர்கள்—ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தார்கள். இலங்கையின் விவசாய அபிவிருத்திக்கு உதவியளிக்கும் வெளிநாட்டு தூதரகத் தலைவர்கள்—உ. அ. தாபனம். யு என். டி. பி; என். ஓ. ஆர் ஏ- டி; எஸ்-ஐ; டி; ஏ; தாபனங்களின் தலைவர்கள் ஆகியோரும் அழைக்கப்பட்டு இருந்தார்கள்.

சாம் டி. அல்விஸ்,

பணிப்பாளர்—பயிற்சியும் பிரசாரமும்.

விவசாய அபிவிருத்தி அதிகார சபை

வருடாந்த அறிக்கை 1981 உள்ளிடுகைகள் பிரிவு

விவசாய அபிவிருத்தியில் உள்ளிடுகைகள் மிகவும் பல மானதோர் பங்கினை வகிக்கின்றது. தற்கால விவசாயத்தில் ஏற்கனவே பாவனையில் உள்ள மூலவளங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக உற்பத்தி நடவடிக்கைகள் மாற்றப்பட்டுள்ளன. அத்துடன், இம்மாற்றி அமைக்கப்பட்ட புதிய முறைகள் இந்த உள்ளிடுகைகளின் கூடிய விநியோகத்திலேயே தங்கியுள்ளது. இவ்வுள்ளிடுகைகளினிடையேயான தொடர்பு வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு உற்பத்தி முறைகளில் வேறுபடுகின்றது. எனவே அவற்றின் ஏற்பாடுகளுக்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எத்தகைய மேலதிக வகைகளிலான உள்ளிடுகைகள் தேவைப்படுகின்றன என்பதைக் குறிப்பாக நிர்ணயிப்பது மிகவும் முக்கியமாகும்.

பொது

இந்த உள்ளிடுகைகள் பிரிவானது விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் கீழான தொகுதிகளிலுள்ள விவசாயிகளின் பலவகையான விவசாய உள்ளிடுகைகளின் தேவைகளைக் கவனிக்கும் பல அரசாங்க, தனியார் பிரிவுத் தாபனங்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. இவ்விவசாய உள்ளிடுகைகள்பல்வேறுபட்ட ஒழுங்குமுறையில் பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது, விதை நடுகைப் பொருட்கள், கடனும் காப்புறுதியும், மிருக வளர்ப்பு, உரமும் விவசாய இரசாயனப் பொருட்களும், உபகரணங்களும் பண்ணை வலுவும் நீர்ப்பாசனம் ஆகியன வெவ்வேறுபட்ட பிரதிப் பணிப்பாளர்களின் கீழுள்ளன.

1978 ஆம் ஆண்டின் நடுப்பகுதிவரை இப்பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு. ஜீ. ஆர். சந்திரசிறீ, தனியார் பிரிவில் சேர்ந்துகொள்வதற்காக ஜனவரி 1981-ல் விலகினார். மிருக வளர்ப்பிற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். எஸ். செல்வேந்திரன் உள்ளிடுகைகள்பிரிவின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். நீர்ப்பாசனம், விதை நடுகைப் பொருட்கள் ஆகியவற்றிற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளர்களான திரு. எஸ். ஜயதிலக, திரு. சீ. டபிள்யு. லியனகே ஆகியோர் முறையே ஜனவரி, ஆகஸ்டு மாதங்களில் நீங்கிவிட்டனர். நீர்ப்பாசன உதவிப் பணிப்பாளராக திரு. எஸ். மஞ்ச நாயக்காவும் மிருக வளர்ப்பு உதவிப் பணிப்பாளராக திரு. எஸ். செய்சாவும் இவ்வருடத்தில் நியமிக்கப்பட்டனர்.

ஒவ்வொரு பிரிவு தொடர்பான செயல்முறைகளும் கீழே தரப்பட்டுள்ளன:

விதை நடுகைப் பொருள்

இது அதிகரித்த உற்பத்தி தொடர்பாக மற்றெல்லா உள்ளிடுகைகளுக்கிடையிலான முழுமையான தொடர்பின் பயனைத் தீர்மானிக்கும் பிரதான விவசாய உள்ளிடுகைகளில் ஒன்றாகும்

உள்ளிடுகைகள் பிரிவின் பணிப்பாளர், கமத்தொழில் திணைக்களத்தின் பண்ணைகள், நடுகைப் பொருட்கள் பிரிவின் மீள் அமைப்பு தொடர்பான கடமைகளைப் புரியும் குழுவின் அங்கத்தவராகச் சேவையாற்றினர். இக்குழுவின் பிரேரணைகள் கமத்தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சின் கவனத்திற்கென முன்வைக்கப்பட்டுள்ளன.

1. நெல் :

திருத்திய விதை நெல் வர்க்கங்களை விவசாயிகள் உபயோகித்தலைத் தூண்டும் முகமாகவும் இத்திருத்திய விதை நெல் வர்க்கத்தை இலகுவில் கிடைக்கச் செய்யும் நோக்குடன் தொகுதிகளில் இரண்டாந்தர விதை நெல் பண்ணைகள் தாபிக்கப்படுகின்றன. இப்பண்ணைகளுக்கான விதை நெல் தேவைகள், தொடர்புடைய விவசாய முகாமையாளர்களால் தீர்மானிக்கப்படுகின்றன. பண்ணைகள், நடுகைப் பொருட்கள் பிரிவு ஆகியவற்றினூடாக விவசாய உதவிப் பணிப்பாளர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் பின்னரே இத்தேவைகள் உகந்தனவாக்கப்பட்டன.

கமதொழில் திணைக்கள அரசாங்கப் பண்ணைகளின் பெரும்போக, சிறுபோக உற்பத்தி இலக்குகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுடன் அமைக்கப்பட்ட திட்டங்களிற்கிணங்க கலந்துரையாடப்பட்டது. தனிப்பட்ட வேண்டுதல்கள் அல்லது குறைபாடுகள் பண்ணைகள் நடுகைப் பொருட்கள் பிரிவின் மூலம் தீர்மானிக்கப்பட்டன.

கடந்த சில வருடங்களாக, பொலநறுவை மாவட்டத்தில் 3 தொடக்கம் 3½ மாதங்கள் வரையிலான வர்க்கங்களைப் பயிரிடுவதற்கென நீர் வழங்கப்பட்டதுடன், தற்போதைய வருடத்திற்கும் ஒரே அடிப்படையிலான திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறுகிய கால வர்க்கங்களைப் பயிர் செய்துவரும் இம்மாவட்ட விவசாயிகளிடம் இப்பெரும் போகத்திற்குப் பயிர்செய்வதற்கென இவ்வர்க்க விதை நெல் மட்டுமே காணப்படுகின்றன. எப்படியிருப்பினும் நான்கு மாதங்களிலுக்கு நீர் வழங்கும் தீர்மானத்திற்கு இணங்க 4 தொடக்கம் 4½ மாத விதைநெல் வர்க்கத்திற்கு நிலுவை சந்தை உருவாகியது. இக்கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான புதிய திட்டத்தைத் தயாரிப்பதற்கும், கமத்தொழில் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் இம்மாவட்டங்களைச் சென்று பார்வையிடுவதற்குமென விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேற்கூறிய அம்சங்கள் தொடர்பாக பண்ணை நடுகைப் பொருட்கள் பிரிவினாலும் கமத்தொழில் திணைக்களத்தினாலும் வெவ்வேறு மாவட்டங்களுக்குக் கொடுக்கப்பட்ட பங்குகள் அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

விவசாய அபிவிருத்தி அதிகார சபை

வருடாந்த அறிக்கை 1981 உள்ளிடுகைகள் பிரிவு

அட்டவணை 1

விதைநெல் விநியோகம்

மாவட்டம்	சிறுபோகம் புசல்கள்	பெரும் போகம் புசல்கள்
1. கொழும்பு	3,310	2,500
2. கம்பஹா	17,790	22,964
3. களுத்துறை	5,710	12,986
4. காலி	3,707	8,056
5. மாத்தறை	6,140	11,690
6. இரத்தினபுரி	2,840	4,592
7. கேகாலை	1,848	1,700
8. குருணாகல்	19,334	28,704
9. மாத்தளை	3,100	7,666
10. நுவரெலியா	599	—
11. பதுளை	6,310	12,129
12. மொனராகலை	598	2,800
13. அநுராதபுரம்	14,724	53,640
14. அம்பாந்தோட்டை	6,000	13,632
15. அம்பாறை	8,010	16,130
16. திருகோணமலை	32,860	33,458
17. மட்டக்களப்பு	1,000	16,770
18. மன்னார்	18,140	14,400
19. வவுனியா	650	11,524
20. யாழ்ப்பாணம்	190	29,686
21. முல்லைத்தீவு	1,000	17,656
22. கலாவேவா	12,920	—
23. புத்தளம்	2,920	9,620
24. பொலநறுவை	14,124	22,218
25. மகாவலி அதிகார சபை	—	21,810
26. எம். ஏ. "சீ" மகியங்கனை	—	9,822
	367,048	392,865

ஹொரவப்பொத்தானைத் தொகுதியிலுள்ள வறிய விவசாயிகளுக்கு விதைநெல்லைக் கடனுக்கு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பரப்பளவு 40,000 ஏக்கர்கள் வரையிலானது என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதிக்கான விதைநெல் விநியோகம் கமத்தொழில் திணைக்களத்தினால் திட்டமிடப்பட்டிருக்காமையினால், நெற் சந்தைப்படுத்தும் சபையிலிருந்து நெல்லைத் தெரிவு செய்தலில் கமத்தொழில் திணைக்களத்தில் என்ன அளவுகள் கிடைக்கப் பெறுகின்றனவோ, அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு உடனடியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நெற்சந்தைப்படுத்தும் சபையின் ஒத்துழைப்புடன் அம்மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட பலத்த மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நெல் வழங்கப்பட்டது.

விதைநெல்லின் தரம்பற்றிய முறைப்பாடுகள் கமத்தொழில் திணைக்களத்தின் உதவியுடன் ஆராயப்பட்டன.

2. ஏனைய பயிர்கள் :

விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் கீழுள்ள தொகுதிகளுக்குத் தேவையான விதைநெல், ஏனைய வெளிக்களப் பயிர்களின் விதை நடுகைப் பொருட்கள் ஆகியன கமத்தொழில் திணைக்களம், தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை, சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம் ஆகியவற்றினூல் வழங்கப்பட்டன. விதைகள் அல்லது நடுகைப் பொருட்கள் தொடர்பான முறைப்பாடுகள் கவனிக்கப்பட்டு உகந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

3. உருளைக் கிழங்கு :

கமத்தொழில் திணைக்களப் பண்ணைகளினூல் விதை உருளைக்கிழங்கு உற்பத்தியினை அதிகரிக்கும் எல்லா வழிகளையும் கண்டறியும் நோக்குடன் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நுவரெலியா மாவட்ட விவசாயக் குழு, கமத்தொழில் திணைக்களம் ஆகியவற்றின் ஆலோசனையுடன் ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான தேயிலை பயிரிடும் நிலங்களின் ஓரத்தில் விதைஉருளைக்கிழங்கு பயிர் செய்யும் ஒரு விசேட திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்கு ஆரம்ப நடவடிக்கையாக கபரகலை தோட்டத்தில் 50 ஏக்கர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட நிலத்தை இப்பருவத்தில் விதை உருளைக் கிழங்குகள் பயிரிடுவதற்காக தனிப்பட்ட விவசாயிகளுக்கு அளிப்பதற்கான நடவடிக்கை மாவட்ட விவசாயக் குழுவினூல் எடுக்கப்பட்டுள்ளது.

4. சீனிக்கரும்பு :

குருணாகல் மாவட்டத்தின் தேவைகளைச் சந்திக்கும் முகமாக இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம், காணிச் சீர்திருத்த ஆணைக்குழு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் கரும்புச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உபகரணங்களும் பண்ணை வலுவும்

இலங்கை விவசாயிகளைப் பொறுத்தவரையில் இத்தேவைகள் பல்வகைப் பாரம்பரிய செயல்முறைகள் தொடர்பாக அவர்களின் உழைப்பையும் நேரத்தையும் மீதப்படுத்துகின்றன. வி. அ. அ. சபையின் கீழுள்ள தொகுதிகள் பார்வையிடப்பட்டு இத்தேவைகளின் அவசியம்பற்றி ஒரு மதிப்பீடு செய்யப்பட்டது. எரிபொருள், உழவு யந்திரங்கள் ஆகியவற்றின் விலை அளவுகள் இலங்கை விவசாயிகள் சம்பந்தப்பட்டவரையில் பொறியியல் வலுவைப் பயன்படுத்துதலில் அதிக செலவாக்கு உள்ளது. இதனால் நிலத்தை ஆயத்தப்படுத்துவதற்கான பண்ணை வலு தொடர்பான மாற்று மூலங்கள் பற்றி ஆய்வு மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாகப் பார்வையிடப்பட்ட தொகுதிகளில் பண்படுத்தல் பொருளாதார வகைகளைக் கண்டறியும் முகமாகத் தனிப்பட்ட முறையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கிழக்கு மாகாணம், வட மாகாணத்தின் சில பகுதிகள், வட மத்திய மாகாணம் ஆகியவற்றிலுள்ள பெரிய நெற்பரப்புகளில் நான்கு சக்கர உழவு யந்திரம் ஏற்புடையதாயிருக்கின்றது. இவ்வாறு எருமைகள் அதிகமாகவுள்ள சிறிய நெற்பரப்புகளில் கால்நடைகள் மூலம் உழுதல் மிகவும் ஏற்புடையதாயிருக்கும்.

1. மண்வெட்டிகள் :

பண்ணை மட்டத்தில் மண்வெட்டிகளைக் கிடைக்கச்செய்யும் முகமாக கமநலசேவைகள் திணைக்களம், அரச இரும்புக் கூட்டுத்தாபனம், இலங்கை அரச வியாபாரக் (பொது) கூட்

டுத்தாபனம் ஆகியவற்றினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. முதலீட்டார்க் மற்றும் சாதாரண மண்வெட்டிகள் ஆகியவற்றைச் சகல கமநல சேவைகள் நிலையங்களிலும் இலகுவில் கிடைக்கச் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. கால்நடை உபகரணங்கள் :

இலங்கையில் உள்ள பிரான்சு தூதரகத்தால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட ற்றெப்பிக் கியூலேட்டரை (TROPICULATOR) குறிப்பிட்ட சில பகுதிகளில் பண்ணை வலுவிற்கு மாற்று வலுவாக உபயோகப்படுத்தலாமா என்பதுபற்றி மஹா இலுப்பல்லம, பண்ணைப் பொறியியல் ஆராய்ச்சி நிலையத்தினால் ஆராயப்பட்டது. இதுபற்றி வட மத்திய, வட மேற்கு மாகாணங்களில் உள்ள தொகுதிகளின் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

3. ஒற்றைக் கால்நடை உழவு :

மிருக வலுவின் பற்றாக்குறையைத் தீர்க்கும் முகமாக வி. அ. அ சபையின் கீழுள்ள சில தொகுதிகளில் நிலத்தைப் பண்படுத்தலில் ஒற்றைக் கால்நடை உழவினை அறிமுகப்படுத்துவதற்கான திட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

4. சூடடிக்கும் யந்திரம் :

கமத்தொழில் திணைக்களத்தினால் ஆராயப்பட்டு சிபாரிசு செய்யப்பட்ட சூடடிக்கும் யந்திரங்கள் தொடர்பாக விவசாயிகளுக்கு விளக்கப்பட்டு, அதன் பயன்பாடு பற்றி அவர்களுக்குக் கூறப்பட்டும் உள்ளது. அநேக விவசாயிகள், ஏற்கனவே இவ்வகை சூடடித்தலைக் கைக்கொண்டுள்ளமையினால் இத்திட்டம் குறிப்பிட்டளவு வெற்றியைப் பெற்றிருக்கிறது.

5. கைத்தூவு கருவிகளும் களை கருவிகளும் :

இவ்விருவகையான பண்ணை உபகரணங்களின் நன்மைகள், தீமைகள் பற்றி விவசாயிகளுக்கு அத்தொகுதிகளைப் பார்வையிடும்போது தெளிவிக்கப்பட்டுள்ளது . இரசாயனக் களைக் கட்டுப்பாட்டின் உயர்ந்த விலை காரணமாக விவசாயிகள் நாற்று நடலில் ஐப்பானிய றெட்டரி களை கருவிகளை உபயோகிக்க வேண்டியுள்ளது. இதனால் ஏற்பட்ட அதிகரித்த சந்தையின் காரணமாக இவற்றை க. சே. நிலையட்டத்தில் கிடைக்கச் செய்யும் வகையில் தற்போது ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

6. இரண்டு சக்கர உழவு யந்திரம் :

வி. அ. அ. சபையின் கீழுள்ள தொகுதிகளின் விவசாயக் குழுக்களுக்கு இலங்கை அரச வியாபாரக் (உழவு யந்திரம்) கூட்டுத்தாபனத்தினூடாக இரண்டு சக்கர உழவு யந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மிருக வலுவின் பற்றாக் குறையினை எதிர்நோக்கும் விவசாயிகளுக்கு இது கூடுதலாக ஏற்புடையதாக உள்ளது.

7. நீர் இறைக்கும் பம்பிகள் :

நீர்ப் பம்பிகளை இலகுவில் கிடைக்கச் செய்யும் விதத்தில் அவற்றின் உற்பத்தியாளர்களுடன் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. நீர்ப் பம்பிகளை வழங்குவதற்கென அமைக்கப்பட்ட ஒரு விசேட குழுத் திட்டம், வி. அ. அ. சபையின் புதிய தொகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

8. தெளி கருவிகள் :

சகல பண்ணை மட்டத்தில் விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்களுக்கும் மருளுக்கா தெளி கருவிகளை வழங்குதலை ஒழுங்கு செய்தல் சாத்தியமாக உள்ளது. கிராமிய மட்டத்தில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தெளி கருவிகளும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

9. நான்கு சக்கர உழவு யந்திரங்கள் :

இலங்கை அரச வியாபார (உழவு யந்திரம்) கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடன், சம்மாந்துறைத் தொகுதியில் உள்ள 16 விவசாயிகளுக்கு ஒரு விசேட வீலியில் எம். எப் 240 மாதிரி உழவுயந்திரங்களை வழங்குதல் சாத்தியமாகக் காணப்பட்டது. கமநல சேவைகள் நிலையத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ஷிபோரா, குபோட்டா உழவு யந்திரங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கவனத்திற்கெடுக்கப்பட்டு அவை முறையாகத் திருத்தப்பட்டன என்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

10. றிறெய்லர் :

கமநல சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பத்தியாளர்களின் உடன் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட றிறெய்லர்கள் ஆராயப்பட்டு, அவற்றின் குறைபாடுகள் உற்றுத் திருத்தப்பட்டன.

மிருகவளர்ப்பு

1. உணவு :

அரிசித் தவிடு, சோளம், கோதுமைத் தவிடு போன்ற வற்றின் விலை அளவுகளுடன் கோழித் தீனின் விலையும் மேலதிகமாக 29 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக 1980 மார்ச்சில் 1550 ரூபாவாக இருந்த கோழித்தீன் தற்போது ஒரு தொன் 3300 ரூபாவிற்கு விற்கப்படுகிறது. இது 112 சதவீத அதிகரிப்பிற்குச் சமமாகும். இவ்விலை அதிகரிப்பு சிறு பண்ணைகளை மூடுவதற்குக் காரணமாயிற்று. ஏனெனில் வருடத்தின் ஆரம்பப் பகுதியில் முட்டையின் விலையில் அதிகரிப்புக் காணப்படவில்லை. அரசாங்க வங்கிகளின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட கோழி வளர்ப்புத் திட்டமும் உணவு விலையில் ஏற்பட்ட அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டில் கடந்த சில மாதங்களாக முட்டையின் விலையில் படிப்படியான அதிகரிப்புக் காணப்பட்டது. இது கோழி வளர்ப்பினை இலாபகரமாக்கியுள்ளதுடன் சிறிய, நடுத்தர ஆட்களை இதனை மீண்டும் ஆரம்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. பாற்பண்ணை :

வி. அ. அ. சபையின் கீழுள்ள தொகுதிகளின் பாற்பண்ணை விவசாயிகள், பாற்சபையிடமிருந்து ஒரு பைந்து பாலிற்குப் பெறப்படும் விலை குறைவாக உள்ளதென முறையிட்டுள்ளனர். பால் உற்பத்தியாளர் தன்னால் விநியோகிக்கப்படும் பாலின் விலையில் அதிகரிப்பைப் பெறுதல் அதே வேளையில் கால்நடை உணவின் விலை 200 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

உயர்தர மேய்ச்சல் புல் நிலங்களின் முக்கியத்துவம் பற்றி பிரசாரம் செய்யப்படுகின்றது. இதன் மூலம் உற்பத்தியாளர் பால் உற்பத்தியில் ஏற்படும் செலவைக் குறைக்கலாம். தேசிய கால்நடை அபிவிருத்தி சபை, கமத்தொழில் திணைக்களம், மிருக உற்பத்தி சுகாதார திணைக்களம் ஆகியன தொகுதிகளுக்கு வர்க்க விருத்திப் பொருள் இருப்புக்களைத் தொடர்ந்தும் விநியோகம் செய்கின்றன.

3. கால்நடை நோய் சம்பந்தமான சேவை :

முழுமையான கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குருணாகல் மாவட்டத்தில் கால்நடை நோய் ரணசிகிச்சை நிபுணர்களுக்கு ஜீப் பெற்றுக்கொள்ளும் ஏற்பாடுகள் இலகுவாக்கப்பட்டுள்ளது. எப்படியிருப்பினும் ஏனைய மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் ரணசிகிச்சை நிபுணர்கள் குறைந்த போக்குவரத்து தொடர்பாக இன்னும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். குறைந்த வருமானமுள்ள விவசாயிகளுக்கு மலிந்த விலையில் மருந்துகளை வழங்குவதற்கென மாவத்தகமவில் ஒரு கால்நடை நோய்ச் சேவை மருத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

4. கால்நடை வர்க்கவிருத்தித் தாபனம் :

கால்நடை வளர்ப்போரின் தேவைகளைக் கவனிப்பதற்காக வி. அ. அ. சபையின் கீழுள்ள தொகுதிகளில் கால்நடை வர்க்க விருத்தித் தாபனம் தாபிக்கப்பட்டது.

5. கால்நடை விநியோகம் :

மின்சார சபையினால் ஏற்படுத்தப்பட்ட மின்சார வெட்டினால் கமத்தொழில் திணைக்களத்தின் கீழுள்ள பண்ணைகளில் முட்டை அடைகாப்பதில் ஒரு தடை ஏற்பட்டது. இந்நிலை தற்போது மாறியுள்ளதுடன் இப்பண்ணைகள் மீண்டும் ஒரு நாள் குஞ்சுகளை மீண்டும் வழங்குகின்றன.

நீர்ப்பாசனம்

நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளர் பல்வகைத் தாபனங்களின் இணைப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றியதுடன் நீர்ப்பாசனம் தொடர்பான விடயங்களில் ஒரு ஆலோசகராகவும் கடமையாற்றினர். தொகுதிகளை அவர் பார்வையிட்டபோது பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன :-

(அ) தலைவரின் தொகுதி விஜயத்தின்போது நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள்.

(ஆ) சிறு நீர்ப்பாசன வேலைகளில் முன்னேற்றம்.

(இ) பெரிய நீர்ப்பாசன வேலைகளில் முன்னேற்றம்

குறைபாடுகள், மந்தமான முன்னேற்றம், ஏனைய பாதிப்புக்கள் சம்பந்தப்பட்ட அதிகார சபைகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, உகந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்தும் எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டன. அத்துடன் துரிதமான வேலைகளுக்கான ஆலோசனையும் அளிக்கப்பட்டது.

விசேட திட்டங்கள் :

1. அநுராதபுரம் உலர்வலயத் திட்டம் : இத்திட்டத்தின் தற்போதைய நிலை குறித்துத் தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன், இத்திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கான சிபாரிசுகளும் செய்யப்பட்டன.

2. குருளுவெவ விவசாயத் திட்டம் : இத்திட்டத்தை செயற்படுத்தாமைக்கான காரணங்கள், இடம் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிக்கை தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

3. போவத்தென்னவிற்கு வெளியிலிருந்து ஆரம்பமாகும் கந்தலாம — குருளுவெவ பிரதான கால்வாயின் சட்ட மூலணை துவாரம் தொடர்பாக தீர்மானிப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்துவாரங்கள் தொடர்பாக தொண்ணூற்றிரண்டு புள்ளிகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக அதிகார சபைகள் கவனம் எடுத்தமையினால் குருளுவெவவிற்கு அதிகளவு நீர் தற்போது வழங்கப்படுகின்றது.

4. கம்சக்ஸ் குருகர் என்ற டென்மார்க் தாயனத்தின் சேவையினால், கொடுல்ல திட்டத்தின் 4,6 ஆகிய உயர் நிலப் பிரதேசத்தில் தரைக் கீழ் நீர் பற்றிய கண்டுபிடிப்புகள் பெறப்பட்டன. விளைவுகள் அனுகூலமாயிருக்கின்றதால் கிணறுகள் அமைப்பதற்கு வேண்டிய நிதிகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தலைவரினால் கிளிநொச்சித் தொகுதிக்கு மேற்கொள்ளப்பட்ட விஜயத்தின்போது சில பிரதேசங்களில் குடிநீருக்கு அவசிய தேவை ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இவ்விடயம் உடனடியாக கௌரவ கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சரின் மூலம் அதிஉத்தம ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதன் விளைவாக குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கும், பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நீர் இறைப்பு வசதிகளை அளிப்பதற்கும் நீர் வளங்கள் சபை உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மோசமாகக் கைவிடப்பட்டிருந்த முழங்காவில் மா. அ. ச. திட்டம் மீண்டும் பரந்தன் கமத்தொழில் திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவினூடாக செயற்படுத்தப்பட்டன. இதற்கான நிதி ஒதுக்கீடுகள் கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சினால் செய்யப்பட்டுள்ளன.

உரமும் விவசாய இரசாயனப் பொருட்களும்

ஏனைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்ளதுபோல் விரிவுபடுத்தப்படாத காணிகளுள்ள பகுதிகளைப் பொறுத்தவரையில் உரமும் விவசாய இரசாயனப் பொருட்களும் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றன. இவற்றைச் சேர்ப்பதன் மூலம் இப்பரப்புகளிலிருந்து உயர்ந்த உற்பத்தியினைப் பெற்றுக்கொள்ள முடியும். உர, விவசாய இரசாயனப் பொருட்களின் பிரதிப் பணிப்பாளர் நாட்டில் உர இறக்குமதியையும், விநியோகத்தையும் கொண்டு நடாத்துகின்றார். இவற்றின் மாதிரிகள் எடுக்கப்பட்டு, ஆராயப்பட்டு, இவ் ஆராய்ச்சிகளின் விளைவுகள் பின்னர் கமத்தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. போக்குவரத்துக் கஷ்டங்களால் எழும் சிலவற்றைத் தவிர பொதுவாக உரத்தினைப் பெற்றுக்கொள்ளல் பொதுவாகத் திருப்திகரமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வருடத்தில் உரத்தின் விலை இருதடவைகள் மீளப் பார்க்கப்பட்டது. இவ்வரை விலைகள் 18 மாதங்களிற்கு மேல் மாறாமல் இருந்தது. 1981 ஆம் ஆண்டு பெப்ரவரி 1 ஆம் திகதி 100 சதவீதத்தால் விலை அதிகரிப்பு ஏற்பட்டது. 1981, செப்டெம்பர் 16 ஆம் திகதியிலிருந்து மூப்பது

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை

வருடாந்த அறிக்கை 1981 உள்ளிடுகைகள் பிரிவு

சதவித மேலதிக அதிகரிப்பு ஏற்பட்டது. இவ் வருடத்தில் பலதடவைகள் அவதானிக்கப்பட்ட வேலை மூல தனம் கிடைக்கப் பெருமை, பயிரில் ஏற்பட்ட பொறியியற் பாதிப்புக்கள் ஆகியவற்றினால் அரச உர உற்பத்திக் கூட்டுத் தாபனம் அதன் உற்பத்தி நடவடிக்கைகளில் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

அரச சுரங்கக் கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத் தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட எப்பாவெல ரெக் பொசு பேற்று, இறக்குமதி செய்யப்பட்ட ரெக் பொசு பேற்றிற் குப் பதிலாகப் பயன்படுத்தப்படுவதற்கு, முதிர்ச்சியடைந்த தேயிலைச் செடிகளைப் பொறுத்தவரையில் முழுமையாகவும் முதிர்ச்சியடைந்த றப்பரைப் பொறுத்தவரையில் 50 சத வீதமும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் உர விநியோ கத்தை இலகுவாக்கும் நோக்குடன், பிராந்திய உர அமைப் புக்களைத் தாபிக்கும் திட்டமானது தற்போது செயற்படுத் தப்பட்டு வருகின்றது. வெலிகம உரத்தாபனம் 1982 மார்ச் சில் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கமத்தொழில் திணைக்களம், தேசிய உர அலுவலகம் என பன வவுனியா, அநுராதபுரம், குருணகல், அம்பாறை, பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை ஆகிய ஏழு மாவட் டங்களில் தேயிலை, றப்பர் பிரிவுகளில் உர விருத்தி இயக்கங் களை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்படடுள்ளது. சிறிய தோட்டச் சொந்தக்காரருக்குத் தேவையான தேயிலை, றப்பர், தெங்கு உரத்தினை வழங்குவதற்கான நடவடிக்கை கள் கமநல சேவைகள் நிலையத்தினால் எடுக்கப்பட்டுள்ளது.

நெல்லு சம்பந்தப்பட்ட உ. வி. தாபனத் திட்டம், ஆராய்ச்சி நிரூபணச் சோதனைகள், விளக்கங்கள் ஆகியன தொடர்பாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையின் கடன் திட்டங்கள் வி. அ. அ. சபை யின் கீழுள்ள தொகுதிகளினால் பயன்படுத்தப்பட்டன.

தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் வர்த்தக 'எப்சம்' உப்பு உற்பத்தியில் தற்போது ஈடுபட்டுள்ளது.

தேயிலைச் சிறு உடமைகள் அபிவிருத்தி அதிகார சபை, தேசிய உர அலுவலகம், தேயிலை ஆராய்ச்சி நிலையம் ஆகிய வற்றின் உதவியுடன் இவ்விருத்தி இயக்கத்தின் ஒரு பகுதி யாக முதிர்ச்சி அடைந்த தேயிலைத் தோட்டங்கள் தொடர் பாக காலி, மாத்தறை, கண்டி மாவட்டங்களில் விளக்கங்கள் நடாத்தப்பட உள்ளன.

இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தினால் ப. நோ. கூ. சங்கங் களுக்கும் க. சே. நிலையங்களுக்கும் வழங்கப்படும் கடனின் அளவானது அதிகரித்த உரவிலையுடன் சமமாக இருக்குமாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொகுதி விஜயங்களின்போது தேயிலை, றப்பர் பயிர் களின் சிறிய உடமையாளர்களுக்கு ஒரு கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தின் அது உற்பத்தியைத் தூண்டுவதுடன், அவர்கள் வருமானத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது அவதானிக்கப்பட்டது. இவ்விடயம் தோட்டக் கைத் தொழில் அமைச்சின் கவனத்திற்கெடுக்கப்பட்டு அரச வங்கி கள், றப்பர் ஆராய்ச்சி நிலையம், தேயிலை சிறு உடமை அபி விருத்தி அதிகார சபை, தேசிய உர அலுவலகம் ஆகியவற் றின் இணைப்புடன் தேயிலை, றப்பர் சிறு உடமையாளர்களுக் காக ஒரு கடன் திட்டம் தயாரிக்கப்பட்டுவிட்டது. ஊவா மாகாணத்தில் சந்தைப்படுத்தப்பட்ட காய் கறி கலவைகள், யூரியாவில் தங்கியுள்ள உரமீக் கிழங்கு ஆகியவற்றின் தரத் தைப் பேணுவதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. விளைவுகள் குறித்துத் தொடர்புடைய அதிகார சபைகளுக் குக் கூறப்பட்டது.

விவசாய இரசாயனப் பொருட்கள் :

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விவசாய இரசாயனப் பொருட்களின் அவசியத் தேவையைத் திருப்திப்படுத்து வதற்கான பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, மேற் கொள்ளப்படுகின்றன. முறையற்ற பாவனையினால் உருவாகும் எதிர் விளைவுகள் தரம்குறைந்த செயல்முறைகள் ஆகியன தொடர்பாக விவசாய முகாமையாளர்கள் விழிப்புடன் இருக்கின்றனர்.

கடனும் காப்புறுதியும்:

விவசாயக் கடன், இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட விவசாயத் தேவைகளைக் கொள்வனவு செய்யும் சக்தியை அளிக்கின்றது. அரசாங்க வங்கிகளினால் அளிக்கப்பட்ட உத விக்குப் பதிலாக, அநேகமான கடன் பெற்றோர் அவற்றை மீளச் செலுத்துவதில் தவறியுள்ளனர். மீண்டும் அரசாங்க வங்கிகளை அணுகுதலைத் தவிர்க்கும் முகமாக இவ்விவசாயி கள் அதிக வட்டியுடைய தனிப்பட்ட கடன் கொடுப்போ ரிடம் செல்கின்றனர். கடனை மீளச் செலுத்தத் தவறியவர் களை மீண்டும் பண்ணைக் கடனுள் கொண்டுவருவதற்கான முயற்சிகள் விவசாயத் தலைவர்கள், பயிர்ச்செய்கை உத்தி யோகத்தர்கள் ஆகியோரினூடாக எடுக்கப்பட்டு காலயோகத் தின்போது குறிப்பிட்டளவு வெற்றியும் ஏற்பட்டது. இம் முயற்சியில் வெற்றியடைய ஏனைய தொடர்புடைய தாபனங் களும் தம் முழு அளவிலான உதவியை அளிப்பார்கள் என நம்பப்படுகின்றது.

1979 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க வங்கிகளுடன் இணைந்து இவ்வதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு விசேட திட்டம் இவ்வருடத்தில் வெற்றிகரமாக நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது. எமது விவசாய முகாமையாளர் கள், விவசாயிகளுக்கு இத்திட்டம் பற்றியும், அரசாங்க வங்கிகளில் உள்ள ஏனைய திட்டங்கள் பற்றியும் அறியச் செய்யும் முகமாக ஒரு விசேட முயற்சியை எடுத்துள்ளது. நீர்ப் பம்பிகள், தெளிகருவிகள், இரண்டு சக்கர உழவு யந்திரங்கள் தொடர்பான கடன்களை மீளச் செலுத்துதலில் அவதானிக்கும் அதேவேளையில், கடனை மீண்டும் செலுத்தத் தவறியவர்கள், அவற்றைச் செலுத்துமாறு வற்புறுத்தப்படு கின்றனர்.

கடனை மீளக் கொடுப்பதில் கவனம் செலுத்தத் தவறிய இரு தொகுதிகளிலுள்ள ஆட்களின் பொருட்களைப் பறி முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இத்தகைய சகல கடன் கொடுக்கத் தவறியவர்களின் பொருட்கள் பறி முதல் செய்யப்பட்ட ஒரு கிழமைக்குள் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இது எமது விவ சாயிகள் இவ்விதம் ஏமாற்றுவதில் பழக்கமுள்ளவர்கள் என் பதையும் அவர்களிடம் கடனை மீளச் செலுத்துவதற்குப் பணம் இருக்கும்போதும் இவ்வாறு ஏமாற்றுகிறார்கள் என் பதையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. எனவே அவர்

களுக்கு விவசாயக் கடன் தொடர்பாக ஒரு நல்ல அறிவை மனதில் பதியச் செய்தல்மிகவும்அவசியமாகும்.

தெங்குக் கைத்தொழில் அமைச்சின் இணைப்புடன் வி. அ. அ. சபையின் கீழுள்ள தொகுதிகளில் தெங்கு உரக் கடன் திட்டமானது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இக்கடன்களை வழங்குதலுடன் இணைந்து அவற்றை மீளப் பெற்றுக்கொள்ளலும் தொடர்ந்து நடை பெற்றுவருகின்றது. சில தெங்குச் செய்கையாளர்கள் இவ் வசதிகளுக்குப் பதிலாக, இம்முக்கிய விவசாயத் தேவை யைத் தொடர்ந்தும் புறக்கணித்து வருகின்றனர். கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட பாற்பண்ணைத் தொழில் தொடர்பான ஒரு விசேட கடன் திட்டம் தற்போது தெனியாய தொகுதியில் வெற்றிகரமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதே தொகுதியில் இவ்விதமான இன்னுமொரு திட்டம் இலங்கைப் பெண்கள் இயக்கம், அரச வங்கிகள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இலங்கை வங்கியானது 1982-ம் ஆண்டள வில் இலங்கை முழுவதிலும் பாற் பண்ணைத் தொழில் தொடர்பான கடன் திட்டத்தை விரிவுபடுத்தத் தீர்மானித் துள்ளது.

